WWW.AKARAM.EU

இலவச தமிழ் மாத இதழ்



AKARAM

# அகரம்

14.11.2017 - 13.12.2017

சுவடி: 6.07 திருவள்ளுவர் ஆண்டு 2048 ISSN 2195-6480




## மறப்போமா மாவீரர் தியாகத்தை
## துறப்போமா தமிழ் ஈழக் கனவை?

FREE CIRCULATION:
GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA


SINCE 2003
S.K. Silks & Gold Paradise
உங்களோடு நாம்...
உங்களுக்காக நாம்...
உங்கள் வீட்டு மங்களவைபவங்களோடு
நாம்...
அனைத்துவிதமான
மங்களவைபவங்களுக்குமான
மல்லிகைபூமாலை முதல் மணபெண்
அங்காரமாலை வரையில் எம்மிடம்
கிடைக்கும்.
கூறைச்சேலை எடுத்தால்
மணபெண்ணுக்கான பிளவுஸ் இலவசமாக
தைத்துதரப்படும்.
மாபெரும்
ராஜமுத்திரை
அனைத்தும்
புதிய வரவுகள்
தரமான அழகிய
சேலைகள், பஞ்சாபிகள்!
Adler Str. 33, 44137 Dortmund
Tel: 0231 9501647 Fax: 0231 9501648

புதிய வரவு

ஐரோப்பாவிற்க்கான புதிய சேவை

ortel MOBILE







**19,99€ [15)] /4 Wochen**

# ஒரே SIMல் இருந்து...

## 300 நிமிடங்கள் ஒரு மாதத்திற்கு பேசலாம்.

## 3GB இன்ரர்னெற்றும் பாவிக்கலாம்.

ஒரு மாதம் முடிவதற்குள்ளேயே 300 நிமிடங்கள் முடிந்தாலும்,

அதன் பிறகு 9 சென்ற் நிமிடத்திற்கு கணக்கிடப்படும்.

3GB முடிந்தால், மீண்டும் 9 யூரோவிற்கு பெறலாம்.

**19.99 யூரோவுக்கு ஐரோப்பாவின் எந்த நாட்டிலும் இருந்தபடி ஐரோப்பா முழுவதும்**




- 300 Minuten in Deutschland & in 50 weitere Länder
- Internet Flat 3 GB
- Surfen&Telefonieren in der EU
- On-Net Flat (deutschlandweite Nutzung)

www.ortelmobile.de

Ortel. In über 220 Länder sprechen. Powered by e·plus+



# அகரம்

மாதாந்த இதழ் - Monthly Magazine


13. கார்த்திகை - 14. மார்கழி 2017
சுவடி / Issue: 6.07



தலைமை ஆசிரியர்:
திரு. த. இரவீந்திரன்

உதவி ஆசிரியர்:
திரு. வன்னித்தம்பி

ஆசிரியர் குழு:
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்னசிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜேர்மனி)

நிழற்படப்பிரிவு:
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

ஒப்பு நோக்குனர்:
திரு. அர்ஜுன் (ஜேர்மனி)



தொடர்புகளுக்கு:
European Tamils Union e.V.
PO. BOX 4153, 59037 Hamm
Germany
Tel: 00 49 23 81 98 77 897
Fax: 00 49 23 81 95 66 10
Email: *editor@akaram.eu*



ISSN 2195-6480

www.akaram.eu



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


## நுழைவாயில்...

அகரம் வாசக அன்பர்களுக்கும் விளம்பரதார வள்ளல் பெரு மக்களுக்கும் வணக்கம்.

இது தமிழ் ஈழ மக்களின் காவல் தெய்வங்களாக தம் வாழ் நாளெல்லாம் எதிரிகளோடு போராடியும் வீர தீர சாகசங்களைப் புரிந்தும் வரலாறு படைத்த எமது உறவுகளை நன்றியோடு நினைவு கூரும் மாதம். எம் இனத் துரோகிகளின் நய வஞ் சகத்தாலும் பேராசை பிடித்த உலக வல்லரசுகளாலும் துடிக்கத் துடிக்கக் கொத்துக் குண்டுகள்,மற்றும் எறிகணை மழையாலும் அழிக்கப் பட்ட எமது மக்களையும் மாவீரர்களையும் காலமெல்லாம் கண்ணீர் அஞ்சலியால் குளிர வைக்க வேண்டிய மாதம்.

ஆனால் அப்படி அவர்களை எமது மக்களும் வருங்காலச் சந்ததியும் தமிழ் இன அழிப்பு என்கிற செய்தியை வரலாற்றில் நினைவில் நிலைத்து நிறுத்தி விடக் கூடாது என்பதற்காகவே கடந்த 8 ஆண்டுகளாக எமது பகைச் சக்திகள் படாத பாடு பட்டு வருகின்றன. அடிக்கடி இறந்தவர்கள் எல்லாம் பயங்கர வாதிகளும் அவர்களால் மனிதக் கேடயங்களாக கொலைக் களத்தில் புலிகளால் வைக்கப் பட்டவர்கள் என்று திரும்பத் திரும்ப பேசி வருகின்றனர்.

பொய்களை அப்படித் திரும்பத் திரும்பப் பேசினால்தான் அவற்றை உலகம் உண்மை என ஏற்றுக் கொண்டு விடும் என்ற கோட்பாட்டில் அவர்கள் அப்படித்தான் செயற்படுவார்கள். எமது இனத்துக்கு இழைத்த அநீதிக்கு நீதியைப் பெறுவதற்கு நாம்தான் போராட வேண்டி உள்ளது. இது உண்மைக்கும் பொய்க்கும் இடையே நடத்தப்படும் பெரும் பிரச்சாரப் போர். இது எமது அறத்துக்கான போர். அறம் தோற்று விடக் கூடாது. அப்படி அறம் தோற்கடிக்கப் பட்டால் அது முள்ளி வாய்க்கால் படுகொலைகளை விட மிக மோசமான குற்றத்தை எம் இனத்துக்கு இழைப்பது போல் ஆகி விடும்.

இந்த அறப் போரில் நம் இனம் தோற்று விடக் கூடாது. ஏனென்றால் தமிழினம் ஒரு அறம் சார்ந்த வரலாறு படைத்த இனம். மானத்துக்காக உயிரையும் கொடுத்த இனம். இதனை முள்ளி வாய்க்கால் மக்களும் போராளிகளும் தேசியத் தலைவரும் உலகத்தின் கண் முன்னே நடத்திக் காட்டி விட்டுத்தான் தாய் மண்ணில் வித்தானார்கள். அவர்களின் காவிய வாழ்க்கை எங்கள் காரியக்காரர் காசுக்காக தாய் மண்ணை விற்கும் விபச்சார அரசியல் வாதிகளின் சுய நலத்தால் களங்கப் பட்டுப் போக விட முடியாது.

எம் இனத்தைப் பயங்கரவாதிகள் எனவும் அதற்கு எதிரான

அரசுகளின் போரில் மடிந்தவர்கள் மனித உரிமை மீட்புப் போரில் பலியான தற்செயல் நிகழ்வு என்றும் வரலாற்றில் பதிவு செய்துவிட கொலையாளிகள் முயல்கிறார்கள். ஈழத் தமிழன் எவனும் அத்தகைய வரலாற்று மோசடிகளுக்கு ஆதரவாக இருந்துவிட முடியாது. அப்படி இந்தத் தலைமுறை அதனை முறியடிக்காமல் விட்டு விட்டால் நாம் எமது தலைமுறை தலை முறைக்கும் பழியைத் தேடி வைத்தவர்களாக பார்க்கப் பட்டு இதே இனத் துரோகிகளின் பழிகளுக்கு உடன்பாடு கொண்டவர்களாக வரலாற்றில் இடம் பெற்று விடுவோம்.

போர் குற்றமோ மனித உரிமை மீறலோ நடக்க வில்லை அவற்றுக்கு எல்லாம் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் புலிகளும் அவர்களுக்கு நிதி உதவி வழங்கிய புலம் பெயர் தமிழர்களுமே என்ற வாதத்தையை மெய்பிக்க இலங்கை இந்திய அமெரிக்க ஐரோப்பிய அரசுகளும் அவர்களின் எடுபிடிகளாக மாறி விட்ட எமது தமிழ் அரசியல் தலைவர்களின் தலையால் கிணறு வெட்டுகிறார்கள்.

அதன் ஒரு சதிதான் இந்த நல்லாட்சி அரசின் உருவாக்கமும் அது நடத்தும் புதிய அரசமைப்புச் சட்டவாக்கமும். சம்பந்தன் கொம்பனி சர்வ தேச ஆதரவுடன் தமிழர்களுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுவிட முடியும் அதனால் போர்க் குற்ற விசாரணை போன்ற அவர்களுக்கு ஏற்க முடியாத விடயங்களைப் பேசி கிடைத்துள்ள நல்ல தருணத்தைப் பாழாக்கி விட முடியாது என்ற சாத்தான்களின் வேதத்தை ஓதிக் கொண்டிருக்கிறனர்.

அதன் ஒரு வெளிப்பாடாக அரசமைப்பு சட்டத்தில் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாக சில கோரிக்கைகளை பட்டியல் போட்டு விட்டு முடிவில் அனைத்தையும் கழுவி ஊத்தி விடுவது போல்," இரு பெரும் கட்சிகளும் இணைந்து ஒரு தீர்வைத் தருவார்கள் என்றால் அதனை த.தே.கூ. ஏற்கும்", எனக் கூறியதன் மூலம் தமிழ் மக்களின் பூரண சரணாகதியைப் பட்டயம் போட்டுக் கொடுக்கும் வாக்குறுதியை வழங்கி உள்ளது."

இப்படியான ஒரு முடிவுக்கா 72 வருடமாகத் தமிழினம் பட்ட பாடுகளும் இழந்த இழப்புகளும் சிந்திய வியர்வையும் இரத்தமும் பலியான இலட்சக் கணக்கான உயிர்களும் விலையாகக் கொடுத்தோம் ?

சம்பந்தனைப் பொறுத்த வரை இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா வின் "ஒற்றை ஆட்சியையும் பௌத்த மத முன்னுரிமையை ஏற்கும் சம்பந்தன் போன்ற தலைவர்கள் இனிமேல் தமிழ் மக்களிடையே இருந்து வரமாட்டார்" எனப் புகழாரம் சூட்டி இருப்பது தமிழ் மக்கள் பெற்ற வரமா? சாபமா?

இப்ப வருமோ எப்ப வருமோ எனப் பேசப்பட்ட அரசமைப்பு திருத்தச் சட்டம் வாற மாதிரியும் வராத மாதிரியும் தெரிகிறது. வந்திருப்பது வெறும் மாதிரி வரைவாம் அசல் அடுத்து வருமாம் அதற்கு அனைத்து கட்சிகளும் ஒப்புதலும் பெறப்படுமாம். இப்படி தமிழ் மக்களுக்கு சில அரசியல் வாதிகள் சொல்லி வருகிறார்கள். அப்படியானால் இப்ப வந்தது என்ன பிள்ளையா பிண்டமா ஆணா பெண்ணா அலியா?

எங்கள் ஏகத் தலைமைக்கு எந்தக் குழப்பமும் கிடையாது. மக்களை குழப்புவதுதான் அவர்கள் செய்து வந்த அரசியல்.அந்த அரசியலுக்கு இப்படியான குழப்பம் தேவையானதே..
பாராளுமன்றத்தில் சம்பந்தனும் சுமந்திரனும் பேசிய அனைத்துமே கைதட்டி ஆரவாரம் செய்ய வைக்கும் அற்புத பேச்சுகள் எவரையும் முட்டாள்களின் சொர்க்கத்தில் வைக்க வல்ல திறமை மிகுந்த பேச்சுகள். பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடையில் என்பது போல குழப்பமாக இருக்கிறது எமது கதை.

இவற்றை எல்லாம் பார்க்கும் பொழுது நாம் எப்படி இத்தகைய உலக மகா சதிகளில் இருந்து எம் இனத்தையும் தாய் மண்ணையும் வருங்காலச் சந்ததியையும் பாதுகாக்க முடியும்? என்பதை கண்டறிய வேண்டும். வரலாற்றால் முதன்மையான தொன்மையான இடத்தை வகிக்கும் தமிழ் ஈழமும் தமிழ் இனமும் தமிழ் மொழியும் எதிரிகளின் திட்டமிட்ட அழிப்பிலிருந்து காப்பாற்றுவது பற்றி தெளிவாகச் சிந்தித்து செயற்படுவோமாக.

மீண்டும் நலமுடன் உங்களைக் காண விருப்பி விடைபெறும்,?

அன்புடன்,
அகரம் குழுமம்.

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு

## தமிழ் இன விரோத அரசியலை கைவிடவேண்டும்.!

த.எதிர்மன்னசிங்கம்






த.தே.கூ. அங்கீகாரம் பெற்ற பேச்சாளர் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரா?

கதை இப்படிப் போனால் தமிழனின் கதி கந்தலாகாமல் வேறு என்ன வாகும்? புலம் பெயர் இணையம் ஒன்றில் வெளியான செய்தி மேற்குறித்த ஐ.தே.க. உறுப்பினர் அட்டைப் படத்தை வெளிட்டுள்ளது. அவர் ஐ.தே.க. உறுப்பினராக இருப்பது ஒன்றும் பாவம் இல்லை. ஆனால் திருமதி.விஜகலா போல நேர்மையாக அதே கட்சியில் போட்டி போட்டுத் தெரிவாகி இருந்தால் அவருடைய கஜேந்திர குமார் பொன்னம் பலம் அணியினர் மக்களால் நிராகரிக்கப் பட்டவர்கள் என்பதாக அவர் தெரிவிக்கும் நச்சுப் பிரசாரங்களை யாரும் ஏற்றுக் கொள்ள முடியும்.

இது அவருடைய நேர்மைக்கும் கண்ணியத்துக்கும் விடுக்கப் பட்ட சவாலாகவே அகரம் பார்க்கிறது. எமது இந்தப் பார்வை தவறாக இருந்தால் அதனை மறுக்கும் அவரது எந்த ஒரு எழுத்து மூலமான விளக்கத்தையும் அகரம் வரவேற்று தனது இதழில் பிரசுரிக்கும் என்ற வாக்குறுதியை வழங்குகிறது.

இந்தச் சுமந்திரன் தமிழினத்தை அழிக்கும் சிங்கள இனவாதக் கட்சியின் உறுப்பினராக இருந்த படியே அழிக்கப் படும் இனத்தின் பாதுகாப்பதாகக் கூறிக் கொள்ளும் கட்சியின் மக்கள் பிரதிநிதியாக எப்படியாக எப்படியான அரசியல் செய்கிறார் என்பது தெரியவில்லை.

இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமையின் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல் செயற்பாடுகளை அகரம் மட்டுமே விமர்சித்து பலரின் கண்டனத்துக்கு உள்ளான காலம் மலை ஏறிவிட்டது. இன்று ஈழத்தில் பொது மக்களே தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமையை நார் நாராகக் கிழித்து துவைத்து காயப் போடும் காட்சிகளை ஈழத்தின் பல காணொளிச் செய்திகள் பல மாதங்களாக வெளி வருவதைக் காண்கிறோம்.

மேலும் மாணவி வித்தியா மீதான பாலியல் வன்கொடுமைகளும் படு கொலையும் தொடர்பான வழக்கில் தமிழரசுக் கட்சியின் தலைவர் உட்பட வேறு முக்கிய தமிழரசுக் கட்சிப் பிரமுகர்களும் நீதி மன்றத்தால் கண்டிக்கப் பட்ட நிலையில் தமிழரசுக் கட்சி தலைமை தாங்கும் தமிழர் தேசியக் கூட்டமைப்பு இன்று உள்ளது என்ற கள யதார்த்தத்தை கூட்டமைப்பு மட்டும் அல்ல, அதன் அப்பாவி உறுப்பினர்களும் கட்சித் தொண்டர்களும் ஏற்க மறுக்கும் நிலையே தொடருகிறது.

காலத்துக்குக் காலம் இது போன்ற கட்சியின் தவறுகளைச் சுட்டிக் காட்ட முனைந்த அனைவருமே கட்சித் தலைமையில் காணப்பட்ட சில குறைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்தி கட்சியையும் மக்களையும் பாழடித்த பல நிகழ்வுகளை கடந்த காலக் கட்சியின் வரலாற்றில் காண முடியும்.

முதலாவதாக தமிழ்க் காங்கிரஸிலிருந்து திரு. செல்வநாயகமும் திரு.வன்னிய சிங்கமும் தமிழ் அரசுக் கட்சியைத் தொடங்கிய பொழுது அதனால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களையும் கட்சிப் பிளவால் மக்கள் பலம் விரையமாகும் என்ற உண்மையை அதனால் சிங்களம் அடையப் போகும் நன்மையை தொலை நோக்குப் பார்வையுடன் உய்த்து அறியும் பகுத்தறிவை ஜீ.ஜீ. செல்வா உள்ளிட்ட அனைவரும் தவறி விட்டனர்.

அவற்றை சரியாக மதிப்பீடு செய்து கட்சி பிளவு படக்

கூடாது என்று போராடிய அனைவரும் புறந்தள்ளப் பட்டு கட்சி உடைந்து இரண்டு கட்சிகளாக ஆனது அன்றைய தமிழ் காங்கிரஸ் கட்சி. இத்தனைக்கும் செல்வாவையும் வன்னிய சிங்கத்தையும் அரசியலுக்கு இழுத்து வந்தவரே ஜீ.ஜீ. பொன்னம்பலம்தான். அன்று முதல் இரு கட்சிகளும் பொது எதிரியான சிங்கள இனவெறி அரசுகளை எதிர்ப்பதை கைவிட்டு தமக்குள்ளே போராடுவதையே அரசியலாக மேற் கொண்டனர்.

செல்வா மக்கள் போராட்டம் என்றால் ஜீ.ஜீ. வட்ட மேசை மகாநாடு மூலம் சிங்களத்திடம் பேச்சு வார்த்தைகள் நடத்தி எமது உரிமைகளைப் பெற வேண்டும் என்பார். போட்டி தீவிரமாகி இரு தரப்பும் தனித் தனியாக சிங்களத்திடம் கோரிக்கை வைத்து கடைசியில் குரங்கு அப்பம் பங்கு போட்ட கதையாகி தமிழரின் அனைத்து உரிமைகள் வளங்களையும் சிங்களமே எடுத்துக் கொண்டு விட்டது.

இந்த இரு கட்சிகளும் போட்ட கோமாளிக் காட்சி ஒன்று 1965 இடம் பெற்றது. அன்று பொதுத் தேர்தல் முடிந்து டட்லி தனித்து ஆட்சி அமைக்க முடியாத நிலையில் செல்வாவின் தயவை நாடினார். டட்லி செல்வா ஒப்பந்தம் உருவாகி தேசிய அரசாங்கம் அமைக்கப் பட்டு காங்கிரஸம் தமிழ் அரசுக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்த அரசாங்கம் உருவாக்கப் பட்டது.

அரசுப் பயணமாக டட்லி யாழ் வருகிறார். அவரை வரவேற்கப் பலாலி விமான நிலையத்தில் அவரோடு யார் காரில் பயணிப்பது என்ற சண்டை விமான நிலையத்திலேயே நடத்தி இரு கட்சிகளும் தமது போட்டி அரசியலைக் காண்பித்தனர். அவர்களது போட்டி மக்களின் தேவைகளைப் பெற்றுச் சாதனை படைப்பதில் காணப்பட வில்லை. மாறாக யார் முதலில் சிங்களத்தின் காலில் விழுவது என்பதிலே குறியாக இருந்தது.

இவர்களின் மற்றொரு சாதனையாக தமிழரசுக் கட்சி திரிகோணமலையில் ஒரு தமிழ் பல்கலைக் கழகம் என்று கோரிக்கை வைத்தது. இல்லை தமிழருக்கு ஒரு இந்துப் பல்கலைக் கழகம்தான் வேண்டும் என்றார் ஜீ.ஜீ. திரிகோணமலையில் தமிழ் பல் கலைக் கழகம் உருவாகி இருந்தால் இன்று திரிகோணமலை ஓரளவாவது சிங்களமயப் படுத்தலில் இருந்து தப்பித்திருக்க முடியும். தமிழருக்கும் ஒரு பல்கலைக் கழகம் புதிதாக கிடைத்திருக்கும்.

ஆனால் ஏற்கனவே சேர் பொன் இராமநாதனின் அறக் கட்டளையால் உருவாகி இருந்த யாழ். பரமேஸ்வராக் கல்லூரியும் இராமநாதன் மகளிர் கல்லூரியும் யாழ் பல்கலைக் கழகம் எனவும் இராமநாதன் இந்துக் கலாச்சாரப் பல்கலைக் கழகம் எனவும் குரங்கு அப்பம் பங்கிட்ட கதையாகி அவற்றைச் சிங்களம் தனதாக்கி விட்டது. இன்று யாழ் பல்கலைக் கழகம் சிங்கள மயமாகி விட்டது.



தமிழரின் விடுதலைக்காகப் போராட 30 குழுக்களுக்கு அதிகமாக உருவாகின. அவற்றில் தமிழரசுக் கட்சியும் அதாவது அமிர்தலிங்கமும் பிரபாகரனின் கை ஓங்கி விடக் கூடாது என்பதற்காக ஒரு குழுவை உருவாக்கினார். இன்று எல்லாமே பெரும் சோகத்தில் முடிந்து விட்டன. அதற்கான தார்மீகப் பொறுப்பையும் ஏற்காது அந்நிய அரசுகளின் அதிகாரம் அளிக்கப் பட்ட அரசியல் தரகர்களாகவும் தமிழ் அரசுக் செயற்படுவதைக் காண்கிறோம்.


2010ல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் போரை நடத்த ஆணையிட்ட மகிந்த ராஜபக்ஷ கொடியவன் எனக் கூறி போர்க் களத்தில் தமிழ் மக்களை செம்மணி தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையும் கொன்று அழித்த இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு தமிழ் மக்களை வாக்களிக்க சொன்ன த.தே.கூ. தலைவர் சம்பந்தன் தமிழ் மக்களுக்கான அரசியல் செய்கிறாரா அல்லது இந்திய அரசின் அரசியலைச் செய்கிறாரா? அப்படிப் பட்ட ஒருவர்தான் தமிழரின் தலைவனாக இருக்க வேண்டுமா?

அவரும் அவருடைய அணியினரும் இப்போ இந்தியா அமெரிக்கா போன்ற அரசுகளின் கால்களில் பளிச்சிடும் சப்பாத்துகள் போன்று தமது வாக்களர்களையே ஏறி மதித்து நசுக்கி அரசியல் செய்கிறார்கள். இவர்கள் ஏறி மிதித்து மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் கொல்லப் பட்ட மாவீரர்களின் கல்லறைகளும் உயிருக்காகப் போராடும் அப்பாவித் தமிழ் மக்களும் என்பதை உணர முடியாத அளவுக்கு மனிதாபிமானம் இல்லாத தலைவர்களாக உலவுகிறார்கள். முதலில் தமிழ் மக்கள் இவர்களிடம் இருந்து விடுதலை பெறப் போராட வேண்டிய காலமாக இது உள்ளது.

தமிழரசுக் கட்சியும் அது தலைமை தாங்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஒரு தனியார் கொம்பனி போல எவருக்கும் தெரியாமல் முடிவுகளை எடுப்பதும் அவற்றை எல்லாரும் ஏற்று கட்டுப் பட்டு அடங்கி நடக்க வேண்டும் என அதிகாரம் செய்வதும் அன்றாடக்

காட்சிகளாக மாறி விட்டது. அக்கட்சிக்காக யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரும் அவரது வழிகாட்டலில் யாழ் பல் கலைக் கழகம் உள்ளிட்ட பல கல்வியாளர்கள், அச்சு மற்றும் மின் ஊடகங்களையும், கம்ப வாரிதி போன்ற போலி ஆன்மீக வாதிகள் இலக்கிய வாதிகள் அரசியல் வாதிகள் சமூக நல ஆர்வலர்களையும் இன்று மக்களிடையே மிகப் பெரும் பிரச்சாரப் போரை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

இதன் வெளிப்பாடாக மகாத்மா காந்தி ஜயந்தி சர்வ தேச அகிம்சா தின விழாவை யாழ் மண்ணில் இந்தியத் துணைத் தூதுவர் நடராஜன் நடத்திக் காட்டி உள்ளார். எந்த யாழ் மண்ணில் விடுதலைப் புலிகளின் தளபதி தியாகி திலீபன் 1987ல் காந்தீய வழியில் நீரும் அருந்தாமல் உண்ணா நோன்பு இருந்து தனது இன்னுயிரைப் பலி கொடுத்து மடிந்தானோ? எந்த இந்தியாவின்; தூதுவர் டிக்ஷித் திலீபனின் மரணத்தை ஏற்படுத்தி பெரும் மனித அவலத்தை ஏற்படுத்தினார்கரோ ? அதே மண்ணில் அகிம்சாவாதி மகாத்மா காந்தியின் ஜயந்தி விழாவை அதே இந்தியாவும் அதன் யாழ் துணைத் தூதுவர் நடராஜனும் இந்த விழாவை நடத்தியது எத்தனை பெரிய அவலம் ?



அந்த விழாவில் தமிழரசுக் கட்சி தலைவர் உட்பட பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்து காந்தீயத்தையும் ஈழத் தமிழரின் தன்மானத்தையும் குழி தோண்டிப் புதைத்ததை உலகமே கண்டது.எமது தலைவர்கள் இப்படியான பொறுப்பற்ற அரசியல் நடத்தி எமது இன அழிப்புக்கு உதவியும் அதற்கான நீதி விசாரணையோ பாதிக்கப் பட்ட மக்களுக்கான நிவாரணங்களோ பெற்றுக் கொடுக்காமல் இலங்கை இந்திய அமெரிக்க அரசுகளின் அரசியலை மட்டுமே செய்வதை இனிமேலாவது நிறுத்த வேண்டாமா?


லாசப்பலில் அதிகமான தமிழ் மக்களால் நாடப்படும் இறைச்சிக்கடை

ASI Boucherie
PARIS-FRANCE

வாடிக்கையளர்கள் அதிகம் ஆனதால் தினமும் புதிய இறைச்சிகள்

தமிழ் வாசம் வீசும் ஐரோப்பிய இல்லங்களில் எல்லாம்
இப்பொழுது ஆசி, இறைச்சிக்கடையின் இறைச்சிக்கறி வாசமும்
ஆம்! ஐரோப்பிய நாடுகளில் இருந்து பாரிஸிற்கு வருபவர்கள்.
சுவையான இறைச்சி உண்பதற்காக, ஆசி இறைச்சிக்கடையில்
மொத்தமாக இறைச்சி வாங்கிச் செல்கின்றார்கள்!
அன்பான வரவேற்ப! தினமும் பதிய இறைச்சி வகைகளே விற்கப்படுகின்றது.
இது எப்படி சாத்தியமாகின்றது? தரமான இறைச்சியே விற்கப்படுவதால் வாடிக்கையாளர்களோ அதிகம்.

வாடிக்கையாளர்கள் அகரம் இதழைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்

ஆடு முழுதாகவோ அல்லது அரையாகவோ
கிலோ 4,20€

தினமும் ஆட்டுப்பங்கு

195, rue du Fbg. St-Denis
75010 Paris, Tél.: 01 42 05 23 78
M°: Lachapelle ou Gare du Nord

# ImmoFinance
## Suisse GmbH






Contact :
**Selvaratnam Mathan**

- புதிய வீடுகள் கட்டுவதற்கான ஆலோசனைகளுடன் அனைத்து சேவைகள்
- வீடுகளை வாங்கவும், விற்கவும் உதிவிகள், ஆலோசனைகள்
- சுவிசின் அனைத்து முன்னணி காப்புறுதி நிறுவனங்களினூடாக காப்புறுதி
- முன்னணி வங்கிகளினூடாக வீட்டுக்கடன்



076 303 22 16
mathan@gmx.ch




சண் தவராஜா

# ஈழத் தமிழர் மரபுரிமை அடையாளங்கள் - ஒரு பார்வை

சுவிற்சர்லாந்து தமிழ்க் கல்விச் சேவை வெளியிட்ட சிரேஷ்ட பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் எழுதிய 'ஈழத் தமிழர் மரபுரிமை அடையாளங்கள்' என்ற நூலை அண்மையில் பார்க்கக் கிடைத்தது. உலகத் தமிழ் மக்களின் வாழ்வியலில் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஏற்படுத்திய தாக்கங்கள் ஏராளம். அதில் ஒன்றாக உலகத் தமிழ் மக்களின் பெருமைகளை நிலைநிறுத்த எடுக்கப் படுகின்ற முயற்சிகளையும் தங்கள் வரலாற்றைப் பதிவு செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும் கொள்ள முடியும். அழிந்து போகக் கூடிய மொழிகள் என ஐக்கிய நாடுகள் சபையால் வகைப்படுத்தப்பட்ட மொழிகளுள் ஒன்றான தமிழ் மொழியைக் காப்பதிலும், அதனைப் பேணுவதிலும் காட்டப்படுகின்ற ஆர்வம் வரவேற்கத்தக்கது.

எனினும் தமிழர்தம் வரலாறு முறையாகப் பதிவு பண்ணப் படுகின்றதா? விஞ்ஞான பூர்வமான அணுகுமுறைகள் அதில் பின்பற்றப் படுகின்றனவா? என்ற கேள்விகள் அறிஞர்கள் முதல் சாமானியர்கள் வரை எழுப்பப் படாமல் இல்லை.

'எமது மொழி, எமது பண்பாடு, எமது கலாசாரம்' என்னும் பெருமித உணர்ச்சி காரணமாக ஒருவர் சற்றே மிகைப் படுத்தப்பட்ட சொல்லாடல்களைப் பாவிப்பதைப் புரிந்து கொள்ள முடியும். அதுவே அளவுக்கு அதிகமாகி விட்டால் கூறுவதன் உண்மைத் தன்மை தொடர்பில் சந்தேகம் எழத் தொடங்கிவிடும். இன்று சமூக ஊடகங்களில் அதிகம் உலாவரும் தமிழர் பெருமை கூறும் செய்திகள் இத்தகையதாகவே இருந்து வருவதைக் காண முடிகின்றது.

ஆர்வக் கோளாறு காரணமாக அவ்வாறான பதிவுகளை மேற்கொள்வதை யாரும் தடுக்கவோ திருத்தியமைக்கவோ முடியாது. ஆனால், புலமையாளர்கள் மேற்கொள்ளும் அவ்வாறான பதிவுகள் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களாக மாறி, நாளைய சந்ததிக்கான சரித்திரமாக ஏற்றுக் கொள்ளப்படும் அபாயம் உருவாகிறது. எனவே, அது தொடர்பான விமர்சனங்களும் தவிர்க்க முடியாததாகிறது.

சிரேஷ்ட பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் எழுதிய 'ஈழத் தமிழர் மரபுரிமை அடையாளங்கள்' என்ற நூல் என்னளவில் மேற்கூறிய வகைக்குள் அடங்குவதாலேயே இந்தப் பதிவை நான் மேற்கொள்கிறேன்.

ஒரு சிரேஷ்ட பேராசிரியரின் ஆய்வு நூலில் தவறு கண்டு பிடிக்கும் அளவிற்கு நான் ஒன்றும் புலமையாளன் இல்லை என்ற உண்மையை நான் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். அது மட்டுமன்றி ஈழத் தமிழ் மக்களின் பண்பாட்டுத் தலைநகரான யாழ்ப்பாணத்தில் உள்ள பல்கலைக் கழகத் துணைவேந்தரின் ஆசியுரையுடன் வெளியாகியிருக்கும் ஒரு நூலை விமர்சிக்கும் தகுதி எனக்கு இல்லை என்பதையும் நான் அறிவேன்.

ஆனால், ஒரு வாசகனாக இந்த நூலை நான் வாசிக்கும்

போது எனது மனதில் எழுந்த ஒரு சில கேள்விகளை மாத்திரம் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

• ஈழத் தமிழ் மக்கள் என்போர் யார்? தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அனைவருமா?

• தமிழ் ஈழம் என்ற வரையறைக்குள் புத்தளம் முதலாய் பொத்துவில் வரைக்கும் வாழுகின்ற அனைத்து தமிழ் பேசும் மக்களும் அடங்குவரா?

• இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் என்ற மூன்று மதங்களைப் பின்பற்றுவோரும் ஈழத் தமிழர் என்ற வரையறைக்குள் அடங்குவரா?

• அல்லது தனியே இந்துக்களும், கிறிஸ்தவர்களும் மாத்திரம் ஈழத் தமிழரா? அன்றி இந்துக்கள் மாத்திரமா?

• வேடுவர் என அறியப்படும் ஆதிக் குடிகள் எந்த வரையறைக்குள் அடங்குவர்?

• 'ஈழத் தமிழர்கள் தமிழ்மொழி பேசும் மக்களாக இங்கு வருவதற்கு முன்னரேயே, அவர்களின் மூதாதையர் இங்கு வாழ்ந்ததற்கு நம்பகரமான ஆதாரங்கள் காணப்படுகின்றன' என ஆய்வாளர் நூலின் அறிமுகத்தில் கூறுவது தற்போதும் வாழும் வேடுவரையே சுட்டுகிறது என்றால் வேடுவரின் மரபுரிமை அடையாளங்கள் நூலில் தரப்பட்டுள்ளன என்பதை ஆய்வாளர் உறுதி செய்வாரா?

• தமிழ் ஈழம் என விடுதலை இயக்கங்களால் வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் வாழுகின்ற எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த மக்கள் (ஒன்பதாவது மாவட்டமான புத்தளம் விடுதலைப் புலிகளின் காலத்திலேயே நீக்கப்பட்டு விட்டது) பொதுப் பண்புகளையும், பிராந்தியப் பண்புகளையும் கொண்டுள்ளார்கள். ஓரளவு தனித்தனி அடையாளங்களையும் கொண்டுள்ளார்கள் என்பதை ஆய்வாளர் அறிவாரா? உதாரணம் பேச்சு வழக்கு, சொற் களஞ்சியம், கலை வடிவங்கள், வழிபாட்டு முறைமை, உணவுப் பழக்க வழக்கம், விவசாயம், தொழில் உள்ளிட்டவை.

• இவ்வாறு இருக்க ஈழத் தமிழர் என்ற பதத்திற்குள் யாழ் குடாநாட்டுத் தமிழரை மாத்திரம் உள்ளடக்கி, அதனைப் பொதுமைப் படுத்த நினைப்பது முறையா?

• இஸ்லாமியர்களையும், கிறிஸ்தவர்களையும், வேடுவர்களையும் ஆய்வில் கொள்ள விரும்பாத ஆய்வாளர் மலையக மக்களை ஈழத் தமிழர் என்ற வரையறைக்குள் அடக்க முயல்வதன் பின்னணி என்ன? (பக்கம்182 மலையகப் பெண்கள் மேற்சட்டை இன்றி அணியும் ஆடை)

• பக்கம் 157 இல் 'கல்விப் பாரம்பரியம்' என்ற தலைப்பில் ஆறுமுக நாவலரால் 19 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட தொடக்கப் பள்ளி ஒன்றின் படம் இணைக்கப் பட்டுள்ளது. அவரது பாடசாலை தொடக்கப் படுவதற்கு முன்னரேயே கிறிஸ்தவ கல்லூரிகள் ஈழத்தின் பல இடங்களில் ஆரம்பிக்கப்பட்ட விடயத்தை ஆசிரியர் எடுத்தாளாமல் விட்டமைக்கு சிறப்புக் காரணங்கள் உள்ளதா?

• இதே தலைப்பில் 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆறுமுக நாவலருக்கு 2 பக்கங்கள் ஒதுக்கப் பட்டுள்ளமைக்கும், நாவலருக்கு முன்னமேயே ஈழத்தில் வேரூன்றிய கிறிஸ்தவ சமயத்தைப் பற்றி எதுவும் எடுத்தாளப் படாமைக்கும், நூலுக்குப் பாராட்டுரை வழங்கிய யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரன் அவர்களின் நிழல்படத்தில் நெற்றியில் துலங்கும் பட்டைக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா?

• ஈழத்தில் ஒரு காலத்தில் தமிழ்ப் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என அறிந்துள்ளோம். கந்தரோடை ஆய்வுகள் அதற்கான ஆதாரங்களைத் தந்துள்ளன. கிழக்கிலும் பல ஆதாரங்கள் உள்ளன. இதுபற்றிக் குறிப்பிடப்படாமைக்குக் காரணம் என்ன?

• பக்கம் 105 இல் 'பாரம்பரிய மரணச்சடங்குகள்' என்ற தலைப்பில் பதிவு செய்யப்பட்ட விடயங்களில் கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் சடலங்களை எரிப்பதில்லை, மாறாக புதைக்கிறார்கள் என்ற விடயம் பதிவு செய்யப்படாமல் விட்டதற்கான காரணம் இந்த ஆராய்ச்சி யாழ் மாவட்டத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப் பட்டதாலா? நடுகல் வழிபாடு என்ற பண்டைத் தமிழரின் பாரம்பரியம் இன்றும் கிழக்கில் கடைப்பிடிக்கப் படுகின்றது என்ற விபரம் மறைக்கப்பட்டு உள்ளமையும், இடைச்செருகலான பிணங்களை எரிக்கும் ஆரியரின் வழக்கம் தமிழரின் வழக்கமாக காண்பிக்கப்பட்டு இருப்பதனும் பின்னணி என்ன? (கிழக்குத் தமிழர்கள் மட்டுமன்றி ஈழத் தமிழர்களின் மூதாதையர்களான வேடுவர்கள், ஆய்வாளர் சுட்டிக் காட்டியுள்ள தமிழ்நாட்டில் இருந்து இலங்கை வந்த

தமிழ்பேசும் மக்களுள் அடங்கியிருந்த முஸ்லிம்கள், 500 வருடத்திற்கு மேற்பட்ட பாரம்பரியத்தைக் கொண்ட கிறிஸ்தவர்கள் யாவரும் பிணங்களை அடக்கம் செய்யும் முறையையே கடைப்பிடித்து வருகின்றார்கள்.)

• கிழக்கில் குடிவழமை எனும் வழக்கம் தமிழர்களிடமும் முஸ்லிம்களிடமும் இருக்கிறது என்பதை ஆய்வாளர் அறிவாரா? இந்த வழமை மரணச் சடங்கில் கும்பம் வைப்பது தொடக்கம் பல வழிகளில் வெளிப்படும் என்பது தெரியுமா?

• பக்கம் 115 இல் 'பாரம்பரிய சடங்குகள்' என்ற தலைப்பில் 'தமிழ் வருடம் பிறக்கும் முதல் நாளில் கொண்டாடப்படும் பண்டிகை புதுவருடப் பிறப்பு' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. தை முதல் நாளே தமிழர்களின் புது வருடம் என உலகெங்கும் உள்ள தமிழர்கள் கூறிவரும் நிலையில் இவ்வாறு பதிவு பண்ணப்பட்டு உள்ளமையை யாழ் பல்கலைக் கழகம் ஏற்றுக் கொள்கிறதா?

• இதே தலைப்பில், கிழக்கு மாகாணக் கோவில்களில் நிகழும் கலையாடுதல் அல்லது தெய்வமாடுதல் என்ற விடயம் குறிப்பிடப் படாமை தற்செயல் நிகழ்வா?

• வைரவன் பந்தல் என்பது கிழக்கு மாகாணப் பாரம்பரிய அடையாளங்களுள் ஒன்று. அண்மைக் காலம்வரை பெரும்பாலான வீட்டுக் காணியில் அமைந்திருந்த இது பற்றிக் குறிப்பிடப் படாமைக்குக் காரணம் என்ன?

• கண்ணகி வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு என்பவை தொடர்பான பதிவுகள் இடம்பெறாமைக்கான காரணங்கள் என்ன?

• பக்கம் 175 இல் 'பாரம்பரிய உடைகள்' என்ற தலைப்பில் பாரம்பரியமாக சைவர்கள் அணியும் ஆடை எனத் தரப்பட்டுள்ள படம் உயர்குடி மக்களைச் சுட்டுகிறதா அன்றி சாதியப் பாரம்பரியத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற வரையறைக்குள் அடங்கும் மக்களதும் உடையும் அதுவேதானா? அரை நூற்றண்டுக்கு முன்னர் வரையும் யாழ் குடாநாட்டில் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற வரையறைக்குள் அடக்கப்பட்டிருந்த ஆண்களும், பெண்களும் மேலாடை அணிவதற்கு மறுக்கப் பட்டிருந்தமையை ஆய்வாளர் அறிவாரா?

• பக்கம் 181 இல் குறுக்கு கட்டு பற்றிய படம் ஒன்று மகளிர் நீராடும் போது மார்புக்கு மேலே அணியும் சேலை எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் தரப்பட்டுள்ளதோ ஒடுக்கப்பட்ட சமூகப் பெண் ஒருவரின் 50 வருடங்களுக்கு முந்திய பாரம்பரிய ஆடை. இது தற்செயல் நிகழ்வா?

• பக்கம் 182 இல் மலையகப் பெண்கள் மேற்சட்டை இன்றி அணியும் ஆடை என ஒரு படம் தரப்பட்டிருக்கின்றது. இதே வகை ஆடை முறைமையே தாழ்த்தப்பட்ட மக்கள் என வரையறை செய்யப்பட்ட மக்களின் ஆடையாக ஒரு காலத்தில் விளங்கியது என்ற விடயம் மறைக்கப் பட்டுள்ளமை தற்செயல் நிகழ்வா?

• ஒரு ஆய்வு நூறு வீதம் முழுமையாகச் செய்யப்பட முடியாதது என்பதை ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். ஆனால், ஆய்வைச் சிறப்பாகச் செய்து முடிப்பதற்குத் தேவையான முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கின்றதா என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடே இந்தக் கட்டுரை.

மேற்குறிப்பிட்ட நூலைத் திறந்த மனத்துடன் வாசிக்கும் ஒருவருக்கு இதைவிடப் பல கேள்விகள் எளலாம். என்னிடம் கூட இன்னும் பல கேள்விகள் உள்ளன. விரிவஞ்சி விட்டு விடுகிறேன். அது மாத்திரமன்றி அந்தப் பணி புத்தஜீவிகளுக்கு உரியது. இந்தக் கட்டுரையைத் தொடர்ந்து, இது விடயத்தில் மேலும் கேள்விகள் எழுப்பப்பட்டு, தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப் படுமாயின் அதுவே எனது சிந்தனைக் கிளறலுக்குக் கிடைத்த பயனாகக் கொள்வேன்.

ஒரு பேராசிரியரைக் கேள்வி கேட்டும் அளவிற்கு என்னிடம் அறிவு உள்ளதா என்று சிலர் யோசிக்கக் கூடும். உண்மைதான். அந்த அளவிற்கு என்னிடம் அறிவு இல்லைதான். ஆனால், எனது கண் முன்னே ஒரு தவறு தவறு என நான் நினைப்பது நடக்கும் போது பாராமுகமாக இருப்பதற்கான மனம் என்னிடம் இல்லை. அதனாலேயே, இன்றைய புலம்பெயர் வாழ்வுக்கு நான் நிர்ப்பந்திக்கப் பட்டேன்.

மனிதகுல வரலாற்றில் கேள்விகள் தவிர்க்க முடியாதவை. கேள்வி எழுப்புபவர்களும் அவ்வாறே. மானுட வளர்ச்சி 'ஏன், எதனால், எதற்காக' என்ற கேள்விகள் ஊடாகவே நிகழ்ந்து வந்திருக்கிறது.

ஈழத் தமிழர் அல்லாத ஒருவர் இந்த நூலை வாசிக்கும் போது அவர் நிச்சயமாக ஒட்டுமொத்த ஈழத் தமிழரின் பாரம்பரியத்தை அறிந்து கொள்ள முடியாது. மாறாக, யாழ் மைய அரசியலையும், மேட்டுக் குடி மனோபாவத்தையும், உயர்குடி வெள்ளாளர்களின்

பெருமையாகக் கொள்ளப்படும் சைவப் பாரம்பரியத்தையுமே அறிந்து கொள்ள முடியும். கொசுறாக சில விடயங்கள் எழுத்தாளப் பட்டுள்ளனவே அன்றி வேறில்லை.

2009 ஆம் ஆண்டிற்குப் பின்னான அரசியல் சூழலில் 'ஈழப் பிரச்சினை' என்பதை வட மாகாணத்திற்கான ஒரு விவகாரம் எனக் குறுக்கி விடுவதற்கு சிங்கள தேசம் முயற்சித்து வருகின்றது. அண்மைக் காலப் போக்குகள் அத்தகைய முயற்சிற்கு பெரிதும் உதவி வருகின்றன. புலம்பெயர் தமிழ் மக்களின் முன்னெடுப்புக்களாகட்டும், வட மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டு வரும் தமிழ்த் தேசிய அரசியலாகட்டும் அவை யாவும் வடக்கு மைய அரசியலாகவே அமைந்து நிற்கிறது. வடக்கு கிழக்கு இணைப்பு என்ற கோசம் மெதுமெதுவாக வலுவிழந்து செல்வதையே அவதானிக்க முடிகின்றது.

வடக்குடன் கிழக்கை இணைத்தல் (கிழக்குடன் வடக்கை இணைப்பது பற்றி என்றுமே பேசப்படவில்லை) கிழக்கு மாகாணத்திற்கு ந~ட்;டத்தையே தரும் என்ற குரல் கிழக்கில் எழத் தொடங்கி உள்ளது. அத்தகைய குரல் வீரியம் பெறுவதற்கு யாழ் மைய அரசியலே பெரிதும் தீனியாகி வருகிறது. அத்தகைய போக்கின் நீட்சியாகவே இந்த ஆய்வையும் கணிக்க வேண்டி உள்ளது.

'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற பாரம்பரியத்தைக் கொண்ட தமிழன் குறுகிய மனப்பான்மையுடன் சிந்திப்பதும், அதனையே வரலாறாக மற்றவர்கள் மீது திணிக்க முயல்வதும் ஏற்புடையதன்று. ஆய்வுகள் திறந்த மனதுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். அல்லாவிடில், ஆய்வுகள் என்ற பெயரில் சிங்களம் மேற்கொண்ட வரலாற்றுச் சிதைவைத் தட்டிக் கேட்கும் தார்மீக உரிமையை நாம் இழந்தவர்கள் ஆவோம்.


மாவோ சே துங் கூறியதைப் போன்று 'குதிரைகளில் இருந்து மலர்களைப் பார்க்காதீர்கள்' என்று கூறுவதைத் தவிர வேறு வழி இல்லை.




Swiss, Zürich மாநிலத்தில் புதியதோர் உதயம்

# வரசித்திமஹால் மண்டபம்

சகல விதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும் நேர்த்தியாகவும் உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில், அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில், மனம் கவர்ந்த, ஒரே அழகிய மண்டபம்...




**திருமண விழா, நீராட்டு விழா, பிறந்தநாள் விழா**

அனைத்து வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை அறுசுவையுடன் சுவிஸின் அனைத்து பாகங்களுக்கும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

**800 இருக்கை வசதியும் - 400 வாகன தரிப்பிடமும் கொண்ட மண்டபம்.**

**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

| K. Kowthaman | S. Manivannan | K. Vijayasuresh |
|---|---|---|
| 079 317 82 36 | 079 128 55 61 | 079 275 68 62 |

Web: www.varasithy-mahall.ch | E-Mail: varasithymahall@hotmail.com



# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

அவதானி

பாகம் 3

இன்னொரு நாட்டினுடைய முழு விபரங்களையும் அறிந்து கொள்வதற்கு பல கட்டமைப்புகள் பல வடிவங்களில் இயங்குகின்றன.

உணவுச்சாலைகளை முதன்மைப்படுத்தி ஏன் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தேனென்றால் உணவு இல்லையேல் மனிதனால் உயிர் வாழ முடியாது என்பதேயாகும். அவசர உலகத்தில் மனிதர்கள் அவசரம் அவசரமாக உண்டுவிட்டுப் போகும் உலகமாக இன்று காலம் மாற்றமடைந்துவிட்டது.

விஞ்ஞான வளர்ச்சிகள் மனிதனை உந்தித் தள்ளிக் கொண்டே போய்க் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் அவசர உணவு என்பது இன்றிமையாததாகிவிட்டது.

மனிதர்களிடம் காணப்படும் இந்த அவசரமே உளவு பார்க்கும் நாட்டின் மூலதனம். அவசரமும் ஒரு சில நிமிடங்களுக்குள் கிடைக்கும் உணவு மூலம் இந்த அவசர மனிதர்களை ஒரு இசைவாக்கத்திற்கு உட்படுத்துவதில் வல்லரசு நாடு வெற்றிகண்டு முடித்துவிட்டது.

பெரும் போக்காக பொதுவாக யோசித்துப் பார்ப்பவர்க்கு உணவுச்சாலைகளும் உளவு பார்க்கும் நிறுவனங்களா என எண்ணத் தோன்றலாம்.

எந்த நாட்டிலிருந்து இந்த உணவுச்சாலைகள் இன்னொரு நாட்டில் அமைக்கப்படுகின்றதோ அந்த நாட்டுக்காக உளவு பார்த்தலை தேசிய உணர்வுடன் அதில் பணிபுரியும் அந்த நாட்டு அதிகாரிகள் செய்வார்கள்.

ஒவ்வொரு நாட்டு மனிதனும் தனது நாடே சிறந்தது என்று நினைப்பதில் வியப்பேதும் இல்லை.ஆனால் வல்லரசு நாடு உலகை தனது கைக்குள் வைத்திருக்க வேண்டுமென்பதற்காக, மற்றைய நாடுகளின் பலம் என்ன பலவீனம் என்ன என்பவற்றை அறிவதை முதன்மை வேலையாக மேற்கொள்கின்றது.

இராணுவ இரகசியங்கள் மட்டுந்தான் முக்கியமான இரகசியமல்ல.அதைவிட அன்றாட வாழ்வின் நடைமுறைகளை இயக்குவதன் மூலம் மக்களை அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்ச்சியாக வைத்திருக்கும் திட்டமிடலை கண்காணிப்பதே முக்கியமானதாகும்.அவற்றை பலவீனப்படுத்துவது சிதைப்பது உளவு பார்க்கும் நிறுவனத்தின் முக்கிய திட்டமாகும்.

ஒரு குடிமகனின் மகிழ்ச்சியான வாழ்வே நாட்டின் இறுக்கமான தன்மைக்கு அத்திவாரமாகும். ஒரு தனிமனிதனின் தேவைகளை அரசு பூர்த்தி செய்யாது விட்டால் அவனுக்கு அரசு மீது வெறுப்பு உண்டாகும்.அவனிடமிருந்து தன் நாட்டையே வெறுக்கின்ற கோபமும், கண்டனங்களும், விமர்சனங்களும் எழும்.

இவைதான் உளவு பார்க்கும் நாட்டின் பலம். தனது நாட்டைவிட வேறு எந்த நாடும் தன்னை மீறிய நிலைக்கு வந்துவிடக்கூடாதென்பதில் வெறுப்புற்ற கோபம் கொண்ட மனிதர்களின் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் தமது சொந்த நாட்டுக்கு எதிராகவே திருப்பிவிடுவதில் மிகவும் நுட்பமாக வல்லரசு நாடு அணுகும்.

உணவுச்சாலைகளில் பணிபுரியும் அதிகாரிகள் தமக்கு வழங்கப்பட்ட ஒற்றர் வேலைகளை சில்லறைப் பணியாளர்கள் மூலமாக நிறைவேற்றிவிடுவார்கள்.

வல்லரசு நாட்டின் உணவுச்சாலை அதிகாரியுடன் கலந்துரையாடும் ஒரு சாதரண பணியாளன் தனது நாட்டின் சமூக பொருளாதார கட்டமைப்பின் பலவீனங்களையும் பலத்தையும் யதார்த்தமாக உரையாடலில் தெரிவிக்கும் போது அதைக் கவனத்தில் கொள்ளாதது போல இருக்கும் அதிகாரி அவன் சொன்ன தகவல்களை அவன் அறிந்து கொள்ளாத வகையில் சேமிப்பார். தனது நினைவுப் பகுதியிலும் அல்லது சட்டைப் பைக்குள்ளிருக்கும் கைத்தொலைபேசி ஊடாகவும்கூட இருக்கலாம்.

சில வேளைகளில் இந்தச் சில்லறைப் பணியாளனின் உறவினரோ அல்லது நண்பர்களோ வேறு ஒரு நிறுவனத்தில் அதிகாரிகள் இருப்பார்கள்.

ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தமது திணைக்களம் சம்பந்தப்பட்ட இரகசியங்களை அல்லது கட்டமைப்புகள் பற்றிய விபரங்களை சொல்லியிருப்பார்களானால் அதனை தனது அதிகாரியுடன் பகிர்ந்து கொள்வான்.

அதிகாரியாக அனுப்பப்படுபவர்கள், உணவு நிறுவனத்தின் வியாபித்தலை மட்டும் அல்ல தனது நாட்டுக்காக உளவு பார்த்தல் என்ற ஒற்றர் வேலையையும் செய்வார்கள். வெளித்தோற்றத்தில் பணிபுரிநிலையில் அவர் அதிகாரியாகத் தோற்றப்படினும் அவர் ஒற்றர் வேலையையும் செய்கிறார் என்பதை எவராலுமே கண்டுபிடிக்க முடியாது.

அந்த அதிகாரி உரையாடும் போது இரகசியங்களை உள்வாங்கும் மனிதராக இருக்கிறாரோ என எவராலுமே கண்டுபிடிக்க இயலாது. ஏனெனில் வல்லரசு நாட்டின் மத்திய ஆய்வு ஒருங்கமைப்பில் அவர் அதற்கான பயிற்சியினைப் பெற்றவராக இருப்பார்.

பணிபுரியும் சில்லறைப் பணியாளர்களின் குணவியல்புகள் அவரவர் எந்த நாட்டுக்குரியவர்களோ, அதற்கமைந்த பண்பாட்டுக்குரியவர்களாகவே இருப்பார்கள். வேறு வேறு பண்பாடு உடையவர்களை எவ்வாறெல்லாம் இறால் போட்டு சுறாப் பிடிக்கும் தந்திரோபயத்திற்கமையவே அவர்களை அணுகுவார்கள்.

உதாரணமாக ஒரு போலந்து நாட்டவனுடன் உரையாடும் அதிகாரி போலந்து நாட்டின் முக்கியத்துவத்தை அதில் உள்ள பண்பாட்டு விழுமியங்களை தனித்தன்மை வாய்ந்த உணவுகளை வாயாரப் புகழ்வது போல புகழ்வார்.

அதனைக் கேட்டு உச்சிகுளிர்ந்து போகும் சில்லறைப் பணியாளன் தான் பணிபுரியும் நாட்டினுடைய, தான் அறிந்து கொண்ட இரகசியங்களை மட்டுமல்ல தனது நாட்டின் இரகசியங்களையும் யதார்த்தமாகச் சொல்லுவான். அதிகாரியும் தனக்கு இதில் ஆர்வமில்லாதது போல கேட்பார்.

ஒரு சில்லறைப் பணியாளன் மூலமாகப் பெறப்படும் தகவல்களின் பெறுமதியைப் பொறுத்து அந்தப் பணியாளன் தனது பணியில் உயர்த்தப்படுவான்.
பணி உயர்த்தப்படுதல் என்பது அப்பணியாளனின் கடுமையான உழைப்புக்கு கொடுக்கப்பட்ட உயர்வு என்ற மாயத் தோற்றம் உருவாக்கபட்டுவிடும்.

இத்தகு பணியாளன் அதிகாரி என்ற ஒற்றன் விரித்தவலையில் சிக்கிக் கொண்டவனாகிறான். அவனுக்கு சக பணியாளர்களுக்குத் தெரியாமலே பல சலுகைகள் வழங்கப்படும்.

தனியாக அவனை அழைத்து விருந்து கொடுத்தல், சுற்றுலா செல்லுதல் போன்றவை மட்டுமல்ல தொடர்ச்சியாக

அவன் கொடுக்கும் தகவலைப் பொறுத்து நிதி அன்பளிப்பும் செய்யப்படும்.

முக்கிய திணைக்களங்களில் பணிபுரியும் அவனுடைய நண்பர்களிடமிருந்தோ அல்லது உறவினர்களிடமிருந்தோ பெறப்படும் தகவல்கள் அதிகாரிகளுடன் வேறு ஒரு இடத்தில் சந்திப்பில் வைத்து அவனால் சொல்லப்படும்.

மனிதர்கள் மூன்று முக்கியமான பலவீனங்களுக்கு உட்பட்டவர்கள்.பலரை இப்பலவீனங்களே ஆட்டிப்படைக்கின்றன. பெண்ணாசை, பொருளாசை, மண்ணாசை போன்றவையே அவை.

பயிற்றப்பட்ட தேர்ந்த அதிகாரி ஒருவருடன் உரையாடும் போது அவருடன் இருக்கும் இல்லாமையையும் பலவீனத்தையும் அறிந்து கொள்வான்.
அது அவனைக் கையாளும் நெம்புகோல் போன்றது.தன்னுடைய பலவீனத்தை காட்டிக் கொள்ளாமலிருக்கும் பணியாளன், அதிகாரியின் பார்வைக்குள்ளும் உரையாடலுக்குள்ளும் அகப்பட்டு தனது பலவீனத்தை வெளிக்காட்டிவிடுவான்.

அவனின் தேவை அதிமுக்கியமானது என்றால் அவனின் பலவீனம் அதிகாரியினால் நிவர்த்தி செய்யப்படும். அதிகாரி நேரிடையாகவும் அதனை நிவர்த்தி செய்யமாட்டார். வேறு ஒருவரால் அவை செய்யப்படும்.

அன்றாடம் நாம் காணும் சாதாரண செயல்பாடுகள் அன்றாடம் நடக்கும் இயல்பானவை என சாதரண மனிதர்களுக்குத் தோன்றலாம், அன்றாடம் வரும் பத்திரிகைச் செய்திகள் வெறும் செய்திகளாக வாசிப்பவனுக்குத் தோன்றலாம். ஆனால் அவை யாவும் உளவு பார்க்கும் நிறுவனங்களுக்கு மிகப் பெரிய இரகசியங்களே.
(தொடரும்)


ஓம் சாய்ராம் ஜோதிட நிலையம்

பண்டித் ராம் குருஜி



- தொழில்
- கல்வி
- வியாபாரம்
- திருமணம்
- உடல்நலம்
- வசியம் செய்தல்
- வாஸ்து சாஸ்திரம்
- காதல் விவகாரம்
- குழந்தை பாக்கியம்
- நாம நட்சத்திரம்
- வழக்கு மன்ற விவகாரம்
- கண்திருஷ்டி கழித்தல்
- லக்ஷ்மி வசீகரம்
- தாம்பத்தியக் கோளாறு
- கணவன் மனைவி ஒற்றுமையின்மை

எல்லா காரியங்களுக்கும் பரிகாரம் செய்து தரப்படும்

Langstr, 8005 Zurich, Switzerland
rampandith1994@gmail.com
+41 77 926 72 54


சூரிச் மாநகரில்
அபிரா
டெக்ஸ்டைல்
திருமணப்பட்டுப்புடவைகள்,
பட்டு வேஷ்டிகள் மற்றும்
புதிய பஞ்சாபி வகைகள்,
சோளி ஹிட் வகைகள்,
சீகுயின்ஸ் சாறிகள்,
புதிய வகையான சாறிகள் மற்றும்
சிறுவர்களுக்கான கோட், சூட்,
சேட், சர்வாணி வகைகள்
அனைத்தும் நீங்கள்
இதுவரையில் எங்கும்
பெற்றுருக்காத வகையில் மிகுந்த
மலிவு விலையில் கொள்வனவு
செய்யலாம்!
பெண்களுக்கான காப்பு, காதணி வகைகள்
மிக மிக மலிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்!
Contact:
Stauffacher Str. 149
8004 Zürich
Tel: 043 233 54 54



பாகம் 5

# அவனா? இவன்!

## மத மாற்றமும் தமிழின அழிப்பும்?

ஒருவனின் வாழ்வில் இள வயதும் பள்ளி வாழ்வும் மறக்க முடியாத மறக்கக் கூடாத காலம். எனவே அது பற்றிய அவன் கதையும் பார்க்கப் பட வேண்டியது என்பதால் இப்பகுதியில் அதைப் பார்ப்பது அவசியமாகும். அவனது கிராமம் கலட்டு தன்மை அதாவது வரண்ட சுண்ணாம்புக் கற்களும சிவந்த செம்பாட்டு மண்ணும் சிறு பற்றைக் காடுகளும் நிறைந்த பகுதியாகும். கற்களையும் பற்றைக் காடுகளையும் அகற்றிவிட்டால் செக்கச் சிவந்த செம்மண் சிறு பயிர்கள் விளைவிக்கச் சிறந்த தோட்ட நிலங்களாக மாறிவிடும். 9 , 10 முழ ஆழத்தில் சிறந்த பளிங்கு போன்ற குடி நீர் கிடைத்துவிடும்.

4 பரப்பு நிலம் கிடைத்து விட்டாலே ஒரு சிறு கொட்டில் வீடும் குடும்பமும் அதன் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய சிறு தோட்டமும் தயாராகி விடும். ஆனால் அப்படி ஒரு வாழ்வை அடைந்துவிட 2 அல்லது 3 தலை முறைகளாவது இரவு பகல் உழைத்துச் சிக்கனமாக வாழ்ந்து சேமித்தால் மட்டுமே முடியும். அவனது தந்தை பிறந்த 1900 ம் காலப் பகுதியில் மாரிகாலம் தொடங்கிவிட்டால் மாரி அடைமழைகளும் பெரு வெள்ளங்களால் ஆண்டு தோறும் சிலருக்கு வீடுகள் அழிவதும் அதனைத் தொடர்ந்து வாந்தி பேதி கொள்ளை போன்ற தொற்று நோய்கள் பரவுவதும் பெரும் எண்ணிக்கையில் சிறுவர் முதல் பெரியோர் வரை குடும்பம் குடும்பமாய் மரணிப்பதும் சாதாரண நிகழ்வுகளாக காணப்பட்டன.

அவனது தந்தையின் வாழ்விலும் அப்படித்தான் விதி விளையாடியது. அப்படி நோயால் அவனது பெற்றோர்கள் மாண்டுவிட அவனும் அவனது ஒரே தம்பியும் உயிர் தப்பவே அவனது தாய்வழிப் பாட்டியும் பின்னர் சிலகாலத்தில் அவரும் மாண்டு விட அவரது சகோதரியும் அந்த இரு குழந்தைகளையும் வளர்த்து விட வளர்ந்;தனர். தாயோடு அறு சுவை போனது தந்தையோடு கல்வியும் கட்டுப்பாடும் போனது. இந்நிலை இவர்களுக்கு மட்டும் புதியது அல்ல. இப்படியான நிலைமைகள் கிராமம் கிராமங்கள் இந்நிய குறிப்பாக இந்திய அரசர்களின் படையெடுப்புகளால் அழிக்கப் பட்டு இடப் பெயர்வுகளும் நோய்களும் வரலாற்றில் பல்லாயிரக் கணக்கான குடும்பங்களைப் புரட்டிப் போட்டதுண்டு.

இவர்களது முன்னோர் அநுராத புரம் பகுதியில் வாழ்ந்து படை எடுப்புகள் போர்களினால் மற்றும் மலேரியா நோயால் தாக்கப் பட்டு அழிந்த மக்களில் தப்பி இடம் பெயர்ந்து யாழ்ப்பாண மண்ணில் குடியேறியவர்களில் ஒரு பகுதியினர் எனக் கருத காரணிகள் சில உள்ளன. முதலாவது யாழ்ப்பாணப் பகுதியிலும் தெற்கே சிங்களப் பகுதிகளிலும் வன்னி என்ற முன் னொட்டை கொண்ட பெயர்களைக் காண முடியிறது. எடுத்துக் காட்டாக வன்னிய சிங்கம், வன்னிய சேகரம் வன்னிய குலம் வன்னித்தம்பி போன்ற தமிழ்ப் பெயர்கள் வடபகுதிகளிலும் வன்னி ஆராச்சி, வன்னி அப்புகாமி, வன்னிய சேகர போன்ற சிங்களப் பெயர்கள் தென்பகுதியிலும் காண முடிகிறது. இதன் மூலம் சோழர் காலப் படை எடுப்புகளால் அநுராதபுரம் அழிக்கப் பட்டு அரசதானியாக பொலனறுவை உருவானது என சரித்திர வரலாறு கூறுகிறது.



மேலும் வடபகுதியில் வைரவரை குல தெய்வமாகக் கொண்ட மக்கள் வன்னிப் பகுதியிலிருந்து குடி பெயர்ந்தவர்களாக இருக்க முடியும் என்பதற்கு கிராமங்கள் தோறும் வீடுகள் தோட்ட வெளிகளில் தமது குல தெய்வமாகவும் காவல் தெய்வமாகவும் வழிபடும் மக்கள் இப்படி அநுராத புரத்திலிருந்து படிப்படியாக மலேரியா போன்ற தொற்று நோய்களில் உயிர் தப்பி வடக்கே புலம் பெயர்ந்த மக்களே எனக் கூற முடியும். பெரும்பாலான வீடுகள் தோட்டங்களில் அக்காலத்தில் ஒரு கல்லோ அல்லது இரும்பினால் ஆன வைரவர் சூலமோ வைத்து காலை மாலை வேளைகள் அல்லது செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் பூக்களிட்டு விளக் கேற்றி வழிபடும் பண்பாடு மக்களிடையே இருந்தது. இன்றும் கூட சில பகுதிகளில் இப்பழக்கம் அல்லது அதன் எச்சங்களைக் காண முடியும்.

இக்கடவுளின் அடையாளக் குறியாக இருப்பது திரிசூலம் எனப்படும் சிவனின் ஆயுதமே. அதுவே இன்றும் தமிழ் பெண்களின் தாலியில் முக்கிய சின்னமாக விளங்குகிறது. மேலும் சிறு குழந்தைகளின் கழுத்தில் காவல் சின்னமாக அணியப் படும் பஞ்சாயுதம் என்ற பதக்கங்களில் கலப்பை சூலம் வில் அம்பு சங்கு என்பவற்றிலும் நடு நாயகமாக காணப்படுவது இந்தத் திரி சூலமே. தமிழரின் முழுமுதற் கடவுளான சிவனின் சிறப்பு ஆயுதமாக இருப்பதும் இதே வைரவ சூலம்தான். தமிழரின் அனைத்து விடயங்களிலும் திரிசூலம் முக்கிய காவல் குறியாக இருக்கிறது. கருவறை முதல் சுடுகாடு வரையிலும் காக்கும் கடவுளாக வைரவர் சூலம் உள்ளது.

வரலாற்று ரீதியாக அதனைப் பார்த்தால் மனித இனம் வேட்டையாடி வாழ்ந்த காலத்தில் அவனின் முக்கிய வேட்டைக் கருவியாக திரிசூலம் இருந்ததும் வேட்டைக்கு நாய் உதவியதும் பின்னாளில் அவற்றை தனது குடும்பம் குலத்தவரைக் காத்து மறைந்த வேடுவர் குலத் தலைவனே புலித் தோலணிந்த சிவனாக காக்கும் வைரவக் கடவுளாக வழிபடப் பட்டார் என கருத முடிகிறது.

இவற்றை வன்னி நிலப் பகுதி என அழைக்கப்பட்ட அநுராத புரம் வவுனியா வரை வாழ்ந்த மக்கள் அவர்களது கிராமங்களும் வயல்கள் குளங்களும் அந்நியரின் படை களால் அழிக்கப்பட்டு நோய் பஞ்சம் பிணிகளால் இடப்பெயர்வுகளுக்கு உள்ளான பொழுது அவர்களுடன் வைரவர் வழிபாடு வடக்கே யாழ்ப்பாணம் எனப் பரவி இந்தியாவில் தென்னகமெங்கும் பரந்து கிடப்பதைக் காண்கிறோம்.

இதே போன்று சேரர் படையெடுப்பால் கைதாகி கொண்டு செல்லப் பட்டவர்கள் ஈழவர் என கேரளத்தில் தீண்டப் படாதவர்களாக அடிமை வாழ்வு வாழ்வதும், சோழர் படையெடுப்பால் கைதாகி கொண்டு செல்லப் பட்ட படையினரே தமிழ் நாட்டில் வன்னியர் என தாழ்ந்த வகுப்பினராக இருப்பதும் கவனிக்கத் தக்கவை.

மேலும் கரிகால் சோழன் படை எடுத்து போரில் வெற்றி பெற்று 10000 படை வீரரை கைது செய்து அடிமைகளாக எடுத்துச் சென்றான் எனச் சிங்கள வரலாற்று நூலான சூள வம்சம் குறிப்பிட்டுள்ளதாக அறிகிறோம். இவர்களை வைத்தே கரிகாலன் கல்லணையை கட்டினான் என்ற ஒரு செய்தியும் உள்ளது. நீர்ப்பாசனம் மற்றும் நீரியல் தொழில் நுட்பத்தில் அன்றைய இலங்கையே முன்னோடியாக விளங்கியது எனச் சில ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இவை பற்றிய விரிவான பார்வை இத்தொடருக்கு ஏற்றது அல்ல என்பதால் அதனை வேறு தொடரில் பார்ப்பதே பொருத்தமாக இருக்கும்.

இங்கு இவற்றைக் குறிப்பிடுவதற்கு காரணம் இன்றும் அநுராதபுரம் பொலநறுவைப் பகுதியில் கணிசமான தமிழ் மக்கள் சிங்களவராக மாறியும் தமிழராக வாழ்ந்தும் வருவதை காணமுடியும். இத்தொடரில் இவற்றை எழுத வேண்டிய காரணம் போர்களும் அவற்றின் அழிவுகளால் சிதைவுண்ட மக்கள் குடியிருப்புகளும் இடப் பெயர்வுகளும் அவை உருவாக்கிய தொற்று நோய்களும் தமிழ் மக்களைச் சிதறி ஓடவும் அடிமைகளாக கொண்டு செல்லப்படவும் முக்கிய காரணிகளாக இன்று போல் அன்றும் இருந்தன என்பதை காட்டுவதற்காகவே.

அப்படித்தான் அவனது முன்னோர்களும் வன்னிப் பகுதியிலிருந்து வடக்கு நோக்கி வந்தவர்களே என்பதற்கு ஆதாரமாக அவர்களின் பெயர்கள் சுட்டி நிற்பதை காண முடிகிறது. (அவனா இவன்! இனியும் வருவான் )



Christmas
& New Year Sale
ONE DAY ONLY
ONE DAY ONLY
SALE
23.12.2017
பழையன கழிதலும் புதியன புகுதலும்
அன்று மாபெரும்
மலிவுக்கொண்டாட்டம்!
Stock Clearance
SALE
திருமணம் பூப்புனித
நீராட்டு விழா
நிச்சயதார்த்தம் இவைகளுக்கு
தேவையான அனைத்துப்
பட்டுப் புடவைகளையும் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்!
Gopara Gnanam
Textiles & Jewellery Shop
Rheinische Straße 81, 44137 Dortmund
Telephone: 0231 5450028 | Mobile: 0171 33 06 542

SwissLife
Select



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே. அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.

சுவிசில் சொந்த வீடு வாங்க
விரும்பும் உறவுகளே, அவதானமாகச்
செயற்படுங்கள்.உங்கள் கடனுக்கான வட்டி
வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும்.
எனவே, சரியான வங்கியையும், வட்டி
வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும்
உங்களோடு கரம் கோர்க்கும்
ஒரேயொரு நிறுவனம்...
















## அறிவு. நேர்மை. நாணயம்.

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின்
முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு
ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம்
காப்புறுதி செய்து தருகிறோம்.

**Sägestrasse 79**
**3098 Köniz**

**Telefon: 031 915 00 50**
**Telefax: 031 915 00 60**
**Handy: 079 889 60 65**

**eMail: Krishnasamy.Thileepan@swisslife-select.ch**
**Internet: www.swisslife-select.ch**



# நான் தெள்ளியவோர் முடிச்சவிக்கி

தேவன்

இந்த உலகம் அழியப்போகிறது என்று யார் சொன்னாலும் நாம் அவர்களைக் கேலிசெய்வதே வழக்கமாகிவிட்டது. ஏனெனில் இதுவரையில் பலரால், பலநாட்களைக் குறித்துப் பரப்பப்பட்ட தகவல்களனைத்தும் பொய்த்துப்போனமையே காரணமாகும். அழிவு என்பது அவ்வளவு அகாலமாக நேர்ந்துவிடாது. ஏனெனில் பால்வீதி உருவாகவதற்கே பல மில்லியன் ஆண்டுகளாயின. பின்பு அதனிலிருந்து பூமி உருவாகி உயிரினங்கள் வாழும் நிலையை அடைய ஏறக்குறைய ஆயிரமாயிரம் வருடங்களாயின. அவ்வாறுதான் ஒரு அழிவு ஏற்படுவதாயினும் சிறிது சிறிதாக நீண்ட நாட்கள் ஆகலாம். இயற்கை அழிவுகளால் பூமியில் ஏற்படும் பாதிப்புக்களில் சிக்கி மனிதர்களும், அவன் உருவாக்கியவைகளும் அழிந்துபோகக்கூடும். ஆனால் உலகம் அழிந்துவிடாது.

உலக இயக்கத்தின் அடிப்படை சூரியன். அடுத்ததாக, உலக உருண்டையின் மெலிந்து கீழான காந்தப்புல விசையே உலகைச் சுழற்றுகிறது. புவியீர்ப்பிற்கும் இதற்கும் நெருங்கிய தொடர்புண்டு. உலக இயக்கத்தின் அடிப்படையான சூரியன் ஒரு எரிசக்திக்கோளம். அது எரிந்து கொண்டே இருக்கிறது. சூரியனது தீ நாக்குகள், சூரியனிலிருந்து பல கிலோமீட்டர்கள் தூரம் வரை எழுந்து வீழ்வதை நாசாவின் புகைப்படங்களில் காணமுடியும். சூரியனின் எரிசக்தியே உலக வாழ்வின் அடிப்படை. இப்பொழுது ஒரு கேள்வி எழுகிறது. அதாவது இந்த எரிகோளின் சக்தி தீர்ந்துபோய்விடின்.........? ஆம், அது என்றாவது ஒரு காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாகத் தீர்ந்துசெல்லக்கூடும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். அதற்கும் மாற்றீடுகளைக் கண்டுபிடித்துவிடமுடியும் . ஆனால் அதைவிடவும் வேறுகோளிற்குப் பெயர்ந்துவிடும் முயற்சிகளே நன்மை பயக்கும் என்பது இயற்பியலாளரும், அண்டவியல் ஆராய்ச்சியாளருமான இசுடீபன் காக்கிங் (stephen Hawking) என்பவரது முடிவாகும். அதனாலேயே செவ்வாய்க்கோளில் மனிதன் வாழ்வதற்குரிய ஆராய்ச்சிகளை நாசா முடுக்கிவிட்டுள்ளது.

இவற்றையெல்லாம் விடவும் ஒரு ஆபத்தான திடீர் நிலை பூமிக்கு ஏற்பட வாய்ப்புண்டு. "பூமியின் மாரடைப்பு" என்று வேண்டுமானால் இதனை வைத்துக்கொள்ளலாம். அதாவது பூமியின் காந்தப்புல விசையில் தளர்வு ஏற்பட்டு, அதன்மூலம் பூமியின் சுழலும்வேகம் குறையக்கூடும். அதாவது நான்கில் ஒரு பங்கு வேகம் குறையும். மணித்தியாலத்திற்கு 1037 கிலோமீட்டர் வேகத்தில் சுழலும் பூமி, தனது வேகத்தை மணித்தியாலத்திற்கு 250 கிலோமீட்டர் வேகத்திற்கு மாற்றிக்கொண்டால் உலகம் என்னவாகும்..? இது கற்பனையோ நகைச்சுவையோ அல்ல, இது நிகழ வாய்ப்பிருக்கிறது என்று கூறியதோடு மட்டுமின்றி, அது தொடர்பான ஒரு தகவல்திரட்டுக் காணொளி ஒன்றையும் வெளியிட்டிருக்கிறார்கள். நாற்பது நிமிட அந்தக் காணொளியைப் பார்த்துமுடித்ததும் அவசர அவசரமாகத் துறவியாகிவிடலாமோ என்று கூட யோசித்தேன். ஏனெனில் இன்றெல்லாம் துறவியானால்தான் எதையும் வேகமாக அனுபவிக்க முடியும் என்பதே நியதி.

சரி, விடயத்துக்கு வரலாம்; உலகம் தனது சுழலும் வேகத்தை நான்கில் ஒரு பங்காகக்குறைத்துக்கொண்டால், பகல்வேளை 48 மணிநேரமாக மாறும். அதாவது ஒரு பகல் கழிந்து இரவாக இரண்டு நாட்கள் எடுக்கும். இரவும் அவ்வாறே இருக்கும். உங்களது அலுவலகம் இரண்டு நாட்கள் இரவிலேயே இயங்கும். அட இவ்வளவுதானா என்று நினைத்துவிடாதீர்கள். இவ்வாறு ஒரு மாதம் கழிய அப்பொழுதுதான் ஆரம்பிக்கும் வில்லங்கங்கள். இயற்கைச் சமநிலை குழப்பமடைய ஆரம்பிக்கும். 12 மணிநேரத்திற்கு ஒருமுறை சூரிய ஒளியை உணவாக்கி வளர்வதே தாவர வளர்ச்சியின் அடிப்படை. இந்தச் சுழற்சி குழப்பமடைய தாவரங்கள், பயிர்கள், அனைத்தும் அழிய ஆரம்பிக்கும். மத்திய கோட்டுக்கு அருகாமையிலான நாடுகள் கடும் வெப்பமடைந்து வரட்சி அடையும். இது ஒருபுறம் நடைபெற, துருவப்

பிரதேசங்களில் குளிர் அதிகரித்து, கடற்பிரதேசங்கள் பனிக்கட்டியாக மாறும். அதேவேளை மத்திய கோட்டுப் பிரதேசங்களில் கடல் எல்லைகள் சுருக்கமடையும்.

சரியாக, ஆறுமாதங்களின் பின்னர் பூமி சுழலும் வேகம் எட்டில் ஒரு பங்காகக் குறையும். அதாவது ஒரு இரவுப்பொழுது 96 மணி நேரம் நீடிக்கும். அதாவது எட்டு நாட்கள் நீடிக்கும். இந்த நிலையில் தாவரங்கள் முற்றாக அழிவடையும். இந்த நிலையை அடையும்போது, துருவப் பிரதேசங்களின் எல்லை நீண்டுசெல்லும். வட அமெரிக்க நாடுகள், மற்றும் வட ஐரோப்பிய நாடுகள் நீரில் மூழ்கும் அதே வேளை, மத்திய கோட்டுப் பிரதேசங்களில் புதிய நிலப்பரப்புகள் தோன்றும். ஐரோப்பாவிலிருந்து பிரித்தானியாவிற்குச் செல்லும் கடற்பாதையான calay - Dover கடற்பகுதி முழுதாக வற்றி, மக்கள் நடந்துசெல்லக்கூடிய வகையில் மணற்திட்டுக்கள் தோற்றம்பெறும். அமெரிக்காவின் சான்பிரான்சிசுகோ மற்றும் ஒக்லாண்ட் பகுதிக்கிடையில் உள்ள கடல் வற்றி பாரிய மணற்திட்டுக்கள் தோன்றும். இவையெல்லாவற்றையும் விட குடிநீருக்கு மக்கள் அலையவேண்டி ஏற்படும். நிலத்தின் கீழ் புதைக்கப்பட்டுள்ள குழாய்களினூடான நீர் விநியோகம், அதீத குளிர் காரணமாக இறுகிப்போகும்.

ஒரு கூடாரம் அமைத்து, அங்கே உணவுக்கான தாவரங்கள் வளர்க்கவேண்டி ஏற்படும். அது எவ்வாறு நடைபெறும் என்பதையும் அந்தக்காணொளியில் காட்டியிருக்கிறார்கள். கடலுணவுகளைத் தேடி மக்கள் அலையவேண்டி ஏற்படலாம். ஏனெனில் விலங்குகளும் இறந்துவிடும் நிலை என்பதால், தாவரங்கள் அல்லது கடலுணவுகள் என்பதைத்தவிர வேறு வழி இருக்காது. மத்தியகோட்டுக்கு அருகாமையில் உள்ள நாடுகள் வறண்டு எரிந்து போகும் என்பதையும் காட்டுகிறார்கள். அதாவது பூமியின் வேகம் குறையும்போது, சூரியனின் வெப்பம் ஒரே இடத்தில் பலமணி நேரம் தொடர்ந்து பாய்ச்சப்படுவதால் மத்திய கோட்டுக்கு அருகாமையில் உள்ள நாடுகளுக்கு இவ்வாறு நிகழ்கிறது. ஆனால், ஒரே ஒரு ஆறுதல் என்னவெனில் செய்மதி மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்கள் இயங்கிவண்ணமே இருக்கும் என்பதுதான் . துருவப்பகுதி நாடுகளில் அதிக குளிர் காரணமாக 1.5 பில்லியன் மக்கள் உயிரிழப்பார்கள். கண்ணாடிகள் வெடித்துச் சிதறும் அளவுக்கு குளிர் ஏற்படும்.

விஞ்ஞானத்தைக் கொண்டு இந்த நிலையைச் சரிசெய்ய முடியாது என்பதுதான் மாபெரும் பிரச்சனை. அதாவது உலகின் காந்தப்புலம் செயலிழக்கும் போது, செயற்கைக் காந்தப்புலத்தை உருவாக்க முடியாது. மீண்டும் உலகம் பழையவேகத்தில் இயங்குமா என்பதும் ஐயமே. இது இன்றோ நாளையோ நடக்கப்போவதல்ல. ஆனால் என்றோ ஒரு நாள் நடக்கப்போகும் அனர்த்தம். ஆனாலும் இதிலிருந்து தப்பித்துக்கொள்ள வேறுவழியே இல்லை என்பதுதான் வேதனை.





அனைத்து
பொருட்களும் எங்கள்
சொந்த தயாரிப்பு
தரமான பொருட்கள்
மலிவு விலையில்
AKM
IMPORTS
தரமான பொருட்கள்
மலிவு விலையில்
கலப்படங்கள் எதுவும்
இன்றி சுத்தமாக
தயாரிக்கப்பட்டது
AKM ASIAN FOOD GmbH
ALPENSTRASSE 1
3072 OSTERMUNDIGEN
CH-BERN-SWITZERLAND
TP:031 931 25 25/078 802 72
www. Akmasian.com
விறகடுப்பில் தயாரிக்கப்பட்டது
Alpenstr.1,
3072 Ostermundigen
Tel. 031 9312525
(Bern Nilavani)
Basel Str. 80,
6003 Luzern
Tel. 041 2405400
தமிழர்களுக்கு தேவையான அனைத்து
விதமான உணவுப் பொருட்களின் மொத்த,
சில்லறை விற்பனை நிலையம்
A.K.M முத்திரைபதித்த அனைத்து பொருட்களையும் ஒரு முறை சுவைத்தால்
ஈழத்து சுவை உங்கள் நாவில் ஆழமான தனிச்சுவைதரும்!

# BCN·TRAVELS

**Consulting Network**

*Travels·Business·Worldwide*

# விமானச் சீட்டுக்கள் சிறப்பு விலையில்... எம்மிடம்



**Rheinischestr. 72,**
**44137 Dortmund**
**Tel.: 0231/10876361**




## Öffnungszeiten: Mo-Sa 09:00-20:00 Uhr

Last minute Tickets available
on Sunday and Holidays

துரித
பணமாற்றுச்
சேவை

VALUTRANS MONEY TRANSFER | TEMPO | BALU ASIAA | Ria



## நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு

சூபா(Schufa) தடங்கல் இருந்தாலும் உங்கள் புதிய முயற்சிக்கு நாங்கள் இருக்கின்றோம்!

**தற்போதைய வீட்டுக்கடனை அல்லது (தனிநபர்)கடனை குறைந்த வட்டிக்கு மாற்றுதல் "Umschuldung"**

உங்கள் சொந்த வீட்டை புதிய தரத்திற்கு மாற்ற விரும்பினால், **60.000€** வரை உடனடி கடன் உதவி!

# வீட்டுக்கடன்

# 1,2%

வட்டிவீதத்திலிருந்து
பெற்றுத் தரப்படும்



**50.000 - 122.000 யூரோ**

அரசாங்கம் வழங்கும் குறைந்த வட்டிப் (0,5%) பணத்தைப் பெற்றிடவும், மற்றும் வீடு கட்டுவதற்கோ அல்லது வாங்குவதற்கோ தேவையான சகல வங்கிரீயான, சட்டரீதியான (Notar) உதவிகளையும் மிகக் குறுகிய காலத்தில் செய்து தருகின்றோம்!

மற்றும் எம்மிடம் அனைத்து விதமான காப்புறுதிகளையும் பெற்றுக் கொள்ளலாம்

தொடர்புகளுக்கு:
**gothab Finance**
Rheinische Str. 72, 44137 Dortmund
**0231/53375365**
**0231/10876361**
**0152/53961138**
Th. Gobinath

# என்ன கொடுமை சரவணா!...

கல்லெளி வேலுப்பிள்ளை



வணக்கம் பாருங்கோ... எப்பிடி இருக்கிறியள்..? நான் ஏதோ இருக்கிறன் பாருங்கோ. குளிர் காலம் ஆரம்பிச்சிட்டுது எண்டதால மனிசர் பழையபடி கம்பளி மெத்தையை அள்ளிக் கட்டிக்கொண்டு திரியவேண்டியதுதான். உருப்படியா வெளில போய் வரமுடியேல்ல. வெளில போய் நீர் என்னத்தை வெட்டிப்புடுங்கப் போறீர் எண்டு நீங்கள் முணுமுணுக்கிறது கேக்குது பாருங்கோ. நீங்கள் சொல்லுறதும் சரிதான். ஆனால் அடிக்கடி வெளீல போய்வந்தாத்தானே ஏதாவது விடயம் அறியலாம். வீட்டுக்குள்ளேயே இருந்தால் ஒரு இழவும் தெரியவராது பாருங்கோ. என்னத்தைத் தெரிஞ் சென்ன, வெளீல சொல்லி அழுதென்ன , எவனாகிலும் திருந்தப்போறானே. இல்லைத்தானே. எல்லாம் அவன் அவன் நினைச்சபடி கூத்தாடுகிறானே தவிர, எங்க பாருங்கோ மற்றவனைப் பற்றி நினைக்கிறான். அந்த எண்ணம் துளியும் மனிசருக்கு இல்லைப் பாருங்கோ. நான் நல்லா இருந்தாக் காணும் எண்டுற எண்ணம் தானே இங்க எல்லாருக்கும் இருக்குதே தவிர, பிறரும் வாழோணும் எண்டு எவன் சிந்திக்கிறான்.

என்னெண்டாப்பாருங்கோ, உங்கின நடக்கிற விழாக்கள், கொண்டாட்டங்களுக்குப் போனாலே ஏதோ பிரச்சனையோட தான் மனிசன் வெளில வரவேண்டிக்கிடக்குக் கண்டியளோ. தான் வாழாட்டி மற்றவனுக்கு வாழக்கூடாது எண்டு நினைக்கிற ஒரு கூட்டம் இருக்குது. தான் ஆகா ஓகோ எண்டு வாழ்ந்தாலும், மற்றவன் ஐஞ்சு சதத்துக்குக் கூட கடினப்பட வேணும் எண்டு நினைக்கிற கூட்டமும் இருக்குது. இதை விட முதல் நான் சொன்ன கூட்டம் கொஞ்சம் பரவாயில்லை. ஆனால், இஞ்ச எல்லாம் எங்க மற்றவனின்ர பெயர் வெளீல வந்திருமோ எண்டதுதானே பக்கத்தில நிக்குறவனுக்குப் பிரச்சனையாக் கிடக்கு.

போனமாதம் பாருங்கோ பக்கத்தில நடந்த விழாவொண்டுக்குக் கூப்பிட்டிருந்தவங்கள். எனக்கு உண்மையாவே போக மனமில்லை பாருங்கோ. அழைச்ச நபர் எனக்கு அண்மைய காலப் பழக்கமாக இருந்தாலும், விழா நடந்த இடத்தில இருக்கிற ஆட்களுக்கு அவர் கொஞ்சம் நீண்டகாலப் பரிச்சயமுள்ளவர். அந்த இடத்தில நடந்த விழாவுக்குரிய அடிப்படையே அவர்தான் பாருங்கோ. ஏன் எண்டால் இப்ப விழாக்கொண்டாடுற ஆக்கள், அவருடைய ஆரம்பப் பணிகளை மறைச்சு, இந்த விழாவைக்கொண்டாட முயற்சிக்கினம் எண்டு அரசல் புரசலாகக் கேள்விப்பட்ட நிலையில தான் நான் அங்க போனனான் பாருங்கோ. அதுக்கு முதலே அந்த ஆண்டு விழா சம்பந்தமாக வெளியிட இருந்த புத்தகத்தில, அந்த விழாவுக்கான அடிப்படையாக இருந்த நபரின்ர பெயரைப் போடாமலே புத்தகத்தை அடிக்கக் குடுத்திட்டினம் எண்டு கேள்விப்பட்டனான் பாருங்கோ. அப்பிடி நடவாது எண்டு நான் வேற ஒருத்தரோட வாய்த்தர்க்கம் செய்து, "வேணுமெண்டாப் பாரும், அவரின்ர பெயர் புத்தகத்தில வராது" எண்டு நான் ஒருத்தரோட மல்லுக்கட்டின பிறகுதான் அந்த விழாவுக்கு நான் போயே ஆகவேணும் எண்ட கட்டாயம் எனக்கு உருவாகீட்டுது. அட ஏன்ராப்பா உவ்வளவு மல்லுக்கட்டுறாங்கள் எண்டு யோசிச்சுக்கொண்டு உள்ள போனால், அங்க நடந்தது பெரிய அட்டகாசம் பாருங்கோ.

அந்த விழாவுக்கு, அந்த நகரத்தின்ர நகரபிதாவையும் கூப்பிட்டிருக்கினம். அடேய், நகர பிதாவைக் கூப்பிடுறதெல்லாம் இருக்கட்டும், அந்த இடத்தில அந்த ஆண்டுவிழாவுக்கான அடிப்படை யார் எண்டு தெரிஞ்சும், அந்தாளைத் திட்டமிட்டு அவமதிச்சுப் போட்டியளே. இனி நகர பிதா வந்தா என்ன, நகர மாதா வந்தா என்ன..? ஆனாலும், இப்ப அந்த இடத்தில ஆதிக்கம் சமேத

அட்டகாசம் பண்ணுற ஆக்கள் தான் இதைத் திட்டமிட்டுச் செய்யினும் எண்டு தெரிஞ்சு அதுக்கு எதிராகவும் ஒரு கூட்டம் அங்க தயாராய் நிண்டது பாருங்கோ. அப்பாடா இந்த இடத்திலயாவது ஒருத்தனுக்கு நீதியை நிலைநாட்டக் கொஞ்சப்பேர் நிக்குறாங்கள் எண்டு கொஞ்சம் மகிழ்வாய் இருந்துதுபாருங்கோ.

வாசலிலே இருந்து நகர பிதாவை உள்ளுக்க அழைச்சுவர இருந்த ஆக்களோட ஒட்டிக்கொண்டு, பழையவர்களை மதியாத குழுவின் தலையும் உள்ளுக்க வர முயற்சி செய்ய வெடிச்சுது பிரச்சனை. உந்தக் கறுவலாலதான் உவ்வளவு பிரச்சனையும் எண்டு எனக்குப் பக்கத்தில இருந்தவர் திடீரெண்டு கறுவிக்கொண்டு எழும்ப, "கறுவல்" இண்டைக்கு வறுவல் ஆகப்போகுது எண்டுதான் நான் நினைச்சன். ஆனால் யாரோ பிடிச்சு இருத்திப் போட்டாங்கள். நகர பிதாவையும் வாசலிலே வைச்சுக்கொண்டு வாய்த்தர்க்கம் நடக்க நடக்க எனக்கு விசராக்கீட்டுது பாருங்கோ. ஒரு நகர பிதாவை வாசலிலே வைச்சுக்கொண்டு நீங்கள் பிரச்சனைப் பட்டால், இனி எங்கயாவது நீங்கள் அழைச்சாலும் அந்த நகரபிதா வருவரே..? பிரச்சனை முத்தும்வரைக்கும் வைச்சு இழு இழு எண்டு இழுத்துப்போட்டு, சண்டை பிடிக்கிறதுக்கு நேரம் இப்பவோ கிடைச்சது..? அட குறுக்கால போக, அந்த நகரத்திலே நடக்கிற அந்த விழாவுக்கு, அந்த நிகழ்வுக்கு அடிப்படையான நபரையே அழைக்கேல்லை எண்டால், அங்க இருந்தவன் எல்லாம் என்னதான் செய்தியளோ எனக்குத் தெரியாது.

பிரச்சனை என்னவெண்டாப் பாருங்கோ, அந்த இடத்தில எதுக்காக அந்த விழா நடக்குதோ, அந்த விழாவுக்கான அடிப்படையைப் பதினைஞ்சு வருசத்துக்கு முதல் உருவாக்கின நபரையல்லோ முதலில அழைக்கவேணும். ஆனால் அது முடியாதாம். ஏன் எண்டால் அந்த நபர் இப்ப இவையோட செயற்பாட்டில இல்லையாம். அடேய், யேசுநாதர் கூடத்தான் இப்ப செயற்பாட்டில இல்லை, அதுக்காக அவனவன் கும்பிடாமலே இருக்கிறானே..., இல்லை தெரியாமக் கேக்கிறன். முதல் உந்த விழாவின்ர தற்போதைய தலைவரைப் பிடிச்சு, முழந்தாளில இருத்தி நாலு விசுக்கு விசுக்க வேணும் பாருங்கோ. இப்ப இருக்கிற தலைவருக்குக் கட்டளையிட்ட அதிமேதாவித் தலைவர் இருக்கிறாரல்லோ. அவர் எல்லாரையும் வெண்ட தலைவராம் பாருங்கோ. அவர் வாழ்நாள் சாதனையாளன் பாருங்கோ. அவரின்ர நிருவாகத்துக்குக் கீழ பணிசெய்த ஒரு சகோதரிக்கு உவர் குடுத்த ஆய்க்கினையால அவ இப்ப கொஞ்சம் தள்ளிப் போய் இருக்கிறா பாருங்கோ. ஆனாலும் சிங்கம் விடாமல் முயற்சி செய்து, அவவின்ர பிறந்தநாளைக் குறிச்சு வைச்சுப்போட்டு அங்க போயிருக்குது. அங்க போக, அந்தச் சகோதரியின்ர சகோதரரும், கணவனுமாகச் சேர்ந்து ஆளைக் கலை கலை எண்டு கலைச்சுக்கொண்டு வந்து சிங்கத்தின்ர வீட்டு வாசலிலே கும்பிடாத குறையா விட்டுட்டுப் போயிருக்கிறாங்கள். உதெல்லாம் பெரிய மேதாவித்தனமோ இல்லைத் தெரியாமாக் கேக்குறன், நீர் வந்து இன்னொரு மனிசன் உருவாக்கின விசயத்துக்கான விழாவில பங்குபற்றுறதும் இல்லாமல், அவரையே வரக்கூடாது எண்டு தடை போட்டிருக்கிறீர் பாரும். உவருக்கெல்லாம் கழுவேற்றிக் கொழுப்பிறக்கவேணும் பாருங்கோ.

ஒரு மாதிரித் தள்ளுப்பட்டுக் கிள்ளுப்பட்டு, நகரபிதாவோட சேர்ந்து கறுவல் சிங்கமும் உள்ள வந்திட்டுது. உந்தப் பிழைப்புக்குப் பிச்சையெடுக்கலாம் எண்டார் எனக்குப் பக்கத்தில இருந்தவர். ஐயோ இந்தப் பிழைப்புக்காக பிச்சையும் எடுக்கலாம் எண்டு உவங்கள் அலையுறாங்கள் எண்டு நான் சொல்ல, ஆள் சிரிப்பை அடக்க முடியாமல் எழும்பி அங்கால போட்டுது. உள்ளுக்க வந்தால், முதல் வரிசையில போய் இருக்கிறதுதானே வழமை. புரட்டாதிச்சனிக்கு காகத்துக்குப் படைக்கிற மாதிரி, இரண்டு வடையும் ஒரு தேத்தண்ணியும் வைச்சிருப்பங்கள். அதில போய் கணக்கா ஆள் இருந்திச்சுது. அதே மாதிரி, இப்ப கட்டளையிடும் சிங்கமும் வந்து உள்ளுக்க இருந்திச்சுது. உண்மையாப் பார்த்தால் பாருங்கோ, அந்த இடத்தில இருக்க வேண்டியது அந்த நிகழ்வு மேடைக்கான அந்தக் குழுமத்தை நிறுவிய நபர் தான் பாருங்கோ. ஆனால் ஆள் அங்க வரவே இல்லை பாருங்கோ. அவருக்காக நின்று வாதாடின ஆட்களுக்கும் அந்த விடயத்தில கொஞ்சம் மனக்கசப்புத் தான் பாருங்கோ. அவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை உள்ளவராக இருக்கலாம் பாருங்கோ. ஆனால் அநியாயத்துக்கு விட்டுக்கொடுக்கிற மனப்பான்மை உள்ளவராக இருக்கக்கூடாது பாருங்கோ.

எந்த மேடைக்கு வந்தாலும் கட்டளையிடும் சிங்கம் மேடையில ஏறின பிறகுதான் கறுவல் சிங்கம் மேடையில ஏறும். கட்டளையிடும் சிங்கம் மேடையில ஏறி, பி.எச்.டி முடிச்ச கணக்கிலதான் முழங்கும். அங்க வீடு வரைக்கும் கலைச்சுக் கலைச்சு அடிவாங்கின கதை ஒருசிலருக்கு மட்டுமே தெரியும் எண்டுறதால வெளியில வந்து என்னமா முழங்குறான் எண்டு நான் சிலநேரத்தில யோசிக்கிறனான் பாருங்கோ. எத்தினை விசயம் தனக்கு கீழ நடக்குது எண்டு சொல்லத் தொடங்கினால், ஏதோ இந்த யேர்மனியில தமிழ்மக்களை வாழ வைச்ச பெருமை தனக்கு மட்டுமே உண்டு எண்டுறமாதிரிப் பேசுவன் பாருங்கோ. ஆனால் அத்தனையும் உல்ட்டா எண்டுறது கொஞ்சப்பேருக்குத்தான் தெரியும் கண்டியளோ. இண்டைக்கு இஞ்ச நடந்த இந்த விசயத்துக்கு தனக்கும் சம்பந்தம் இல்லை எண்டும், இது இந்த நகரத்திலே உள்ள நபர்களால ஏற்கனவே தீர்மானிக்கப் பட்டது என்றும் எண்டு புருடா விட்டான் பாருங்கோ. எனக்குச் சும்மா தலைக்குள்ள கிர்ரெண்டு வந்திட்டுது. எடே... உனக்கெல்லாம் நல்ல வசமான இடம் இன்னும் சிக்கேல்லை, இல்லை எண்டால் துவட்டி எடுத்திருப்பங்கள்.

அடுத்ததாகக் கறுவல் சிங்கம் மேடையில் ஏறினார் பாருங்கோ. நிகழ்வுகளில பேசுறதுக்கு முதல் நாள் சீமானின்ர ஆவேச உரையைப் பார்த்துக் கொப்பியடிக்கிற பழக்கம் ஆளுக்கு ஏற்கனவே இருக்கெண்டு கேள்விப்பட்டிருக்கிறன். ஆனால் அண்டைக்குத் தான் நேரில பாத்தன் பாருங்கோ. சீமான் எல்லாம் பிச்சை வாங்கவேணும் கண்டியளோ. இந்த இடத்தில நான் யாருக்கும் எதிரி இல்லை எண்டு தொடங்கிச்சு சிங்கம். ஏதோ நீர் சீன இராணுவத்தைத் தானே இவ்வளவு நாளும் எதிர்த்தனீர்.. எண்டு எனக்கு வாயில வந்திட்டுது பாருங்கோ. இஞ்ச நடந்த சம்பவங்களுக்கும், இங்கே அழைப்பு விடப்படாதோர் தொடர்பான விடயங்களிலும் எனக்குச் சம்பந்தம் கிடையாது எண்டு அடிச்சான் பாருங்கோ ஒரு தேங்காய். எடே, உப்பிடித் தானே எங்கயோ ஒரு மேடையில யாருக்கோ அரைக்க வெளிக்கிட்டு, செம்மையா வாங்கினதாகக் கேள்விப்பட்டன். அது உண்மையில்லையே..? எங்கயோ நடக்கிற விழாவிலே வந்து நிண்டுகொண்டு, அவன் வரக்கூடாது, இவன் வரக்கூடாது எண்டு திட்டம்போட்டுக் குளறுபடி செய்யுறதே நீதான் எண்டு சனம் சொல்லுது. இதென்னடா புதுக்கதையாக் கிடக்கு.

ஒரு இடத்தில மனுசன் ஒரு குழுமத்தை உருவாக்கி, அதைச் செம்மையாகச் சில வருசம் நடத்தின பிறகு, உம்மைப்போல ஆக்கள் திடீரெண்டு வந்து நிண்டு நாட்டாமை பண்ணுறதுதானே இப்ப வழமை. ஆனால் உது எப்பவும் நிலையாதப்பு. உந்த விசயத்துல குழுமத்தை உருவாக்கின நபரிலையும் பிழை இருக்குது பாருங்கோ. அவர் அந்த இடத்தை விட்டு விலகி நிண்டிருக்கக்கூடாது கண்டியளோ. என்னால பிரச்சனை வரக்கூடாது எண்டும் விட்டுக்கொடுப்பு எண்ட பெயரிலயும் சிலர் விலகி நிக்குற காரணத்தாலதான் உப்பிடியான கள்ளரெல்லாம் இடையில வந்த அட்டூழியம் பண்ணுறாங்கள். அதோட அந்த நகரத்திலே இருக்கிற ஆட்களும் பொய்க்கு வால் பிடிக்காமல், உண்மையைக் கண்டுகொள்ள முயற்சிக்க வேணும் பாருங்கோ. இல்லையெண்டால் தமிழரைத் தமிழரே அடிமைப்படுத்துறதை யாரும் தவிர்க்கமுடியாது பாருங்கோ.

ஆளை ஆளு புகழ்வதெல்லாம்
பணத்துக்காகத் தான் பணம்
அகன்று விட்டால் புகழ்ந்த கூட்டம்
இகழும் உண்மை தான் ...
அப்ப வரட்டே






# கிராமங்களில் இருந்து ஐரோப்பாவரை
# இசை – நாடக – கூத்துக் கலை

**வண்ணை தெய்வம்**

நாம் தொடர்ந்து பதிவு செய்து வரும்கூத்துக் கலைஞர்கள் வரிசையில் இந்த மாதமும் மூன்று மூத்த கலைஞர்களை அறிமுகம் செய்கின்றோம்.



திரு.வீ.ரி.செல்வராசா
இசை நாடகக் கலைஞர்

வீ.வீ.வைரமுத்து அவர்களின் காலத்தில் இசை நாடகத் துறையில் சிறந்து விளங்கிய கலைஞர்களில் திரு.வீரி. செல்வராசா அவர்களும் முக்கியமான கலைஞராவார். இவருடைய பூர்வீகமும் காங்கேசன்துறைதான். மேலதிக சிறப்புத் தகவல் இவர் நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களின் மைத்துனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவரைப்பற்றிய பூர்வீகம் சொல்லவேண்டுமானால் இவரது தகப்பன்வழிப் பேரனார் வைரவியும், தந்தையார் தில்லையரும், சிறிய தந்தையார் பிள்ளைநாயகமும், இசைத்துறை நாடகத்துறை ஆகியவற்றில் சிறந்து விளங்கிய கலைஞர்களாவார்கள். தாயார் வழிப் பேரனான அண்ணாவியார் இராமன் அவர்கள் நாடறிந்த புகழ் பெற்ற கலைஞராவார். மாமனார் நாகமுத்து அவர்கள் நாடகத் துறையிலும் காவடி ஆட்டக் கலையிலும் அண்ணாவியாராகத் திகழ்ந்தவர். தாயார் சின்னம்மாவும் இசைஞானம் உடையவர். இவர்களது வழிகாட்டலிலத்தான்; திரு செல்வராசா அவர்களும் இசை நாடகத் துறையில் சிறந்த கலைஞராகத் திகழ்ந்தார்.

தனது பன்னிரண்டாவது வயதில் சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் சாவித்திரி பாத்திரத்தில் நடிக்க ஆரம்பித்து பின்னர் வைவரமுத்து அவர்களின் நெறியாழ்கையில் நடிக்க ஆரம்பித்து பிற்காலத்தில் வைரமுத்து அவர்களுக்கு போட்டியான ஒரு கலைஞராக மக்களால் மதிக்கப்பட்டவர் திரு செல்வராசா அவர்கள். ஆனால் வைரமுத்து அவர்கள் மரணிக்கும்வரை வசந்தகான சபா,வில் இணைந்து கலைப்பணி ஆற்றியே வந்தார்

அன்றைய காலகட்டத்தில் செல்வராசா என்னும் பெயரையுடைய வி.என்.செல்வராசா, சி.ரி.செல்வராசா, சிதம்பரம் செல்வராசா ஆகியோரும் புகழ்பெற்ற கலைஞர்களாக இருந்ததனால் இவர்களுடைய பெயருக்கு முன்னர் வரும் பெயர்க் குறிப்புக்களே இந்தக் கலைஞர்களை மக்களுக்கு அடையாளம் காட்டி வந்தன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்ததாபனத்திலும் தனது நாடகங்களை ஒலிப்பதிவாக்கி நடித்து வந்த இவர் நடிகமணி அவர்களுடன் இணைந்து நடித்த நாடகங்கள் இலங்கை ரூபவாகினியிலும் ஒளிபரப்பாகியிருக்கின்றன.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட மேடைகளைக் கண்ட இந்தக் கலைஞனின் கலை வரலாறு மிக நீளமானது.

திரு.கார்த்திகேசு . மதியாபரணம்
நாட்டுக் கூத்துக் கலைஞர்



யாழ்ப்பாணம் அரியாலையை பிறப்பிடமாகக் கொண்ட மதியாபரணம் அவர்களின் தந்தையார் திரு கார்த்திகேசு அவர்கள் நாட்டுக்கூத்து, மத்தள அண்ணாவியாராவார். தந்தையாரையே தனது குருவாக மதித்து அவரின் நாடகங்களைப் பார்த்தே அந்தத்துறையில் கலைஞராக உருவெடுத்து முதல் முதலில் 1969ம் ஆண்டு தந்தையார் பழக்கிய குசலவன் நாட்டுக்கூத்தில் திரைக்குப் பின்னால் நின்று கொப்பி பார்ப்பவராக மேடையில் ஏற ஆரம்பித்தவர் பின்னர் நாட்டுக்கூத்துக்குரிய கதையம்சம், வரவு, விருத்தகம், தரு, கொச்சகம், கொச்சத்தரு, கல்வெட்டு, ஆசிரியம் ஆகியவனவற்றை முழுமையாக தந்தையாரிடடமே கற்று பின்னாளில் சிறந்த கலைஞனாக விளங்கியவர்.

இன்று சில அண்ணாவிமார்களே காலத்திற்கேற்ற வகையில் நாட்டுக் கூடத்துக்குள் சில நவீனங்களைப் புகுத்திவரும் நிலையில் இன்றளவும் நாட்டுக்கூத்தின் மரபுகளை மாற்றாது மேடையேற்றிவரும் கலைஞர் திரு மதியாபரணம் அவர்கள்.

அரியாலையில் வாழ்ந்து மறைந்த புகழ்பெற்ற ஓவியரும், கலைஞருமான திரு பத்மநாதன் அவர்களது பெயரில் இயங்கும் பத்மகலா மன்றத்தின் மூலமாக பல கூத்துக்களை மேடையேற்றிய இக் கலைஞன்தான் இன்றுவரை பத்மகலா மன்றத்தை இயக்கிவருகின்றார் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.


திரு.வடிவேலு . செல்வரத்தினம்
இசை நாடகக் கலைஞர்

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகக் சொண்ட இந்தக் கலைஞர் 1954ம் ஆண்டில் ஸ்ரீ கலைமகள் நாடக சபாவின் 'கன்னிக்கோட்டை" என்னும் நாடகத்தில் தனது 7 வயதில் மணிமாறன் என்னும் குழந்தை நடிகனாக கலை உலகில் பிரவேசித்து பள்ளிப் படிப்போடு நடிப்புப் பயிற்சிஞ் மற்றும் பாடும் பயிற்சிகளையும் கற்க ஆரம்பித்தவர் வாலிப வயதில் அதிகமாக பெண் வேடங்களிலேயே நடிக்க ஆரம்பித்தார்.



இவர் பெண் வேடம் ஏற்று மேடையில் தோன்றினால் இவரின் தோற்றம், குரல், நளினம் அனைத்தும் ஒன்று சேர்ந்து உண்மையான பெண் போலவே தோற்றமளிக்கும். அரிச்சந்திரா மயானகாண்டத்தில் மட்டும் நடிகமணி வி.வி. வைரமுத்து உட்பட 26 கதாநாயகர்களுடன் இணைந்து நூற்றுக்கும் மேற்பட்ட மேடைகளில் நடித்திருக்கின்றார்!. இலங்கையில் தயாரிக்கப்பட்ட 'நிர்மலா" திரைப்படத்தில் நடிகமணியின் அரிச்சந்திரா நாடகம் சிறப்பு இணைப்பாக இடம்பெற்றிருக்கும் அதில் சந்திரமதியாக நடித்தவரும் இவரே.

இவை தவிர இவர் இயக்கிய நாடகங்கள் 25க்கும் மேல் இருக்கும். பல மேடைகளில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட இந்தக் கலைஞனுக்கு 1980ம் ஆண்டு காரயைம்பதி கலாமன்றத்தினர் 'நடிக கலாமணி" என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்திருப்பதும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

# உளம் திறக்கும் உண்மைகள்...

தொகுப்பு: தமிழ்வழி

"உளம் திறக்கும் உண்மைகள்..." என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள்கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பிவையுங்கள்.
AKARAM - PO BOX 4153, 59037 Hamm - Germany - eMail: editor@akram.eu

## கல்லறை

சிதறிக்கிடக்கும் கல்லறைகள்பற்றி
சிந்திக்க யாரும் இல்லை,
கதிரைகள் பற்றியே இன்றைய
கவலை எல்லோருக்கும்..

## தந்தை

நாடில்லை,
வீடில்லை,
பிள்ளையில்லை,
வாழ்க்கையின்றி வாழ்வது
வழமையாகி விட்டதென்றார்
மாவீரனின் தந்தை..

## அந்த நாளும் வருமா ?

வெறும் ரூபா 22 கோடி!
வைரங்கள் பதிக்கப்பட்ட
உள்ளாசக் கார் இது
எமத பிரதிநிதிகளுக்கு
பரிசாக சிங்களம் தரும்
நாளும் வருமா?

## கண்ணீர்..

மாவீரர்நாளில் அழுவதோடு
மறைந்துபோகிறது
தமிழர்களின் வீரமும்
தன்மானமும்.

## குரங்கின் கையில்

குரங்குகளால் தாஜ்மகால்
இடிந்ததாம் பா.ஜ.க. வை
இப்படி குறிப்பிடுகிறார்களா?
புதிய பாபர் மசூதி, இதுவா ?

## வானத்தில்! உற்றுப் பாருங்கள்!

வன்னி வானில்
வெடித்துச் சிதறி
உயிரைக் குடித்த
கொத்துக் குண்டு
மழை இதுவாம்
சம்பந்தன் சுமந்திரன்
அறியாத காட்சி!


## நெருப்பு...

நெருப்பை ஏற்றிக்கொண்டே
இருக்கிறார்கள்.
அதுவோ
பற்றுவதற்கு வழியின்றி
அணைந்துபோகிறது.

ஆக்கம்:
- பாக்கியம்
- பரம்
- கனிமொழி

# நம்மை நாமே .....!

தேவன்



கத்தியும், வாளும்
கரைபுரண்டோடும் குருதியும்
நம்மை நாம் அடையாளப்படுத்தும்
நகரமாயிருக்கிறது யாழ்ப்பாணம்,

திருகோணமலையிலிருந்த புத்தரை விரட்ட
திரும்பத் திரும்பப் பேரணி நடந்தது ஆனால்
சீனாவை மறுப்பின்றி வரவேற்று வைத்திருக்கிறது
சிந்திக்க மறுக்கும் சமுதாயம்.

தலைமன்னார் எல்லைவரை வந்து
தூண்டிலிடுகிறார்கள் அரேபியர்கள்,
தமிழனுக்கான நெத்தலி மீன்
இந்தியாவிலிருந்து இறக்குமதியாகிறதாம்.

புல்மோட்டையின் கனிமத்தை
அள்ளிப்போக வந்தவனை
அன்று விரட்டியடித்தோம்.
இன்று மூதூரில் அவன்
இருப்பைப் பதிவு செய்கிறான்.

காடுகளால் புலிகள் பாதுகாக்கப்படும் உலகில்
காடுகளைப் பாதுகாத்தனர் தமிழீழப் புலிகள்,
இன்று,
வெறியூட்டப்பட்ட சோனகரால்
வேட்டையாடப்படுகின்றன காடுகள்.

பண்டாரவன்னியன் தொடங்கி
பிரபாகரன் வரைக்கும்
முல்லைத்தீவே கோட்டையாயிருந்தது
முன்பெல்லாம், இன்று
கோட்டைகள் கொத்தடிமைகளான பின்பு
யாராண்டால் நமக்கென்ன ..?

செஞ்சோலைக் குழந்தைகளும்
காந்தரூபன் அறிவுச்சோலையும்
மயூரி மற்றும் செந்தளிர் இல்லமும்
அழிவுற்றுப்போனதென்னவோ உண்மைதான்,
ஆனால்,
அதேபோல எத்தனையோ குழந்தைகள்
இன்றும் ஏங்கிக்கிடக்கிறார்களே ..?

விடுமுறைக்காய் தாயகம் நோக்கி
விழுந்தடித்துப் புறப்பட்டவர்கள்,
விருந்துண்ணுதலும், வீடுகட்டுதலும் நிறைவுற
விரைந்தே வந்து விட்டார்கள்...,
ஓலைக்குடிலில் வாழும் மாவீரர் குடும்பம்
உறவில்லையே அவர்களுக்கு.

துயிலுமில்லங்களைத் துப்பரவு செய்தல்
தூய்மையான அரசியல் வேலையாம்...,
குருதி சிந்தி வீழ்ந்தவர்களை வணங்குதலில்
அரசியல் கலப்பதை விட,
காடு மண்டியே கிடக்கட்டும்
கல்லறைகள்.

வாழ்ந்துபோன வரலாற்றுத்தடங்கள்
சிதைக்கப்படும்போது
வலியின்றி இருந்துவிட்டு,
மண்ணின் வளம் பாழடையும் வேளை
மௌனமாய் வாழ்ந்துவிட்டு....,

மாவீரர்நாளில் கண்ணீர் சிந்துவதால்
ஏமாற்றப்படுவது மாவீரர்களல்ல,
நாமேதான்...... !!!

Lyca TV

உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்

ஒருவருட
இணைப்புச் சந்தா
CHF 89
SET TOP BOX
INCLUDED

புதுப்பித்தல்
CHF 64
14 மாதங்கள்



LycaTV App ஐ
Download செய்து
பார்வையிடலாம்

ஒரு மாதச் சந்தா
CHF6.99
மட்டுமே

Google play · App Store · tv · Roku · AirPlay · chromecast · Samsung SMART TV · LG Smart TV · androidtv · amazon fireTV · kindle fire · XBOX

50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

விஜய் · ZEE தமிழ் · KTV · SUN MUSIC · JAYA TV HD · Lyca Classic · Lyca HD

7000க்கும் அதிகமான TAMIL & HINDI திரைப்படங்கள்



SALES
077 955 9430

CUSTOMER SERVICE
044 555 2320

FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.

www.lycatv.tv

# கறையான் புற்றெடுக்க கருநாகம் குடி புகுந்தது!

பரமு

மறப்போமா மாவீரர் தியாகத்தை துறப்போமா தமிழ் ஈழக் கனவை ?



மாவீரர் மாதம் ஆண்டுகள் பல கழிந்தாலும் என்றும் அவர் புகழ் பாடுவோம்!

இது மாவீரர்களை நினைவு கூரும் மாதம். ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை கருவோடு அழித்துவிடும் பணிகளை இலங்கை இந்திய அரசுகளின் அவர்களின் ஏவல் படையாக மாறி விட்ட தமிழர் தேசியக் கூட்டமைப்பும் நிர்த் தாட்சண்யமாக மேற் கொள்வதை நாம் காண்கிறோம்.

அத்தகைய நடவடிக்கையின் ஒரு அங்கமாகவே அண்மையில் யாழ்ப்;பாணத்தில் இந்திய துணைத் தூதர் நடத்திய மாத்மா காந்தி பிறந்த நாள் விழாவும் உலக அமைதி தின விழாவில் இந்தியாவிலிருந்து பட்டிமன்றம் நடத்த பேராசிரியர் முனைவர் திரு.கு. ஞான சம்பந்தம் அவர்களின் சிறப்பு வருகையும் விளங்கியது.

1987ல் இதே காலப் பகுதியில் நடந்த அமைதிப் படையின் ஆக்கிரமிப்பை மறைக்கவும் தமிழர் அக்டோபர் 10ல் யாழ் தமிழ் மக்கள் மீது இந்திய அமைதிப் படையின் தாக்குதல்களை மக்கள் மறந்து விடவும் ஒழுங்கு படுத்தப் பட்ட நிகழ்வாகவே இதனைப் பார்க்க வேண்டி உள்ளது. இந்த விழாவில் தமிழரின் ஏகப் பிரதி நிதிகளாக விழங்கும் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவையார் ஆசி வழங்கியதன் மூலம் தமிழ் மக்கள் இந்திய அரசின் பின்னால் உள்ளார்கள் என்பதை காண்பிக்கவும் எளிதாக இருந்தது.

எனவேதான் இம்மாத அகரம் இதழின் அட்டைப் படம் நம் மாவீரர் நினைவையும் மக்கள் இன அழிப்பையும் குறிக்கும்வகையிலும் வடிவமைத்து, தமிழ் மக்களை மூளைச் சலவை செய்து ஏமாற்றும் தந்திரம் பலிக்காது என்பதை அகரம் நினைவு படுத்துகிறது.

தமிழரசுக் கட்சியை மக்களின் அரசியல் அபிலாசைகளை பெற உருவான கட்சியாக எழுபதாண்டுகளாக தொடக்க கால உறுப்பினர்களும் தொண்டர்களும் இரவு பகல் அயராது உழைத்து உருவாக்கினர். தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்த பின்னர் நடந்த முதல் பொதுத் தேர்தல் 1952ல் நடந்தது. அதில் ஈழத்துக் காந்தி எனவும் தந்தை செல்வா எனவும் பின்னாளில் பெயர் பெற்ற சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் உட்பட கட்சி படு தோல்வியைச் சந்தித்தது.

அன்று தொடக்கம் அது தன்னை வளர்த்துக் கொள்ள காலிமுகத் திடலில் 1956லும் வடக்கு கிழக்கு கச்சேரிகளின் முன்னால் 1960களிலும் பசி கிடந்து பட்டினியால் மெலிந்து தந்தை செல்வாவும் அப்பாவித் தமிழ் மக்களும் சிங்களக் காடையராலும் இராணுவத்தாலும் அடி உதை வாங்கி இரத்தமும் வியர்வையும் சிந்தி உயிர் பலி

கொடுத்து போராடி மக்களின் கட்சியாக உருப் பெற்றது.



சத்தியாக்கிரகிகளுடன் பண்டாவுடனும் டட்லியுடனும் அமைதிப் பேச்சுகள் நடத்தி ஒரு சுமூகமான அரசியல் தீர்வை பெற ஒப்பந்தங்கள் செய்து ஏமாற்றப் பட்ட நிலையில் 1965ல் டட்லியுடன் மாவட்ட சபை மூலம் தமிழரின் அரசியல் உரிமைகளைப் பெற ஒப்பந்தம் செய்து தேசிய அரசை அமைத்தது தமிழ் அரசுக் கட்சி. கட்சி உறுப்பினர் யாரும் அரசுடன் இணையாமல் தனது கன்னித் தன்மையைக் காப்பாற்ற கட்சியின் அன்றைய செனட் சபை எனும் மூதவையின் உறுப்பினராக கொண்டு வரப் பட்டவர்தான் முருகேசு திருச்செல்வம் என்கிற நீலன் திருச் செல்வத்தின் தந்தையார். அது முதல் படிப்படியாக தமிழரின் அரசியல் தலைமை கொழும்பு மயமாகி தமிழ் மக்களுக்கு அந்நியமாகச் செயற்படத் தொடங்கியது.

மாவட்ட சபை மசோதா இயற்ற வசதியாக திருச் செல்வம் உள்ளாட்சி வீடமைப்பு அமைச்சராக அவதாரம் எடுத்தார்.அவரது பிரத்தியேகச் செயலாளராக தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவு அமைப்பான தமிழ் அரசாங்க தமிழ் எழுது வினைஞர் சங்கத்தின் அன்றைய பொதுச் செயலாளர் ஆர். பாலசுப்பிரமணியம் என்ற அரச எழுது வினைஞர்(கிளாக்கர்) பணிபுரிய நியமிக்கப் பட்டார். குறித்த ஒரு வருடம் முடிந்தும் மசோதாவை திருச்செல்வம் பாராளுமன்றத்துக்கு கொண்டு வரவே இல்லை. வருடங்கள் ஒவ்வொன்றாக போய் கொண்டிருந்தும் மாவட்ட சபை மசோதாவை திருச்செல்வம் கொண்டு வரவே இல்லை.

அது பற்றி கட்சித் தலைமை ஏதும் அலட்டிக் கொண்டதாகவும் தெரியவில்லை. அக்காலத்தில் கட்சித் தலைமையின் கூட்டம் கொள்ளுப் பிட்டியில் இருந்த தந்தை செல்வாவின் இல்லத்தில் நடப்பதாக பத்திரிகைச் செய்திகள் அறிவிப்புகளாக வரும். அன்றே தமிழரசுக் கட்சி என்ற கறையான் புற்றில் கருநாகங்கள் என்ற கொழும்புச் செல்வங்கள் குடிபுகுந்து படம் எடுத்து ஆடத் தொடங்கி விட்டன. அவர்களின் நோக்கம் மக்களின் தேவையாக இல்லாமல் அரச போக வாழ்க்கை மட்டுமே குறியாக மாறிவிட்டது.

இன்று சொகுசுக் கார்களுக்காக மற்றும் அரச கொடுப்பனவுகள் வெட்டுக் கொத்துகள் எனப்படும் சம்பளம் அலவன்சு தொலைபேசி தொடர்புகள் எரிபொருள் போன்ற சம்பளம் கிம்பளம் பெறுவதையே பிறவிப் பெரும் பயனாக நினைத்து கடமை மறந்த கனவான்களாக மாறிய எமது மக்களின் பிரதிநிதிகளே அன்றும் அதிகம் இருந்தனர்.

அடி உதை வாங்கி பட்டினி கிடந்து சத்தியாக்கிரகம் நடத்திய மக்களிடையே தலையைக் காட்டிச் சாமர்த்தியமாக பிரபலம் அடைந்த பலருக்கு கொழும்பின் உல்லாச வாழ்க்கை எந்த ஊழலைச் செய்தாலும் அதுவே தர்மம் எனக் கருதும் தாராள கருணை உள்ளம் வந்து விட்டது.

இன விடுதலைக்காக உருவாகியதாகக் கூறப்பட்ட கட்சி தேசிய அரசாங்கம் என்ற இன்றைய நல்லாட்சி போன்ற ஒன்றை உருவாக்கி அரச செல்வாக்கும் வசதிகளும் அனுபவிக்கத் தொடங்கியது. அக்காலப் பகுதியல் அக் கட்சியின் ஒரு முக்கிய தலைவர் இறக்குமதி வியாபாரிகளுக்கு அரசின் அனுமதிகளைப் பெற்றுக் கொடுப்பதே பெரும் சேவையாக கொண்டிருந்தார்.

கொழும்பிலே வெறுமனே ஈ ஓட்டி வியாபாரம் நடத்திய கொழும்புச் செட்டித் தெரு வர்த்தகர் ஒருவர் அந்த கட்சிப் பிரமுகரின் நெருக்கமான உறவைத் தேடியதால் மிகப் பெரும் செல்வத்தில் மிதந்தார். இறக்குமதி அனுமதி பத்திரங்களை அந்தக் கட்சியின் பிரமுகர் மூலம் மிக எளிதாகப் பெற்றுக் கொண்டார். இறக்குமதி வர்த்தகம் செய்யும் உரிமம் ஒன்றே இருந்து விட்டால் போதும் பொருட்களை அவரே இறக்குமதி செய்யத் தேவை இல்லை.

எனவே அவரது பெயரில் பெறப்பட்ட அனுமதிப் பத்திரங்களை வேறு வர்த்தகர்களே பயன்படுத்தி இறக்குமதிகளைச் செய்ய முடியும். இன்று வரி விலக்குப் பெற்ற சொகுசுக் காரகளின் இறக்குமதி அனுமதிப் பத்திரத்தை விற்று கோடி சீமான்கள் ஆகியவர்கள் போன்றுதான் அன்றும் நடந்தது.

அந்த தலைவரும் இறக்குமதி வர்த்தகரும் அனுமதிப் பத்திரத்தால் அந்த ஐந்து வருடங்களும் ஒரே பண அடை மழையில் நனைந்தார்கள்;. மாவட்டசபை மசோதா இன்று வரும் நாளை வரும் எனக் காத்திருந்த மக்களுக்கு ஐந்தாண்டு முடிவில் வந்தது திரிகோண மலையைப் புனித நகராக்கும் மசோதாவை திருச்செல்வம் கொண்டு வந்தார். அதுவும் கருச் சிதைவுப் பிரசவமாகி தாயான தமிழரசுக் கட்சி மட்டுமே உயிர் தப்பியது.

ஒரே வருடத்தில் சட்டம் உருவாக்கி தமிழ் மக்களுக்கான மாவட்ட சபை என்ற அரசியல் தீர்வைப் பெற்றுத்

தர தவறிய தந்தை செல்வா தமிழ் மக்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும் எனக் கூறித் தப்பித்துக் கொண்டார். 1974ல் ஜீ.ஜீ. தொண்டமான் ஆகியோருடன் இணைந்து வட்டுக் கோட்டையில் தனித் தமிழ் ஈழம் ஒன்றுதான் தீர்வு எனவும் அதனை எவ்வகையிலும் பெறுவதே தமிழர்களின் இலட்சியம் எனவும் முடிவு செய்து விடுத்த பிரகடனம்தான் வட்டுக் கோட்டைப் பிரகடனம். அதற்கென உருவாக்கப் பட்டதே (த.வி.கூ.) தமிழர் விடுதலைக் கூட்டணி.

அப்போதும் திருச்செல்வம் அம்முடிவை ஏற்காது சிங்களத்தின் தயவால் தமிழினம் வாழ வேண்டும் என்றே விரும்பினார். இதன் மூலம் கடந்த ஆட்சியில் கட்சியை வழி நடத்திய அதே கனவான் மக்களின் தேவை பற்றிய கருத்தோடு மாறுபட்டே செயற்பட்டார் என்பது தெளிவாகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமாக திரு.அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் தெரிவானார். தலைவர்களாக ஜீ.ஜீ.யும் சௌமிய மூர்த்தி தொண்டமானும் இருந்தனர்.

இவர்களில் புன்னகை மன்னன் அப்பாப்பிள்ளை மட்டும் மாறுபட்டு மக்களின் அரசியல் கொள்கையில் உறுதியாக இருந்தார் என்பதை எப்படி உறுதியாக நம்ப முடியும்? அவரது உண்மை முகம் தேர்தலின் பின்னர் அவர் எதிர்க் கட்சித் தலைவராகிய பின்னர் அவர் பேசியதும் நடத்திய அரசியலும் தெளிவாக வெளிப்படுத்தின. அவரும் அவரது துணைவியாரும் தேர்தல் மேடைகளில் முழங்கிய தமிழின உரிமைப் போர் முழக்கங்களை எவராலும் கைதட்டி ஆர்ப்பரிக்க முடிந்ததே தவிர அவர்களின் நடவடிக்கைகளில் சந்தேகப் பட முடியவில்லை. எனவே அவர்களின் தேர்தல் மேடை முழக்கங்கள் சிங்களவர் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தவும் தமிழரின் வாக்குகளைக் குவிக்கவும் மட்டுமே உதவின.

1977ல் நடந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் த.வி.கூ. தமிழ் பேசும் மக்களின் மிகப் பெரும் ஆதரவைப் பெற்று பாராளுமன்றத்தின் எதிர் கட்சியாக இடம் பெற்றது. அத்தனை சிறப்புக்கும் வட்டுக் கோட்டைப் பிரகடனத்தை ஆதரித்து ஆணை வழங்கிய வடக்கு கிழக்கு மாகாண மக்களே காரணம். ஆனால் எதிர்க் கட்சித் தலைமையை பெற்றுக் கொண்ட அமிர்த லிங்கம் தமது கட்சியின் தேர்தல் வாக்குறுதிகளை மறந்தும் அந்த பதவி பெற்றுத் தந்த மக்களின் அமோக வாக்குகளைப் பெற உதவிய இளைஞர்களை புறக்கணித்து எள்ளி நகையாடியும் பகைமையை தேடிக் கொண்டார்.

அவரது கொலையை இன்றுவரை பயங்கரவாத படு கொலையாகவே உலகம் எங்கும் பிரச்சாரப் படுத்துவது சரியோ தவறோ . ஆனால் புலிகள் இயக்கத்தை ஜனநாயக விரோத பயங்கரவாத அமைப்பாகவே அடையாளப் படுத்துவதில் இலங்கை இந்திய அரசுகளின் பிரச்சார அமைப்புகளின் வேலை மிகச் சிறப்பாக இன்றும் முன்னெடுக்கப் பட்டு வருகிறது.

இத்தகைய பிரச்சாரமே இன்றும் பாதிக்கப் பட்ட, வெள்ளைக் கொடியோடு சரண் அடைந்தவர்களின் படு கொலைகள் மற்றும் காணாமல் போக்கடிக்கப் பட்ட மக்கள் தொடர்பான பொறுப்புக் கூறல் அனைத்திலும் இருந்து இலங்கை அரசு தப்பித்துக் கொள்ள உதவுகின்றது.

1982ல் ஜே.ஆர். கொண்டு வந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி அரசியல் அமைப்புச் சட்டமும் தமிழரின் அரசியல் போராட்டத்தை நசுக்க ஏற்படுத்திய 6வது சட்டத் திருத்தமும் பயங்கர வாதத் தடுப்புச் சட்டங்களும் தமிழ் மக்களை 1983 முதல் இன்று வரை:

செம்மணி, வடமராட்சி, முள்ளிவாய்க்கால் மட்டக்களப்பு திரிகோணமலை என இன்றுவரைக்கும் தமிழர் உயிர்கள், உடமைகள், இயற்கை வளங்கள் அனைத்தையும் பறித்ததோடு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்து எல்லா சிங்கள ஆட்சியாளரும் தமது இனவெறி அரசியலை நடத்தி வருகின்றனர்.




அன்று இப்படியாய் போராடியவர்

இன்று அவரது கூட்டால் உருவான நல்லாட்சியும் சிங்களவருக்கு மட்டும்தான நல்லாட்சியாக தமிழ்

மக்கள் பார்க்கும் நிலைதான் உருவாகி உள்ளது. தமிழரின் ஒரே விடுதலை இயக்கமாக உருப் பெற்று ஒரு நடை முறை அரசை ஏற்படுத்தி அதில் அனைத்து ஆட்சி முறைக் கட்டமைப்புகளை உருவாக்கி ஜனநாயக வழியில் அங்கீகாரம் பெறுவதற்காகவே த.தே.கூ. புலிகளின் தலைமையால் உருவாக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு.வே. பிரபாகரன் தம்மால் முன்னர் தடை செய்யப்பட்ட தண்டிக்கப் பட்ட தமிழ் அரசுக் கட்சி மற்றும் (புளொட்) தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம்.(ஈ.பி.ஆர்.எல்.எப்.) ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி, (ரெலோ) தமிழ் ஈழ விடுதலை இயக்கம் என்பவற்றை தமிழர் தேசியக் கூட்டமைப்பு என உருவாக்கி அதன் தலைமைப் பதவியை தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்த திரு.இராஜவரோதயன் சம்பந்தனிடம் வழங்கி தமிழ் மக்களின் அரசியல் குரலாக சர்வதேசத்திடம் ஒலிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

அதனை ஏற்றேதான் த.தே.கூ. மக்கள் முன் வந்து இன்று வரைக்கும் பொதுத் தேர்தல்களில் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று வருகிறது. ஆனால் அன்று உருவான அதே த.தே.கூட்டமைப்பா இன்றும் உள்ளது ? இன்றும் அதே கோரிக்கைகளை முன்வைத்தா அரசியல் நடத்துகிறது?



இவற்றுக்கு நேர்மையான பதில் இருந்தால் போரின் உச்சக் கட்டத்தில் இவர்கள் 2009ல் புலிகளின் தொலை பேசித் தொடர்புகளை துண்டித்து விட்டு புது டில்லிக்குப் போனது ஏன் ? அங்கு போரை நிறுத்த இவர்கள் கோரிக்கை விடுத்தார்களா? யாரிடம் என்ன கேட்டார்கள் ?



அன்று முதல் இன்று வரை கூட்டமைப்பிலிருந்து விரட்டப் பட்டவர் எத்தனை பேர்? எதற்காக விரட்டப் பட்டனர்? போர் குற்ற சர்வ தேச விசாரணையும் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நீதியும் நிவாரணமும் பெற்றுக் கொடுக்க என்ன செய்தார்கள்? ஏன் மக்கள் கோரிக்கைகளை உலக அரங்கில் முன்னெடுக்க மறுக்கிறார்கள்?

எமது மக்கள் இன்று மாதக் கணக்கில் அறவழி எதிர்ப்பு ஆர்பாட்டங்களையும் பேரணிகளையும் சத்தியாக் கிரகங்களையும் நடத்துவது கண்டு அவற்றைப் பற்றிக் கவலையே படாமல் இலங்கை இந்திய அரசுகளின் தமிழ் இன அழிப்பு அரசியலை முன்னெடுப்பதும் அல்லாமல் மக்களின் அரசியலைப் பேசும் வட மாகாண முதலமைச்சர் விக்கினஸ்வரன் மற்றும் அனந்தி சசிதரன் போன்ற தமிழன மக்களின் குரலாக விளங்குபவர்களை கடுமையாக எதிர்ப்பது ஏன்?

த.தே.கூ. அன்று முதல் எத்தனை பேர் புதிதாக இணைக்கப் பட்டனர் ? எந்த நோக்கத்தில், எந்த இலட்சியத்தின் அடிப்படையில் யார் யாரெல்லாம் இணைக்கப் பட்டனர்? இந்த மாற்றங்கள் அமைப்பு ரீதியாக ஆய்வு நடத்தப் பட்டு அங்கம் வகிக்கும் அனைவரின் ஒப்புதலுடனும் செய்யப் பட்டதா?

மக்களின் அரசியலை முன்னெடுக்கும் விக்கினேஸ்வரன் துரோகி என்றால் ஐ.தே.க. உறுப்பினராக இருப்பதாக சந்தேகிக்கப்படும் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் போர்க் குற்ற விசாரணையும் வேண்டாம், சிங்கள அரசு என்ன உரிமைகளை (?) தருகிறதோ அவற்றைப் பெற்றுக் கொள்வதுதான் சாமர்த்தியம் என்று ராஜதந்திரம் பேசுகிறார்.

மற்றொரு கதிர்காமராக அமிர்தலிங்கமாக, அல்பிரட் துரையப்பா டக்லஸ் போன்ற அரசியல் பேசும் அவர் வழிதான் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் என்றால் அதற்கு தனியாக த.தே.கூ. என்ற அமைப்பு எதற்கு?


NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE

நீங்கள் ஒரு முக்கிய நிகழ்வை சிறப்பாகக் கொண்டாடப் போகின்றீர்களா? பிறந்தநாள் விழா, திருமண விழா போன்றவைகளா? நாங்கள் உங்கள் விருப்பங்கள் மற்றும் எண்ணங்களுக்கு அமைவாக இலங்கை மற்றும் இந்திய உணவு வகைகளை அந்த நாட்டு முறைப்படி தயாரித்து வழங்குகிறோம்!

உங்களுக்கு உதவி தேவைப்படுகின்றதா? எவ்வித சிரமமும் இன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்!




திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள்!

நிழல்படம் மற்றும் விடியோ!

விநியோகம் மற்றும் பரிமாற்றம்!

Kontakt: Siemensstr. 25, 40721 Hilden





Rufen Sie uns an:

Tel.: 0211/7691974 | Mobile: 0173/7424955

சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜூவலரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles

## தங்க நகை சேமிப்புத்திட்டம் 2018



### தை 1ம் திகதி 2018 ஆரம்பம்!

தங்க நகை சேமிப்புத் திட்டம் ஜனவரி 1ம் திகதி தொடங்க இருப்பதால் எம்முடன் தொடர்பு கொண்டு அங்கத்தினராக சேர விரும்புவோர் சேர்ந்து கொள்ளவும்.
ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பாக 100.– Sfr. செலுத்த வேண்டும். அதிஸ்டம் அடைபவர்கள் தொடர்ந்து சந்தா செலுத்த தேவையில்லை. அவர்கள் 1200.– ஞகச.க்கு தங்கநகை பெற்றுக் கொள்ளலாம். மற்றவர்கள் ஆண்டு இறுதியில் 1200.– Sfr. பெறுமதியான அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் தெரிவிலேயே பெற்றுக் கொள்ளலாம்.

**Neugasse 58, 8005 Zürich, Switzerland** **www.nsjewellery.com**

**info@nsjewellery.com** **Tel: 044 440 60 50** **Fax: 044 440 60 52**





பூமிபுத்ரன்

# யேமன் மோதல் ம(றை)றக்கப்படும் யுத்தம்!

இருபதாம் நூற்றாண்டின் முதல் அரை நூற்றாண்டில் இரண்டு உலக மகா யுத்தங்களைக் கண்டுவிட்ட உலகில் யுத்தம் தொடர;பிலான வெறுப்பு கணிசமான அளவில் இருந்தாலும் கூட யுத்தங்களும் ஆயுத மோதல்களும் முடிந்து போகாமல் இல்லை. இரண்டாம் உலக யுத்தம் முடிவிற்கு வந்த கையோடு ஆரம்பமான கொரிய யுத்தம், இன்றும் கூட உலக மக்களால் நினைவு கூரப்படும் வியட்நாமிய யுத்தம், இன்றும் தொடர்கதையாக உள்ள ஆப்கானிஸ்தான் யுத்தம், ஈரான்ஈராக் யுத்தம், இவற்றுக்கும் அப்பால் நடைபெற்ற தேச விடுதலைப் போர்கள் என யுத்தங்கள் தொடர;ந்து நடைபெற்றே வந்திருக்கின்றன. இன்றும் கூட உலகின் பல மூலை முடுக்குகளில் யுத்தங்கள் இடம்பெறவே செய்கின்றன.

இவற்றுள் சில உலகின் கவனத்தை ஈர்ப்பவையாகவும் ஒரு சில மறக்கப்பட்ட, உலகின் கண்ணில் இருந்து மறைக்கப்பட்ட யுத்தங்களாகவும் இருந்து வருகின்றன. இத்தகைய மறக்கப்பட்ட, உலகின் கண்ணில் இருந்து மறைக்கப்பட்டு வரும் யுத்தங்களில் ஒன்று யேமன் யுத்தம். உள்நாட்டு யுத்தம் என வரையறை செய்துவிடப்பட முடியாத இந்த யுத்தம் சவூதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படைகளின் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல் காரணமாக பன்னாட்டு யுத்தமாக மாற்றம் கண்டுள்ளது. மனித உரிமைக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி உள்ள சவூதி அரேபியாவிற்கு அமெரிக்காவும், பிரித்தானியாவும் தொடர்ச்சியாக ஆயுத விநியோகங்களை மேற்கொண்டு வருவதன் காரணமாக அந்த நாட்டு அரசாங்கங்கள் உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் கண்டனங்களைச் சந்தித்து வருகின்றன.

நலன்கள் என்ற அச்சிலேயே உலகம் சுழல்கின்றது. யேமன் மோதலுக்கும் நலன்களே காரணம். இன்றைய நிலையில் சவூதி அரேபியா களம் இறங்கக் காரணம் ஈரான். தலைநகர் சானாவைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள கௌத்தி படைகள் ஈரான் ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டவை. இந்தப் படைகளால் பதவி விலக்கப்பட்டு, சிறைப் பிடிக்கப்பட்டு, பின்னர; சவூதி அரேபியாவிற்குத் தப்பியோடிய ஹாடி தலைமையிலான அரசாங்கத்தையே சவு+தி அரேபியாவும் மேற்குலகும் ஏற்றுக் கொண்டுள்ளன. ஹாடி தலைமையிலான அரசாங்கத்தை மீண்டும் பதவியில் அமர;த்துவதே சவூதி அரேபியாவின் இலக்கு. தனது இலக்கை அடைய எத்தகைய விலையையும் தருவதற்கு சவூதி தீர;மானித்துள்ள காரணத்தால், விமர;சனங்களைப் பற்றிக் கவலை கொள்ளாமல் தனது அராஜகத்தைத் தொடர்கிறது.

சவூதி அரேபியாவின் கரிசனைக்கு மற்றொரு காரணம் யேமனின் பு+கோள அமைவிடம். சவு+தி அரேபியாவுடனும் ஓமானுடனும் தனது எல்லையைப் பகிர்ந்து கொண்டுள்ள யேமன், ஆபிரிக்கக் கண்டத்துக்கு மிக அருகில் உள்ளது. ஆபிரிக்காவின் கொம்பு என அழைக்கப்படும் பிராந்தியத்தில் ஒருசில பத்து கிலோமீற்றர் தொலைவில் கடலுக்கு அப்பால் ட்ஜிபுற்றி, எரித்திரியா மற்றும் சோமாலியா ஆகிய நாடுகள் உள்ளன.

அரேபிய பிராந்தியத்தில் இரண்டாவது பெரிய பரப்பளவைக் கொண்ட நாடான யேமன் பாலைவனப் பிராந்தியத்தில் உள்ள பசுந்தரையாகவும் விளங்குகிறது.

வலதுசாரி வடக்கு, இடதுசாரி தெற்கு என இரண்டு நாடுகளாக இருந்த யேமன் 1990 இல் ஒன்றாக இணைந்தது. இரண்டு ஆண்டுகளிலேயே இரு தரப்புக்கும் இடையில் ஆயுத மோதல் உருவாகியது. தீவிரமடைவதும், தணிவதுமாக இந்த மோதல் இன்றுவரை தொடர்கிறது. இந்த மோதல்களின் பின்னணியில் சவூதி அரேபியாவே உள்ளது என்பது சொல்லாமலேயே புரியும்.

இணைந்த யேமனின் முதல் அரசுத் தலைவராக 1990 இல் பதவியேற்ற அலி அப்துல்லா சலே 2015 இல் தானாகப் பதவி விலகும் வரை அப் பதவியில் நீடித்தார். ரியு+னிசியாவில் தோன்றி சுழன்றடித்த அரபுப் புரட்சி காரணமாக சலே பதவி துறக்க நேரிட்டது. துணை அரசுத் தலைவராக விளங்கிய ஹைடி தற்போது சவூதி அரேபியாவின் வலையில் வீழ்ந்து, சலே அவர;களை எதிர்க்கும் அணியில் இருந்து வருகிறார். ஒரு காலத்தில் எதிரெதிர; அணியில் இருந்த சலேயும் கௌத்தி படையினரும் தற்போது ஓரணியில் நின்று போரிடுகின்றனர்.

இந்தச் சண்டையில் அமெரிக்கா மூக்கை நுழைக்க இரண்டு காரணங்கள். ஒன்று உள்நாட்டில் நிலவும் அமைதியின்மையைத் துணைக்கு வைத்துக் கொண்டு யேமனில் எழுச்சி பெற்றுவரும் அல் கைதாவும், ஐ.எஸ். அமைப்பும். அடுத்த காரணம், ஈராக் மீதான அமெரிக்கப் படையெடுப்பிற்கு எதிரி நிலைப்பாட்டை யேமன் எடுத்தமை. அக் காலகட்டத்தில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உறுப்புரிமையைக் கொண்டிருந்த யேமன் அமெரிக்க நிலைப்பாட்டை எதிர்த்ததோடு, வாக்களிப்பில் கலந்து கொள்வதையும் தவிரித்திருந்தது.

"பட்ட காலிலேயே படும், கெட்ட குடியே கெடும்" என்ற பழமொழியை நிரூபிக்க ஒரு எடுத்துக் காட்டு இன்றைய காலகட்டத்தில் உள்ளதென்றால் அது யேமன் நாட்டில் நடைபெறும் யுத்தமும் அதன் விளைவாக மக்கள் படும் துயரமுமே ஆகும். குண்டு வீச்சு, கடலிலும் தொடரும் முற்றுகை என்பவற்றால் வழங்கல்கள் தடைப்பட்டுள்ள நிலையில் மக்கள் பட்டினிச் சாவை எதிர;கொண்டு வருகின்றனர். வறுமை, இடப்பெயர்வு போதிய மருத்துவ வசதியின்மை என்பவை மக்களை வாட்டி வருகின்றது. யேமன் நாட்டில் செயற்பட்டு வந்த மருத்துவமனைகளில் அரைவாசிக்கும் மேல் செயலிழந்து உள்ள நிலையில், இவ்வருட ஆரம்பத்தில் அந்த நாட்டில் பரவிய வாந்திபேதி நோய் 1.500 பேர் வரையானோரைப் பலி கொண்டுள்ளது. இதில் சிறுவர;களும், பெண்களும், வயோதிபர்களுமே அதிகம்.

சோமாலியா நாட்டிற்கு மிக அண்மையில் அமைந்துள்ளதாலேயே என்னவோ அந்த நாட்டில் அரங்கேறிய அவலங்கள் இந்த நாட்டிலும் அப்படியே பிரதிபலித்து வருகின்றன. உலகிலேயே நடைமுறை அரசாங்கம் இல்லாத ஒரு நாடு சோமாலியா என ஏற்றுக் கொள்ளப்பட்டு உள்ளது. கிட்டத்தட்ட, யேமனும் அத்தகைய நிலையிலேயே உள்ளது.

2015 முதல் இடம்பெற்றுவரும் மோதலில் இதுவரை 10,000 பேர் வரை உயிரிழந்து உள்ளனர். இவர்களுள் பெரும்பாலானோர் சவுதி அரேபியா தலைமையிலான படைகளின் விமானக் குண்டு வீச்சிலேயே இறந்துள்ளனர். பல தடவைகளில் பொதுமக்கள் கூடும் இடங்கள், மருத்துவமனைகள் என்பவை குண்டு வீச்சுக்கு இலக்காகி உள்ள போதிலும் உலக நாடுகளின் கண்டனங்கள் வாய்மொழியோடு நின்று போகின்றன. அதற்கு அப்பால் செல்வதற்கு மத்திய கிழக்கின் சண்டியனான சவூதி அரேபியாவின் செல்வாக்கு இடந் தரவில்லை.

ஐ.நா. மத்தியஸ்தத்துடனான அமைதிப் பேச்சுக்கள் பெயரளவில் இடம்பெற்று வந்தாலும் அதன் பலன் இன்னும் துயரப்படும் மக்களுக்கு ஆறுதலாக அமையவில்லை. வரண்ட பாலைவனங்கள் நிறைந்த அரேபியாவில் சோலைவனமாகத் திகழும் ஒரேயொரு நாடான யேமனின் இன்றைய துயரைத் தீர;க்க எந்த மேய்ப்பன், எப்போது வருவார்? அந்த மக்களின் காத்திருப்பு நிறைவேறுமா?



# உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கான ஒரே இடம்

044 803 47 47
078 300 90 90



- Airport Transfer
- VIP Service
- Limousine
- Reisebusse
- Kleinbusse
- Gruppen-Transfer

SWISS RENT A CAR
SRAC

**Swiss Rent a Car GmbH**
Schaffhauserstrasse 137
8302 Kloten

www.swissrentacar.ch



# அனைத்து வாகனத் திருத்த வேலைகளுக்குமான ஒரே இடம்

Reifenwechsel
Auto Diagnostik
Karosserie
Klimaservice

MFK Bereitstellung
Bremse und Stossstange
Autoradio Montage
Reinigung und Polieren
Sonstige Reparaturen
Ersatzwagen

KGS

Gaswerkstrasse 8, 8952 Schlieren
044 500 01 02

Dortmund மாநகரில்

# தமிழர் அரங்கம் கல்விக்கூடம்




## யேர்மன் மொழி வகுப்புக்கள்

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப்படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



## Nachhilfe வகுப்புக்கள்

பாடசாலை மாணவர்களுக்கானது



## தமிழ் மொழி வகுப்புக்கள்

தமிழ் மொழி வகுப்புக்களுக்கு கட்டணம் இல்லை



## பரத நாட்டிய வகுப்புக்கள்

டோட்முண்ட் மற்றும் ஒபகவுசனில் நடைபெறுகின்றன



100 பேர் வரை அமரக் கூடிய மண்டப வசதி

உங்கள் இல்ல விழாக்கள், கலை விழாக்கள் அனைத்திற்கும் எமது மண்டபத்தை பயன்படுத்த முடியும்

**Rheinische Str 76 – 80 , 44137 Dortmund**
**Tel.: 0231 950 979 00 & 0151 633 633 33**

அன்றும் இன்றும் என்றும் ஊர் சுவை மாறாத உணவுகளுடன்



# Sweet Chilli

## தமிழர் உணவகம்



**Rheinische Strasse 60, 44137 Dortmund**
**Telefon: 0231 3154684**

8வது ஆண்டில்...


யாழ் மொக்கன் கடைப் பாணியில் கை தேர்ந்த முஸ்லீம் ஊழியர்களால் தயாரிக்கப்பட்ட HALAL உணவு வகைகள். நாள் தோறும் 10-12 வகையான நம் நாட்டு மரக்கறிகளுடன் வாழை-யிலையில் பரிமாறும் முதல் உணவகம்!

**Öffnungszeiten:**

**Montags – Samstag:**
**11:30 – 23:00 Uhr**

**Sonn - und Feiertags:**
**12:00 – 22:00 Uhr**






# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

## பாகம் 69

*-அன்புச் செல்வன்-*

"நான் எனது மக்களுக்கும் இந்த நாட்டுக்கும் சொல்லிக் கொள்ள விரும்புவது இந்தத் தேர்தல் வழங்கிய தீர்ப்பை தமிழ் ஈழ தேசத்தின் ஆணையாக கருதுவதோடு மக்கள் மீது ஏற்கனவே இருக்கின்ற தன்னாட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழ் ஈழம் விடுதலை அடையும்." 1972 காங்கேசன்துறைத் தொகுதி இடைத்தேர்தலில் அமோக வெற்றி பெற்று அன்றைய சிங்கள அரசின் சார்பில் போட்டியிட்ட யாழ் பொதுவுடமைக் கட்சித் தலைவர் வ. பொன்னம்பலத்தை தோற்டிகத்த போது தந்தை செல்வா விடுத்த பிரகடனம்தான் தனித் தமிழ் நாட்டுக்கான போர்.

1974ல் தந்தை உலகுக்கு விட்ட அறை கூவலை மறந்து விட்ட தமிழரசுக் கட்சியும் அது தலைமை தாங்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் நல்லாட்சி அரசின் நயவஞ்சகத்தால் புதிய அரசமைப்புச் சட்ட வரைவால் வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் வீசப்படும் நாட்கள் நெருங்கி வருகின்றன.

இன்று ஈழத் தமிழ் மக்களின் தன்மானம் மீண்டும் உயிர் பெற்று வருவதை அங்கு நிலவும் அரசியல் கள நிலை மிகத் தெளிவாக வெளிப் படுத்துகின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சர்வ தேச அரசியல் திட்டங்களை இன்றைய நல்லாட்சியும் சிங்களப் பெரும்பான்மை தலைமைகளும் ஏற்கத் தயாராக இல்லை. தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் மற்றும் மனித உரிமைகள் பற்றிப் பேச வேண்டிய த.தே.கூ. தன்னைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்கின்ற ஜனநாயக கௌரவத்தை வெளிப் படுத்தாமல் இந்திய அமெரிக்க அரசுகளின் கடல்சார் இராணுவ சந்தை வளங்கள் சார்ந்த அரசியல் சகதிக்குள் சிக்கித் தவிக்கிறது.

எந்த உலக நாடுகளின் தயவால் தமிழ் இனத்தின் உரிமைகளைப் பெற்றுவிடலாம் என நினைக்கிறதோ அதே நாடுகளுக்கு சிங்கள இன வாதத் தலைமைகள் அதே சலுகைகளை அள்ளிக் கொடுத்து தனது இனவாத மற்றும் போர்க் குற்ற விசாரணைகளை செயலிழக்கச் செய்யும் உத்திகளை கையாண்டு தப்பித்துக் கொள்கிறது. எனவே த.தே.கூ. இன்று தேவைப்படாத கைத்தடியாக இந்திய அமெரிக்க அரசுகளின் கையில் கிடக்கிறது. எனவே ஒரு நாயைக் கூட விரட்டப் பயன்படாத கைத்தடியை யார்தான் பாதுகாப்பர். அது இப்போ எந்நேரமும் பாதை ஓரத்தில் வீசப்படும் விறகுக் கட்டை நிலைக்கு வந்து விட்டது.

அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்டது போன்று தன்னை நம்பிய தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பையும் தனக்கு வாக்களித்து வாழ்வழித்த தமிழ் ஈழ மக்களையும் நட்டாற்றில் தவிக்க விட்டு இதே இந்திய அமெரிக்க அரசுகளின் சூழ்ச்சியால் தமிழ் இனப் படு கொலைக்கு ஆதரவாக இந்தியாவில் ஓடி ஒளிந்து மீண்டும் அரசியல் நடத்த வந்த இவர்களுக்கு அழிவு காலம் அண்மித்து விட்டது.

இவர்கள் இப்போது பேசுவது தமிழரின் அரசியல் பற்றிய தேவைகளோ அடிப்படை வாழ்வாதார தேவைகளோ அல்ல. எந்த முகத்தோடு தமிழ் மக்களை எதிர் கொள்வது மட்டும்தான் அவசியமான தேவையாக உள்ளது. இவர்களுக்கு ஆதரவாக இந்திய இலங்கை அமெரிக்க இஸ்ரவேலிய புலனாய்வுத் துறைகள்தான் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் புலம் பெயர் தேசங்களிலும் பகீரத பிரச்சார மற்றும் பயமுறுத்தல் உத்திகள் மூலம் தமிழ்த் தேசிய ஆதரவாளர்களை செயலிழக்கச் செய்கின்றன.

ஈழத் தமிழ் மக்களின் அதிகமான சோக நாட்களும் விடுதலைப் போராட்டங்களும் இடம் பெற்ற காலமாக ஜுலை முதல் ஒக்டோபர் வரையான காலங்கள் 1983 தொடக்கம் இருந்துள்ளன. முக்கியமாக இந்திய அமைதிப்படை தமிழ் மக்கள் மீது தொடங்கிய இராணுவத் தாக்குதல்கள் ஒக்டோபர் 87ல் தொடங்கியது. அமைதிப் படைக்கு எதிரான மக்கள் எழுச்சி 87 செப்டெம்பர் மாதத்தில் தொடங்கப் பட்ட தியாக தீபம் திலீபனின் அறவழி உண்ணா நோன்புடன் தொடங்கியது.

நல்லாட்சி 2015 ஜனவரி 8ந் திகதி மைத்திரிபால் சிறிசேனாவின் ஜனாதிபதித் தேர்தல் வெற்றியோடு ஒரு சிறிய அரசியல் சுதந்திரக் காற்று தமிழ் மக்களை மீண்டும் போரிட தூண்டியது. காரணம் மக்களின் எந்த ஒரு அரசியல் மற்றும் அடிப்படை வாழ்வாதாரக் கோரிக்கைகளையும் அரசு நிறைவேற்றத் தவறி விட்டது. மக்களுக்கு அரசின் மீது ஏற்பட்ட வெறுப்பும் கிடைத்த அரசியல் சுதந்திரக் காற்றும் மக்களின் போராட்டத் தேவை தமிழ்த் தேசியத்துக்கான விடுதலைப் போராக வெடிப்பதை பல்வேறு தளங்களில் இடம் பெற்று வரும் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் வெளிக் காட்டி நிற்கின்றன.

ஒரு புறம் த.தே.கூ. அரசியல் பயனற்று தமிழ் மக்களின் இருப்பை அச்சுறுத்துகிறது. அதனால் அது பலத்த மக்களனின் வெறுப்புக்கு முகம் கொடுத்து வருகிறது. மறு புறத்தில் தமிழ் தேசிய உணர்வுகளும் அவற்றை மீட்டு எடுப்பதில்தான் தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வும் வளமும் தங்கி உள்ளது என்ற கட்டாயத்தை தமிழ் மக்கள் எதிர் கொண்டுள்ளனர் என்ற கள நிலை ஏற்படுத்துகிறது.

இவற்றுக்கு எதிராக களம் இறங்கி இருக்கிறது யாழ் இந்தியத் துணைத் தூதரகமும் அதன் தூதுவர் நடராஜனின் செயற்பாடுகளும். மதுரை மல்லித் தோட்டம் போட்டார். கேரளத்துக் கஞ்சா பான்பராக் கேரளத்து விபச்சாரக் குட்டிகள் மற்றும் வாள் வெட்டுக் கோஷ்டிகள், பாலியல் வன்புணர்வுகள் கடனால் தற் கொலைகள் என யாழ் மாவட்டம் அல்லாடும் நிலையில் எங்கே திலீபனின் நினைவும் குமரப்பா புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வேங்கைகளின் தியாக மரணங்களும் மீண்டும் ஒரு புயலலை தோற்றுவித்து விடுமோ என்ற அச்சம் போலும்.

அதனால் இந்தியாவுக்கும் இக்கட்டாகி விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டதால்தானோ என்னவோ காந்தி ஜயந்தி விழாவும் போசிரியர் ஞானசம்பந்தனின் தலைமையில் ஒரு பட்டி மன்றமும்
யாழ் மக்களை மானாட மயிலாட நாட்களுக்கு அழைத்து வைத்திருந்தது. அதைச் சிறப்பித்த தேச பக்தர்கள் வரிசையில் முதன்மை இடத்தை தமிழரசுக் கட்சியின் மேதகு தலைவர் பிடித்திருந்தார்.

தமிழ் மக்கள் பேரவையின் அரசியலை முறியடிக்க இவை எல்லாமே தேவைப் பட்டன. ஆனால் அதன் அவசியத்தை யாராலும் முறியடிக்க முடியுமா என்பதை எதிர்காலம் வலுவானதாக இருக்கப் போகிறது என்பதையே உத்தேச அரசமைப்புத் திருத்தச் சட்டமும் அதன் பலமும் பலவீனமும் முடிவு செய்யப் போகின்றன. இலங்கை அரசைப் பொறுத்தவரை அது இந்தியா அமெரிக்கா சீனா ஆகிய வல்லரசுகளுக்கு வடக்கு கிழக்கு கொழும்பு தெற்கு என பட்டாப் போட்டு நாட்டை விற்று வயிற்றில் போடுகிறது. அதனால் த.தே. கூட்டமைப்பின் வாயிலும் வயிற்றிலும் மண்தான் மிச்சம்.

இந்தப் பயத்தால் காசு வாங்கி ஊடகங்களை நடத்தும் பச்சோந்திகளுக்கு பல இடங்களில் இருந்தும் பணமழை கொட்டுகிறது. அதற்கேற்ப ஆளுக்கு ஆள் இப்பொழுது தமிழ் மக்கள் பேரவை மீதும் வட மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் மீதும் அபாண்டங்களையும் சேற்றையும் வாரிக் கொட்டுகிறார்கள். இந்தக் கைங்கரியத்தில் கம்பனின் காலணிகளும் தமது பணியைச் சிறப்பாகச் செய்து வருகின்றன. உண்மை ஒன்றுதான் உயர்வான அறம். ஆண்டவன் புக்கை மோதகத்துக்கு மயங்கலாம் ஆனால் அறம் என்றும் வெல்லும் நின்றும் வெல்லும்.

இதற்கு உதாரணமாக தந்தை செல்வாவைப் பற்றி சிங்கள நூலாசிரியர் குஷால் பெரேராவின் நூலில் இருந்து நீதியரசர் திரு விக்கினேஸ்வரன் அண்மையில் தமது பேச்சின் பொழுது கொழும்பில் சுட்டிக் காட்டிய வரிகளில் சிலவற்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்பதால் அகரம் வாசகருக்காக தருகிறோம்

"இறுதியாக ஐக்கிய முன்னணித் தலைமை காங்கேசன்துறை இடைத் தேர்தலை பெப்ரவரி 1974ல் நடத்தத் தீர்மானித்தது. அளிக்கப் பட்ட வாக்குகளில் 72.5 வீத வாக்குகளைப் பெற்று பெரு வெற்றியுடன் திரும்பினார். ஐக்கிய முன்னணி நிறுத்திய அபேட்சகர் யாழ் பொது உடமைக் கட்சியின் தலைவர் வ. பொன்னம்பலம் போடப் பட்ட வாக்குகளில் 26.46 வீதம் மட்டுமே பெற்றார். இது தந்தை செல்வா மறைய 2 வருடங்களுக்கு முன்னர்தான் 33 வருடமிகத் தீவிர அரசியலின் பின்னர்; ஜனநாயக தமிழ் அரசியல் செய்து அவர் தனித் தமிழ் நாடு மட்டுமே தமிழ் மக்களின் அரசியல் இன்னல் மற்றும் கௌரவமான வாழ்வுக்கான தீர்வு என்பதை ஏற்க சிங்களத் தலைவர்களால் கட்டாயப் படுத்தப்பட்டார்.

தேர்தல் வெற்றி அறிவிப்பைத் தொடர்ந்து அவர் பேசிய வரிகள் இதோ:
"நான் எனது மக்களுக்கும் இந்த நாட்டுக்கும் சொல்லிக் கொள்ள விரும்புவது இந்தத் தேர்தல் வழங்கிய தீர்ப்பை தமிழ் ஈழ தேசத்தின் ஆணையாக கருதுவதோடு மக்கள் மீது ஏற்கனவே இருக்கின்ற தன்னாட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழ் ஈழம் விடுதலை அடையும்."

தந்தை செல்வா விட்டுச் சென்ற அரசியலை தமிழீழ விடுதலைப் புலிகள் காரியமாக்கி கட்டி எழுப்பி உலகுக்கு காண்பித்ததை யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. 2009ல் காட்டிக் கொடுத்து இனப்படு கொலைக்கு உதவிய த.தே.கூ. இனிமேலும் பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்று போலி அரசியலை தொடர முடியாது. மக்கள் விழித்துக் கொண்டு விட்டனர் என்பதற்கான அடையாளம்தான் தமிழ் மக்கள் பேரவையின் உதயம். பணமும் பதவியும் பெற்று பயமும் மிரட்டலும் சேர்ந்த தமிழ் மக்கள் பேரவைக்கு எதிராக நடத்தப்படும் விசமிகளின் பிரச்சாரம் நிறுத்தப்பட வேண்டும். தனித் தமிழ் நாடு ஒன்று தான் தமிழரின் வயிற்றில் பாலை வார்க்கும் என்ற புரிதல் பலமாக எற்பட்டு வருகிறது. எனவே இலக்கை அடையும் வரை தேடல் தொடரும். (அடுத்த இதழில் இன்னும் பார்ப்போம்.)



டோட்மூண்ட் மாநகரில்

# AMMA's food

Sri Lankan & South Indian Specialities



வெள்ளிக்கிழமை அறுசுவையுடன் மரக்கறிச் சாப்பாடு
மற்றும் பாலப்பம், சனிக்கிழமை ஸ்பெஷல் பிரியாணி
மற்றும் பாலப்பம் இன்னும் பற்பல...



அமைதியாகவும் ஆனந்தமாகவும் பிரியாணி
கொத்துறொட்டி, பிட்டுக் கொத்து, இடியப்பக்கொத்து,
தோசை, இட்லி, மசாலாத்தோசை மற்றும் பாலப்பம்
போன்ற உணவுகளுடன் நீங்கள் விரும்பிய வகையிலும்
உணவுகளை உண்டு மகிழ்ந்திட...





## அம்மா'ஸ் உணவகம்

**Rheinische Str. 80,**
**44137 Dortmund**

**Tel.: 0231-33898691 | Fax: 0231-33898693**

**Web: www. ammas-food.de**

**Mail: info@ammas-food.de**

*Öffnungszeiten:*
*Mo. - Do.: 11:30 - 22:30*
*Di.: Geschlossen*
*Fr. & Sa. 11:30 - 23:00*
*So. & Feiertag: 15:00 - 22:30*




உங்கள் இல்ல வைபவங்களுக்கும் உணவு தயாரித்துப் பரிமாறக் காத்திருக்கின்றோம்!



# இந்திய அரசியல்...

தமிழகத்திலிருந்து
சீதாராமன்

ஆளும் பா.ஜ.க. ஆட்சியில் பல வேதியல்மாற்றங்கள் தினமும் உருவானபடியே இருக்கின்றன. வெளிப்படையாக எல்லாமே மோடியின் ஆளுமையில்தான் நடந்தேறுவது போலக் காணப்படினும் அடிப்படையில் அவர் ஒரு இந்துத்துவ பாரதீய ராஷ்டிரவின் தீவிர கொள்கையை செயல்படுத்தும் கர்ம வீரராகவே செயற்பட்டு வருகிறார். அதே சமயத்தில் அவர் ஒரு அசல் வியாபாரியும் முதலாளித்துவ இந்துத்துவ வெறியராகவும் காணப்படுகிறார். ஆனால் அவரது பல செயல் திட்டங்களை சுப்பிரமணியன் சுவாமி போன்ற பழுத்த தீவிரப் போக்குடைவர்கள் மூலமாக செய்திகள் அறிக்கைகளை மக்களிடையே பரவ விட்டு அவற்றுக்கான எதிர்வினை அரசியலை அறிந்து தமது திட்டங்களை திரித்தும் திருத்தியும் அல்லது தேன்தடவிய சொற்கள் மூலம் தமது திட்டங்களை மக்களிடம் விற்று விடுகிறார்.இதற்கு உதாரணமாக அரசின் எரி வாயுக் கொள்கையும் அதனால் தமிழகம் முழுவதும் ஏற்பட்டு வரும் மக்கள் ஏதிர்ப்பையும் குறிப்பிடலாம்.

அவற்றை மக்கள் நலன்களைப் பாதிக்கும் திட்டங்கள் என்பதால் மக்கள் எதிர்ப்பு முழுவதுமாக ஆளும் அ.இ.அ.தி.மு. க. மீது விழுவதை கண்டும் காணாதது போல் புறக்கணிக்கிறது. ஒரு புறம் இத்திட்டங்கள் மத்திய அரசின் பொறுப்பில் உள்ள விடயங்களாக இருப்பதும் அம்முடிவுகளை ஆளும் மாநில அ.இ.அ.தி.மு.க. மாற்ற முடியாத படிக்கு ஜெயலலிதாவின் மரணம் ஏற்படுத்தி விட்டதாலும் மக்களின் ஆதரவை அது படிப்படியாக இழந்து வருகிறது. அடுத்து வரும் தேர்தலில் அக்கட்சி தனித்து இயங்கமுடியாத படிக்குப் பலமிழந்துவிடும்.

அப்பொழுது பா.ஜ.க. தனக்கு வேண்டிய அளவு தொகுதிகளை வேண்டிய இடங்களில் பேரம் பேச அ.தி.மு.க. கட்சி மிக ஈன நிலையில் இருக்கும். அதற்கான தயாரிப்புக்களாக நீட் தேர்வு. ரேசன் கடைகளை மூடுதல் அல்லது அவற்றின் சேவைகளைக் குறைப்பது மற்றும் பல புதிய திட்டங்கள் மக்கள் மீது திணிப்பதற்கு வசதியாக இருக்கும். இந்த வரிசையில் இந்தி மொழித் திணிப்பு படிப்படியாகத் தீவிரமாகி வருவதும் அதற்கெதிராக மாநிலக் கட்சிகள் போராடுவது தமிழகத்தில் ஒரு நிரந்தர வெறுப்பை ஆளும் கட்சிமீது ஏற்படுத்தும். அப்போது பா.ஜ.க. சென்ற தேர்தலில் வாக்குறுதி வெற்றியை இந்திய அளவில் பெற்றது போல தமிழகம் ஒரு நாற்றங்காலாக உதவும் எனப் பா.ஜ.க. திட்டமிட்டுச் செயற்படுகிறது.

அகில இந்திய அளவில் பா.ஜ.க. அடுத்த தேர்தலிலும் சென்ற தேர்தலில் பெற்ற வெற்றி போன்ற ஒன்றைப் பெற முடியாது. அதனால் இப்பொழுது உள்ள அசுர பலத்தை வைத்து தேவையான அனைத்து சட்டங்களையும் அடுத்த தேர்தலுக்கான முன்னேற்பாடுகளை செய்து விட முயற்சிப்பது தெரிகிறது. பெரும் பாலான மாநிலங்கள் பலமான அரசில் கட்சித் தளத்தை கட்டமைக்க முடியாமல் இருப்பதும் அதனை அப்படியே நிலை பெறச் செய்ய பா.ஜ.க. அரசியல் செய்வதும் தெளிவாகத் தெரிகிறது. இப்போது உள்ள நிலையில் காங்கிரஸ் கட்சியை விட்டால் வேறு கட்சி பா.ஜ.க.வுக்கு எதிராக் களமிறங்கும் வாய்ப்புகளே இல்லை. ஆனால் அங்கும் போட்டியாக உள்ள ராகுல் மோடிக்கு ஈடாக பலமானவரா என்ற கேள்வி எல்லார் மனதிலும் உண்டு.

தமிழ் மாநில அரசியலில் சினிமா நட்சத்திரங்களான ரஜினி. கமல். விஜய் குதிப்பார்களா என்ற வாதம் தொடர்ந்த படியே உள்ளது. ரஜினியின் அரசியல் வருகை மிகவும் ஐயத்துக்கு உரிய ஒன்றாகவே தெரிகிறது. அவர் திரைக்கு மட்டும் சிறந்த கதாநாயகனாகத் தெரியலாம்.

ஆனால் நிஜ வாழ்வில் அவர் கழுவுற நீரிலே நழுவுற மீனாகவே இதுவரை காலமும் இருந்துள்ளார். வயதும் கடந்தும் நரையும் விழுந்த பின்னர் அரசியலில் குதிப்பதற்கு அசட்டுத் தைரியம் தேவைப்படும். அவர் அந் விளையாட்டுக்குச் சரிப்பட மாட்டார் என்றே தெரிகிறது.

கமலைப் பொறுத்த வரை இக்கட்டுரை எழுதப் படும்போது அவர் கட்சி பற்றி எதுவும் பகிரங்கமாகப் பதிவு செய்ய வில்லை. ஆனாலும் புது டெல்லி முதல்வர் அரவிந் கெஜ்ரிவால் வந்து சந்தித்துவிட்டுப் போயிருக்கிறார் கமலும் பல் வேறு கள ஆய்வுகளையும் அரசியல் கருத்தரங்குகளையும் நடத்தியும் பல்வேறு துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளையும் பெற்று வருகிறார். **அவர் தனிக் கட்சியா அல்லது அரவிந் கெஜ்ரிவாலுடன் இணைந்த தேசிய அரசியலா இல்லை மாநில அரசியலா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.**

விஜய் அவரது அப்பா எஸ்.ஏ. சந்திரசேகரரால் அரசியல் கனவோடு சினிமாவில் அறிமுகப் படுத்தி அதற்கெனவே வளர்த்து வரப்பட்டவர். அண்மையில் தொலைக் காட்சிக்கு வழங்கிய செவ்வியில் விஜய் அரசியலுக்கு வருவாரா இல்லையா என்பதைப் பல முறை கூறியுள்ளார். ஆனால் அவரது உடல் மொழி முற்றிலும் எதிரான கருத்தையே காட்டி நின்றது.

விஜய்யின் மெர்சல் படத்தில் விஜய் பேசிய வசனங்கள் இந்திய அரசின் வரி மற்றும் பணப்பரிமாற்றக் கொள்கைகளை விமர்சித்து வந்த வசனங்களை மாநில பா.ஜ.க. தலைவர்களின் பலத்த கண்டனங்களை சந்தித்து அகில இந்திய அளவில் பெரும் விவாதப் பொருளாக பேசப்பட்டது. ராகுல் காந்தி உட்பட விஜய்யின் மெர்சல் பட வசனங்களுக்கு ஆதரவாக கிளம்பிய மக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் கருத்துகள் இறுதியில் பா.ஜ.க.வை பின்வாங்கச் செய்து விட்டன. ஆக விஜய் ஒரு அரசியல் வாதியாகவே படத்தில் தளபதி எனவும் தமிழன் ஆள வாறான் என்கிற பாடல் மூலமும் மாறி விட்டார் எனலாம்.

கடைசியாக வந்த செய்திப் படி விஜய் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமானின் இயக்கத்தில் படம் ஒன்றை நடிக்கப் பேச்சு வார்த்தை நடந்துள்ளது. முன்னர் மெர்சல் பட வசனம் பற்றிய சர்ச்சை தொடர்பாகச் சீமானின் கருத்துகளைக் கேட்ட பொழுது தான் பட்டி தொட்டி தெருக்களில் எதைப் பேசினேனோ அதையேதான் விஜய்யும் படத்தில் பேசி உள்ளார்.

அந்த வசனம் தவறெனப் பேசுகிறவர்கள் தன்னுடன் அல்லவா பேசவேண்டும் எனத் தொலைக் காட்சிகளுக்கு வழங்கிய பேட்டிகளில் சீமான் பேசியிருந்தார்
இப்பொழுது இருவரும் இணைந்து படம் எடுக்கப் போகிறார்கள் என்றால் அது அரசியலா சினிமாவா என்பதை காண நம் தயாராக இருப்போம் என இப்போது பதிவு செய்வதே சரியாக இருக்கும். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.



# Jaffna Stores

Feilenstr. 8, 33602 Bielefeld | Tel.: 0521 174794 | Mob.: 0173 2807906



ஆசியா, ஆபிரிக்கா, சீனா,
நாடுகளின் அனைத்து விதமான
உணவுப் பொருட்களுடன், உடன்
மரக்கறிவகைகள், மீன் வகைகள்
அனைத்தையும் தரமாகவும்
மலிவாகவும் பெற்றுக்கொள்ள
Bielefeld நகரில்
ஒரு மாபெரும் நிறுவனம்.

*மொத்தமாகவும், சில்லறையாகவும்*
***NSR** தயாரிப்புகளை விற்பனைசெய்ய விரும்புவோர்*
***Jaffna Stores** உடன் தொடர்புகொள்ளுங்கள்.*

*African உணவுப் பொருட்களை மொத்தமாகவும்*
*சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.*




**Öffnungszeiten:**
**Montag bis Samstag**
**von 08:30 bis 20:00**

**Geschäftsführer: Thayaharan Nadarajah**

**www.jaffnastores.com**
**info@jaffnastores.com**






Importas Cash & Carry

# Cash & Carry in Zurich

## Biggest Asian Shop in Swiss




## IMPORTAS CASH & CARRY

Basler Str. 102, 8048 Zürich- Switzerland

Tel: +41 43 343 03 55 - Fax: +41 43 343 03 56

**Direct Importers and Solo Distributors of**

Kings · Subash · ELAKKIA · Niru · SURYAA · Maliban · Rubicon

Importas Cash & Carry, Baslerstrasse 102, 8048 Zurich, Switzerland. Tel : +41 43 343 03 55 Fax : +41 43 343 03 56

# 6
# அது ஒரு நிலாக்காலம்



கவிமகன்

அம்மா என்னால் வெளிநாட்டுக்கு போக முடியாது. உங்கள, அப்பாவ, தம்பிய எல்லாம் விட்டிட்டு போக முடியாது. என் வாழ்க்கையை உங்களோட வாழ வடுங்கோ. அம்மா என்னை புரஞ்சு கொள்ளுங்கோ எனக்கு அந்த வெளிநாட்டு வாழ்க்கை வேண்டாம். யாருமில்லாத நாலு சுவருக்க இருந்து புருசன் எப்ப வருவார் என்று ஏங்கி கிடக்க என்னால முடியாதம்மா. இந்த மண்ணை விட்டு பனி படர்ந்து கிடக்கும் அந்நிய தேசத்தில வாழ்வது எனக்கு முடியாதம்மா. எனக்கு என் அம்மா, அப்பா, தம்பி முகத்தை பார்க்காமல் குரல கேட்காமல் வாழ முடியாதம்மா. என்னை வெளிநாட்டுக்கு அனுப்பாதையுங்கோ. இங்க இருக்கும் யார் என்றாலும் எனக்கு பிரச்சனை இல்லை அம்மா ஆனால் வெளிநாடு வேண்டாம் அம்மா...

அவள் தாயிடம் மன்றாட்டமாக வேண்டுகிறாள். தாயின் மனம் இளகியதா இல்லையா தெரியவில்லை. ஆனால் கண்ணீர் வந்து மகளை அணைத்துக் கொள்கிறாள். இல்லயம்மா உன்னை நாங்கள் அனுப்பவில்லை உனக்கு என்ன விருப்பமோ அதை செய்வம் நீ அழாதயம்மா. தாய் ஆறுதல் படுத்த முனைந்தார். ஆனால் அவள் தாயின் சொல்லை நம்ப தயங்கினாள். தாய் இப்போது இவ்வாறு சொல்லி விட்டு மாப்பிளை வரும் போது அவளுக்கு எதிராக செயற்பாட்டால்? தன்னை கட்டாயப்படுத்தி அவனுக்கு கட்டி வைத்தால்? என பல கேள்விகள் மனதை துளைத்து சென்றன.

அம்மா என்னை ஏமாத்த மாட்டீங்களே...? உங்கட மகள் உங்களோட இருந்தால் தான் சந்தோசமா இருப்பன் அம்மா. என்னை ஏமாத்தி அந்த மாப்பிளைக்கு கட்டி வைச்சிடாதீங்கம்மா. என்னால அந்த வாழ்க்கையை சந்தோசமா வாழ முடியாதம்மா. அதை ஏற்றுக் கொள்ள முடியாதம்மா. அம்மா பிளீஸ் அம்மா. கொஞ்ச நேரம் மடீல படுக்கவா? தாயின் மடியில் தலை சாய்த்துக் கொள்கிறாள் மதி. ஆறுதலாக தலையை கோதுகிறாள் தாய். தாயோ சுவரோடு சாய்ந்து கொள்கிறாள். மடியில் படுத்திருக்கும் தன் வாரிசின் தலையை கோதி விடுகிறாள்.

சரியம்மா உன்னோட விருப்பத்துக்கு மாறாக நான் எதுவும் முடிவெடுக்க மாட்டன். நீ சந்தோசமா இருக்க வேணும் அதுவே எனக்கு போதும் இதற்காக நான் யாருடன் என்றாலும் சண்டை போட தாயார். நீ அழுது கொண்டு இருப்பதை அம்மா எப்பிடி தாங்குவன்? என்று ஆறுதல் சொல்லிய தாயின் விழியில் இருந்து கண்ணீர் விழுகிறது. தன் கன்னத்தில் விழுந்த கண்ணீர் துளியை உணர்ந்து திடுக்கிட்டு எழுகிறாள் மதி. அம்மா அழ வேண்டாம் பிளீஸ் அழவேண்டாம் என்றவாறு தாயை அணைத்துக் கொள்கிறாள்.

திடீர் என்று வாசலில் ஏதோ அரவம் எழுகிறது. இருவரும் அந்த திசையில் திரும்புகிறார்கள். அங்கே துளசி கண்கள் கலங்கிய நிலையில் நிற்கிறான். தனது அக்கா அழுவதை கண்டு ஓடி வருகிறான். ஏனக்கா அழுகிறாய்? பெரியம்மா உன்னை திட்டினவாவா? ஏனக்கா அழுகிறாய்? என்னை விட்டிட்டு வெளிநாட்டுக்கு போக போறியா அக்கா? இனி என்னோட நீ இருக்க மாட்டியா அக்கா? எங்கட அம்மா சொன்னவா நீ அன்டைக்கு வந்தவர கல்யாணம் கட்டி வெளிநாட்டுக்கு போக போறியாம் உன்னை இனி தொந்தரவு பண்ணக்கூடாதாம் என்றா உண்மையா அக்கா நீ என்னை விட்டு போக போறியா? அவன் கேள்விகளை

அடுக்கிக் கொண்டு போக அவளால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தாயை அணைத்திருந்த கை துளசியை அணைத்துக் கொள்கிறது. இருவரும் பெரிதாக கத்தி அழுகிறார்கள். அழுகைக்கு இடையே, இல்ல... என்ட தம்பிய விட்...டி...ட்டு நா...ன் போகன்... போக மாட்டன்.... என்ட த..ம்பிய விட்டு போ...க மாட்...டன். அவர்கள் வீரிட்டு அழுவதை தாங்க முடியாத தாயோ இல்ல துளசிம்மா அக்கா போக மாட்டாடா நீ அழாத உன்னோட அக்கா இங்க தான் இருப்பா உன்னை விட்டு எங்கும் போக மாட்டா நீ அழாத செல்லம் என்று அவனையும் மதியையும் அணைத்துக் கொள்கிறாள்.

ஆனாலும் அவர்கள் இருவரும் ஆறுதல் கொண்டதாக தெரியவில்லை மீண்டும் மீண்டும் விக்கித்துக் கொண்டே இருந்தார்கள். கூடப்பிறக்காதவர்களின் அன்பையும் நேசிப்பையும் பார்த்து தாய் அதிர்ந்து போனாள். இவர்களை எவ்வாறு ஆற்றுகைப்படுத்துவது என்பது தெரியாது குழம்பிக் கிடந்தாள். சிறு நேரம் அழுது தீர்த்த பின் அவர்களாக சமாதானமடைவார்கள் என்று எண்ணிய அவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. கெஞ்சிப் பார்த்தாள். சொல்லிப் பார்த்தாள் முடியவில்லை என்ற நிலையில் அதட்டிப் பார்த்தாள். இரண்டு பேரும் முதல்ல அழாம இருங்கோ இல்ல இப்ப அடி வாங்குவியள். அம்மா சொல்லுறத கேட்கவில்லை என்றால் பூவரசம் கம்பு இப்ப சொல்லும் இரண்டு பேருக்கும். எழும்பி இரண்டு பேரும் முகத்தை கழுவிட்டு வாங்கோ அம்மா சாப்பாடு போடுறன்.

எங்களுக்கு வேண்டாம் என்றுபடி அக்காவின் மடியில் சாய்கிறான் துளசி. அவனால் ஒரு நிமிடம் கூட தமக்கையை பிரிந்து வாழ்வதை நினைக்க முடியவில்லை. எப்பவும் அக்கா அக்கா என்று அவளை நேசிக்கும் அந்த ஆத்மார்த்தமான உணர்வை அவளாலும் பிரிந்திருக்க முடியாது. அதனால் தான் பெரியளவில் மனம் உடைந்து போய் கிடந்தார்கள். திருமணம் என்பது ஒரு பெண்ணோ அல்லது ஆணின் வாழ்வில் எத்தகைய மகிழ்வைத்தரும் என்பது வார்த்தைகளால் கணிக்க முடியாதது. ஆனால் இவளின் வாழ்க்கையில் அது பல மடங்கு துன்பத்தையல்லவா தந்து நிற்கிறது.

மடியில் படுத்திருந்த துளசியின் தலையை வருடியபடி சுவரோடு சாய்கிறாள் மதி. அப்போது தாய் குசினியில் இருந்து கத்துகிறாள். இன்னும் எழும்பவில்லையா? எழும்பி முகத்தை கழுவிட்டு வாங்கோ...அவர்களுக்கு தாயின் குரல் கேட்கவே இல்லை. ஆனால் மீண்டும் வாசலில் ஏதோ சத்தமும் ஒரு நிழலும் அவர்கள் மனதை அதிர வைத்தது. அம்மா.... என்று அவளும் அக்கா... அவனும் அழைத்தபடி அதிர்ந்து போனார்கள்....



# PAGEVISION

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

**www.pagevision.ch**

உங்கள் கணனிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்



**HP dc7700 Tower**

Intel Core 2 Duo E6300 - 2x 1.86GHz

80GB Festplatte

2GB DDR2 RAM

DVD/CD-Brenner

8x USB 2.0

1 Jahr Garantie

**CHF 60.-** inkl. MwSt.

**PC Systeme komplett ab CHF 329.-!!**

**Keine versteckten Kosten, alles inkl. MwSt.!**

**Lenovo T410 Notebook**

Intel Core i5 m540 - 2x 2.53GHz

250GB Festplatte

4GB DDR3 RAM

DVD-Brenner

3x USB 2.0, USB 3.0

1 Jahr Garantie

**CHF 249.-** inkl. MwSt.

**!! REPARATUREN ALLER MARKEN !!**




- sehr schnelle Lieferung!
- Hauslieferungen
- Vor-Ort Installationen
- Netzwerklösungen für Firmen
- Reparaturen aller Marken!

**Mac Pro 1.1**

2x 5150 (4x 2.66GHz)

250GB Festplatte

8GB DDR2 RAM

Nvidia Geforce 7300GT Grafikkarte, mit 256MB RAM

1 Jahr Garantie

**CHF 290.-** inkl. MwSt.

**iPhone Reparaturen:**

**www.iphonefan.ch**

## günstige gebrauchte Computer Reparaturen aller Marken

# www.pckaufen.ch

Tellstr. 31, 8004 Zürich - Tel: 043 317 91 01
Kirchgasse 33, 8302 Kloten - Tel: 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel: 052 203 15 50
Rosengartenstrasse 4- 8037 Zürich - Tel: 044 271 00 07

für Neuware besuchen Sie

**pagevision.ch**

இரா. தர்சன் (தமிழன்)



# காலத்தின் தேவை தமிழ் தேசிய அரசியல்

(சென்ற மாத அகரம் இதழில் திரு.சண் தவராசா அவர்களின் கட்டுரையில் குறிப்பிட்ட விடயங்கள் பல அகரம் குழுமத்தின் அதிகார முறையான கொள்கைகளின் வெளிப்பாடாக இல்லாத போதிலும் கருத்துச் சுதந்திரம் என்ற வகையில் நாம் எதுவித கட்டுப்பாடோ தணிக்கையோ செய்யாமல் முழுமையாகப் பிரசுரித்தோம். அந்தக் கட்டுரையில் காணப்பட்ட சில கருத்து முரண்பாடுகளை ஆட்சேபித்து தமிழ் நாடு நாம் தமிழர் அமைப்பின் சார்பில் திரு.இரா.தர்சன் தமது கருத்துகளைப் பதிவு செய்துள்ளார். இவற்றுக்கு பதில் கருத்துகளை பதிவிடும் சுதந்திரம் குறித்த கட்டுரை ஆசிரியருக்கும் அகரம் சந்தர்ப்பம் வழங்கத் தயாராகவே இருக்கிறது. இது விடயமாக ஏனைய வாசகரும் தமது கருத்துகளைப் பதிவு செய்ய அகரம் வசதி வழங்கத் தயாராய உள்ளது. அகரம் ஆசிரியர்).

கடந்த அகரம் இதழில் ஊடகவியலாளர் என அறியப்பட்ட அண்ணா சன் தவராஜாவின் காலத்தின் தேவை அரசியல் வேலை, என்ற கட்டுரையை வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்குக்கிடைத்தது. முதலில் உங்கள் ஊடகப்பயணம் தொடர என் வாழ்த்துகள் .

உங்களின் இந்த கட்டுரையை வாசிக்கும் போது என்னிடம் எழுந்த முதல் கேள்வி நீங்கள் ஊடகவியலாளரா இல்லை ஊடறுப்பு செய்யும் இயலாளரா ?என் கேள்வியின் அர்த்தம் தொடரப்போகும் என் எழுத்துக்கள் சொல்லும்.

நீங்கள் எழுதிய கட்டுரையின் முரண்பாடான பல கருத்துக்களில் சிலவற்றுக்கான உண்மையை பகிர விரும்புகின்றேன்.

உங்கள் பகிர்வு

2004 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் எனது நண்பரும் ஊடகத் துறை வழிகாட்டியுமான அமரர் தராக்கி சிவராம் எழுதியிருந்த ஒரு கட்டுரையின் தலைப்பே இது. தென்னிந்தியத் திரைப்படங்களே தலைப்புப் பஞ்சம் காரணமாக பழைய திரைப்படங்களின் தலைப்புக்களைக் கொண்டு வெளிவரும் போது நாமும் அதுபோல் முயற்சிப்பதில் தவறில்லை என நினைத்தேன்.

தராக்கி சிவராம் அண்ணாவின் தலைப்பை நீங்கள் மீள் பிரசுரிப்பது தவறில்லை ,ஆனால் தென்னிந்திய திரைப்படங்கள் பழைய பெயர்களை மீண்டும் சூட்டுவது ஒரு வியாபார யுக்தி. பழைய திரைப்படங்களை பார்வையிட்டவர்களை மீண்டும் இந்த புதிய திரைப்படத்தையும் பார்க்க தூண்டுவதும் ஏற்கனவே நன்றாக விளம்பரம் செய்யப்பட்ட அந்த திரைப்படப் பெயரை மக்களிடம் இலகுவாக கொண்டு செல்ல உதவும் என்ற சந்தைப்படுத்தல் நுட்பமுமேயாகும். எனவே உங்கள் தவறான உவமானம் பந்தியின் முதல் எழுத்திலிருந்தே தமிழ்நாட்டைப்பற்றிய தவறான புரிதல் உங்களுக்கு இருக்கிறது என்பதை கோடிட்டு காட்டுகிறது

உங்கள் பகிர்வு

'உறவினர்களை விடவும் அயலவன் அலறித் துடிப்பதைப்" பார்த்து கேள்விகள் எழுப்பாமல் இருக்க முடிவதில்லை.

உங்கள் பந்தியில் இந்த வரிகள்தான் பிரிந்துகிடக்கும் தமிழ் தேசிய இனம் இனியும் ஒருசேர விடாமல்

நஞ்சுக்கடலை கடைந்து எடுத்துவந்து ஊற்றி போதாக்குறைக்கு தொட்டுக்க ஊறுகாயும் போட்ட செயல். இன்னும் சொல்லப்போனால் மெர்சல் திரைப்படத்திற்கு விமர்சனம் என்ற போர்வையில் ஜோசப் விஜய் எப்படி தமிழனாக முடியும் என மதவாத கருத்தினை கக்கிய பாஜாக தேசிய செயலாளர் எச் ராஜாவை விட நீங்கள் பதிவு செய்த கருத்து இன்னும் அவமானகரமானது.

யார் அயலான் ?பிரபாகரன் என்ற மாவீரன் தமிழீழத்துக்கு மட்டும் சொந்தக்காரனா ? அவன் விடுதலை புலிகளுக்கு மட்டும் தலைவனா ? நீங்கள் இதைப்பதிவு செய்யும்போது நாங்கள் போராடியது தமிழ்த்தேசிய இனத்துக்காகவே என மாவீரர்களின் ஆயிரம் ஆயிரம் சான்றுகள் உங்கள் அகக்கண்ணுக்கு வரவில்லையா ? பிரபாகரன் போராடியது தமிழ் தேசிய இனத்திற்காக, 12 கோடி தமிழ் தேசிய இனத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்.பரந்து கிடக்கும் இப்பூமிப்பந்தில் ஒரு இனம் தனக்கான தேசத்தை அடைவதை விட உயர்ந்த லட்சியம் வேறு எதுவும் இருந்துவிட முடியாது. தமிழீழம் என்பது அரசியல் அல்ல அவசியம். இது தமிழ் தேசிய இனத்தின் போராட்டமாகவே கட்டமைக்கப்பட்டது என்பதற்கான வரலாற்று சான்றுகள் நம் கண் முன் விரிந்து கிடக்கிறது. அவற்றில், முதல் மாவீரர் தினத்தில் இந்தியாவில் தமிழர்களும் ஆரியர்களும் நீண்ட காலமாக போராடுகிறார்கள், தமிழர்கள் ஆரியர்களை நோக்கி படையெடுத்த வரலாறும் இருக்கிறது என்று பதிவு செய்த தலைவர், திராவிட நாடு தனி நாடு என்ற தமிழரின் கோரிக்கையை ஏற்காதவர்கள் நமது போராட்டத்தை ஆதரிப்பாளர்களா எனவும், நம் இனத்திற்கான தேசத்தை நாம் உருவாக்க வேண்டும் என்றும், இந்த இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்ட உலகிற்கு தமிழர் நாம் மாவீரர்களையே நினைவுகூரும் நாளை உருவாக்கிவிட்டோம் என்று தலைவர் தெளிவுறக்கூறுவது எந்த தேசிய இனத்தை பற்றி ? மற்றும் அன்று தொடங்கி இறுதி மாவீரர் தின உரைவரை ஒவ்வொரு வரிகளும் முன் தோன்றிய மூத்த தமிழுக்கும் தமிழ் தேசிய இனத்திற்கும் வலு சேர்ப்பதாகவே இருந்தது என்பதை அறியவில்லையா?

ராணுவ நலன் கருதி இதுவரை வெளியிடப்படாத தமிழ்நாட்டு மாவீரர்கள் எண்ணிக்கை உங்களுக்கு தெரியுமா ?. கடல் கரும்புலிகளாகக்கூட இந்த போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்ட வரலாற்றை புதுக்கோட்டை, கரூர் பகுதிகளுக்கு சென்று அறிந்துகொள்ள நீங்கள் தயாரா ?

வடக்கே ஒரிசா வரையிலும் கிழக்கில் ஜாவா, சுமத்ரா, மலேசியா வரையும், தெற்கே மாலத்தீவுகள் வரையிலும் பேரரசை நிறுவிய நம் பாட்டன் சோழன் தூக்கிய புலிக்கொடியை தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் ஏந்தியதுதான் ஏனோ ?, தமிழீழத்தில் சேரன்,சோழன், பாண்டிய வாணிபங்கள் பெயர் பெற காரணமாக இருந்த வரலாற்றை ஆராய்ந்ததுண்டா நீங்கள் ? கரங்களை இழந்த போராளிகளுக்கு வழிகாட்டியாக திகழ்ந்த லெப் கேணல் நவம் எனும் மாவீரனைப்பற்றி உங்கள் அயலான் கொள்கை என்ன சொல்கிறது ? மலையகத்தை பிறப்பிடமாக கொண்ட அண்ணன் நவத்தின் பெயரால் நவம் அறிவுக்கூடத்தை உருவாக்கிய தலைவர் வரலாற்று பிழை செய்துவிட்டாரோ ? ஏன் என்றால் உங்கள் கூற்றுப்படி மலையகத்தை பிறப்பிடமாகக்கொண்டவர்கள் இந்திய வம்சாவளிகள் தானே ? அவன் அயலான் தானே ?

1977 மற்றும் 1983 இனக்கலவரங்களின் போது தென்னிலங்கையின் இடப்பெயர்வுக்கு உள்ளான மலையகத்தமிழர்கள் வந்து குடியேறிய முறிகண்டி,கிளிநொச்சி, மற்றும் வன்னிப்பிரதேசத்தில் வசித்த மக்கள்தான் பிற்காலத்தில் தங்களை போராட்டத்தில் இணைத்துக்கொண்டு முள்ளிவாய்க்கால் வரைக்கும் மக்களோடு மக்களாகவும் போராளிகளாகவும் மடிந்தனர். இவர்களின் ஆணி வேர் தமிழ்நாடு தானே அப்படியானால் இவர்களையும் அயலான் என்ற ஒற்றை வார்த்தையால் சொல்லிவிடுவோம் இல்லையெனில் போராட்டத்தில் இவர்கள் பங்குபெறவே இல்லை என ஆவணப்படுத்துவோமா?

தமிழ் நாட்டு மீனவன் அவன் தமிழன் என்பதாலேயே புலிதான் என இலங்கை கடற்படை இதுவரை கொன்று குவித்த 538 பேரையும் இல்லையில்லை அவன் அயலான் அவனுக்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று உங்கள் அயலான் கொள்கையை ஒரு அறிக்கையிலாவது சொல்லியிருக்கலாமே ??' கணவனை இழந்து தந்தையை இழந்த அந்த தமிழ் குடும்பங்களுக்கு இந்த அவல நிலை வந்திருக்காதல்லவா?.

சரி தமிழ்நாட்டைச் சேர்ந்தவன் அயலான் அவன் பார்வையாளனாக இருக்கலாம் ஈழத்தின் பங்காளியாக மாறக் கூடாது என்ற உங்கள் கொள்கைப்பரப்புரையை ஏற்றுக்கொள்கிறோம், அப்படியென்றால் முத்துக்குமார் தீக்குளித்தபோது அவனது மரண வாக்கு மூலத்தில் விதியே விதியே என்செய் நினைத்திட்டாய் என் தமிழ் சாதியை என கேள்விகேட்டுக்கொண்டு சிறுகச்சிறுக தன் உயிரைத் தீயிட்டுக் கொளுத்தினானே, அவனது கடிதத்தில் கொட்டிக்கிடப்பது எந்தத் தேசியவாதம் ? அந்தக் கடிதத்தைப் முழுமையாக படித்தால் நம்மால் இப்படி ஒரு கருத்தை இலகுவாக பதிந்துவிடத்தான் முடியுமா ? அவன் ஒரு பத்திரிகையாளன் மற்றும் உதவி இயக்குனர் மன்னிக்கவும் உங்கள் அகராதியில் அயல் நாட்டு பத்திரிகையாளன். அவனையும் சேர்த்து 38 க்கும் மேற்பட்டோர் தீயில் ஆகுதியானார்களே

அப்போது எங்காவது உயர்ந்த கோபுரத்தில் ஏறி நீங்கள் அந்த செவிடர்களின் காதில் விழும்படி கத்தியிருக்கலாமே ?? இல்லையெனில் உங்கள் ஊடக தர்ம அம்பை எடுத்து எய்திருக்கலாமே ? ஏய் அயலானே உனக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை முட்டாள் தனமாக உயிரைக் கொடுக்காதே பின்னாளில் நான் வரலாற்றில் உன்னை அயலான் என்றுதான் பதிவு செய்வேன் என்று, பாவம் இது தெரியாமல் செத்தொழிந்தார்கள். ஒன்றை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள் கரும்புலிகளின் உயிர்க் கொடை எவ்வளவு அளப்பரியதோ அதனை விட ஒரு சாமானியன் தன் இனத்திற்கும் மொழிக்கும் ஆபத்து வரும்போது அதைத்தடுக்க உடம்பு முழுவதும் தீயை மூட்டி உயர்ந்த லட்சியத்திற்காக உயிர்துறப்பது மேல்.

ஜநாவில் நடைபெற்ற மனித உரிமை கூட்டத்தொடரில் தமிழகத்திலிருந்து நாம் தமிழர் சார்பாக மனித உரிமை செயல்பாட்டாளர்கள் எட்டுப்பேர் அடங்கிய குழு கலந்துகொண்டனர். அவர்கள் வருகை தந்தப்போது அயலவர்களே நீங்கள் எங்களுக்காக இங்கே வந்து போராட வேண்டாம் தமிழீழம் எங்களுக்கு மட்டும்தான் உரித்துடையது ,உங்களுக்கு அதை பெற்றுக்கொடுக்கும் அல்லது அதற்காக போராடும் உரிமை கூட இல்லை,நாங்கள் தமிழீழ மக்களே அன்றி தமிழர் எனும் தேசிய இனத்திற்குள் அடங்கமாட்டோம், இல்லை உங்களை அடக்கமாட்டோம் என்பதை புரியவைத்திருந்தால் அவர்களின் பணம், நேரம், காலம் எல்லாம் பாதுகாக்கப்பட்டிருக்குமே ?"

உங்கள் பகிர்வு

அரசியலில் நிலவும் வெற்றிடம் அல்லது பொருத்தமான செயற்பாடின்மை என்பது வேண்டத் தகாத சக்திகளின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதை நிரூபிப்பதைப் போன்று தாய்த் தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்கும் நோக்கோடு உருவாக்கப்பட்ட நாம் தமிழர் கட்சி தற்போது ஈழத் தமிழர்களை இலக்கு வைத்து பிரான்ஸ் மற்றும் சுவிஸ் நாட்டில் தனது கிளைகளை ஆரம்பித்துள்ளது. இத்தகைய கூட்டங்களில் அவர்கள் முன்வைக்கக் கூடிய கருத்துக்களும் விடுதலைப் புலிகள் அமைப்பை 'சற்றே விலகியிரும் பிள்ளாய்" எனக் கூறிவிட்டு அவர்களின் பணிகளை தாமே மேற்கொள்ள இருக்கிறோம் என்ற தொனியில் அமைந்துள்ளன

விடுதலை புலிகள் அமைப்பை சற்றே விலகியிருங்கள் என்ற தொனியில் நாம் தமிழர் சுவிட்சர்லாந்து தொடக்க விழாவில் இருந்ததாக தாங்கள் பதியவரும் கருத்து எந்த அடிப்படை ஆதாரமும் அற்றது . அவர்கள் மக்களைப் பார்த்து நாங்கள் உங்கள் பிள்ளைகள்,எம் மீது நம்பிக்கையிருந்தால் ஒன்றாய் பயணியுங்கள் இல்லை ஆதரவு தாருங்கள் இல்லை என்றால் வேடிக்கை பாருங்கள் நாங்கள் நிச்சயம் சாதிப்போம் என்றுதான் பதிவு செய்தார்கள். இந்த கூட்டத்தின் முழு ஒளிப்பதிவும் வலைத்தளங்களில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அனைவரும் பார்வையிடலாம். அப்படியிருக்கும்போது சாமானியனுக்குப் புரிந்த இந்த கருத்து உங்களுக்கு மட்டும் இன்னொரு பிரமிக்க வைக்கும் அர்த்தத்தில் புலப்படுவது எப்படி ? உங்கள் நோக்கம் விடுதலை புலிகள் அல்லது விடுதலை புலிகளின் அமைப்பினரோடு முரண்பாட்டினை ஏற்படுத்தி மோதல் போக்கை உருவாக்குவதா என்ற சந்தேகம் வலுக்கிறது. அத்தோடு நாம் தமிழர் வேண்டத்தகாத சக்தி என்று நீங்கள் குறிப்பிட அடிப்படை தேசத் துரோக காரணங்களை பட்டியலிடுங்கள்.

எங்குப் பிறப்பினும் தமிழன் தமிழனே
இங்குப் பிறப்பினும் அயலான் அயலானே

நாம் தமிழர் என்பது கட்சியல்ல அது ஒரு இனத்தின் அடையாளம்.

நாம் தமிழர் ஏன் அவசியம் ?

இனி தொடரும்.............

இனி கேள்வி கேற்போம் அயலானாக

ஜேர்மனியில் தரம், உத்தரவாத்துடன் நீண்டகாலமாக சேவையாற்றி வரும் தமிழ்ர் நிறுவனம்.

R. Ragunathan
Parkhof Str. 97
41836 Hückelhoven
Tel: 02433 90 32 82
Fax: 02433 90 32 81

ஆசியா சமுத்திரம்
Sittard Str. 21
41061 Mönchengladbach
Tel: 02161 9028388
Fax: 02161 9028399

TJB BROTHERS

SUN TV மற்றும் VIJAY TVயின் விநியோகிஸ்தர்

Bank Details: R.Ragunathan
IBAN: DE55 3907 0024 0474 1153 00 | BIC: DEUT DE DB 390

GENERALI



**Mathan Selvaratnam**
**Versicherungs - und Vorsorgeberater**

Monbijoustrasse 29, 3001 Bern
058 473 24 45 058 473 32 29
email : mathan.selvaratnam@generali.com
www.generali.ch

www.generali.ch
076 / 303 22 16

## PRIVATKUNDEN & FIRMENKUNDEN | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

**வருமானக்காப்புறுதி**
**EINKOMMENS - VERSICHERUNGEN**
வேலை இழக்க நேரிட்டால்
உங்கள் 100% வருமானத்தையும்
பெற்றுக்கொள்ள இலகுவழி

**சேமிப்புக்காப்புறுதி**
**SPARVERSICHERUNGEN**
சிறுவர்கள் முதல் பெரியர்கள்
வரை அனைவருக்குமானது

**ஆயுட்காப்புறுதி**
**LEBENSVERSICHERUNGEN**
உங்கள் குடும்பத்தின்
எதிர்காலத்தை பாதுகாத்திட

**வாகனக்காப்புறுதி**
**FAHRZEUGEVERSICHERUNGEN**
உங்கள் வாகனத்திற்கு
தேவையான
அனைத்து காப்புறுதிகளும்

**வீட்டுக்காப்புறுதி**
**HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN**
சொந்த, வாடகை வீடுகளிற்கு
அவசியமான காப்புறுதி

**சட்டக்காப்புறுதி**
**RECHTSSCHUTZVERSICHERUNG**
ஒவ்வொரு சட்டம் சார்ந்த
தேவைகளிற்கும்
அவசியமானது

**மருத்துவக்காப்புறுதி**
**KRANKEN & UNFALLVERSICHRUNGEN**
அனைத்து விதமான
மருத்தவ சேவைகளிற்கும்
தேவையான சிறந்த காப்புறுதி

எம்முடன் தொடர்பு கொண்டு
தேவையான ஆலோசனைகளை
இலவசமாக பெற்றுக்கொள்ளவும்



**வீட்டுக்கடன்**
**HYPOTHEKEN**
உங்கள் சொந்த
வீட்டுக்கனவை
நனவாக்கிட சிறந்த சேவை

சுவிஸ் நாட்டில்
அனைத்தின மக்களினதும்
நம்பிக்கைக்குரியதும் இலாபம்
தரவல்லதும் எமது நிறுவனம்

2

# பசுமை நிறைந்த நினைவுகள்...



டானியல் | புதுவை இரத்தினதுரை | நான்...

**வண்ணை தெய்வம்**

எனது வாலிபக் காலம். இ;பொழுது போல் அப்பொழுதும் கலைஞ் இலக்கியம்ஞ் என அலைந்து கொண்டிருந்த காலமதுஞ் இலக்கியச் சஞ்சிகை ஒன்று நடாத்த வேண்டும் என்ற ஒரு அவாவில் 'சாட்டை" என்றொரு சிற்றிதழை ஆரம்பித்தேன். யாழ்ப்பாணம் அச்சகத்தில்த்தான் புத்தகம் அச்சிடப்பட்டது. அதனருகில் யாழ்ப்பாணம் புத்தகசாலையும் இருந்ததனால் முற்போக்கு இலக்கிய நண்பர்கள் பலர் அடிக்கடி அங்கு வந்து செல்வது வழக்கம். அதில் அமரர் கே.டானியல் அவர்களும் ஒருவர்.

டனியல் அவகள் ஆரம்பத்திலேயே சொன்னார் 'தம்பி தெய்வம் இலக்கியப் புத்தகம் வெளியிடுறது சாதாரணமான விசயம் இல்லை. நாங்கள் கனபேர் சேர்ந்து ஆரம்பிச்சுஞ் ஏலாமல் கைவிட்டிட்டம்! இது உன்னால் முடியாத காரியம்! வேண்டாம் விட்டுவிடு என்று கூறினார். சரி பாப்பம் என்று ஒரு அசட்டுத் தைரியத்துடன்தான் சாட்டையை ஆரம்பித்தேன். (டானியல் அவர்களும் இன்னும் சிலரும் சேர்ந்து 'முற்போக்கு இலக்கிய வட்டம்" என ஒரு சங்கத்தை உருவாக்கி 'வசந்தம்" என்னும் இலக்கிய இதழை ஆரம்பித்து சில இதழ்களுடன் நின்றிருந்த நேரம் அது. அதன் நினைவாக டானியல் அவர்கள் தனது வீட்டிற்கு 'வசந்தம்" என்றே பெயர் வைத்திருந்தார்.)

'சாட்டை" அச்சாகிக்கொண்டிருந்த காலத்தில் யாழ்ப்பாணம் புத்தகசாலைக்கு அடிக்கடி ஒரு இழைஞர் வந்து டானியல் அவர்களுடன் கதைத்து விட்டுச் செல்வார். அவர் யாரென விசாரித்ததற்கு 'இவர் ஒரு சிறந்த கவிஞர்! முற்போக்கு சிந்தனையுடையவர். இவருடைய கவிதைகள் பலரும் ரசிக்கும்படியாக ஜனரஞ்சகமாக இருக்கின்றது. அவைகளை தொகுத்து புத்தகமாக்கும் வசதி அவரிடமில்லை நான்தான் அவருடைய கவிதைகளைப் புத்தகமாக்கிக் கொண்டிருக்கின்றேன்" என்றார். அந்தப் புத்தகம்தான் 'வானம் சிவக்கின்றது."

'சாட்டை" முதலாவது இதழில் டானியல் அவர்களும் ;. 'சாஹித்தியன்" என்னும் புனை பெயரில் ஒரு சிறு

கதை எழுதியிருந்தார். (அப்பொழுது அவருக்கு சாஹித்தய மண்டல விருது கிடைக்கவில்லை) எழுத்தாளர் 'கந்தன் கருணை" நாடகப் புகழ் ரகுநாதன் அவர்கள் சாட்டைக்கு சிறப்பாசிரியராக இருந்து வழி நடத்தினார். (இப்பொழுது இவர் கனடாவில் வாழ்கின்றார்) முதலாவது இதழ் வெளிவந்துவிட்டது. மாதாந்த இதழ் என்பதனால் வெளியீட்டு விழா செய்யும் எண்ணமெல்லாம் எனக்கு இருக்கவில்லை. டானியல் அவர்களின் தூண்டுதலால் தோழர். மு.கார்த்திகேசன் அவர்களின்; தலைமைதாங்க எனது இல்லத்திலேயே வெளியீட்டு விழாவும் நடைபெற்றது. வெளியீட்டு விழாச் செய்தி 'தொழிலாழி" பத்திரிகையில் முதல்ப் பக்கத்தில் பிரசுரமானது ஆனாலும் டானியல் அவர்களுக்கு இது திருப்தியாக இருக்கவில்லை.

புதுவை இரத்தினதுரையின் 'வானம் சிவக்கின்றது" நாலுக்கு ஒரு விமர்சன அரங்கை ஏற்பாடு செய்து கொண்டிருந்த டானியல் அவர்கள் அதே அரங்கில் சாட்டையையும் இணைத்து இரண்டு புத்தககங்களுக்குமான விமர்சன அரங்காக யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் மிகச் சிறப்பாக அந்த விழாவை நடாத்தினார்.

அதன் பின்னர் காலம் எங்கள் ஒவ்வொருவரையும் திசைக்கொரு பக்கமாக துரத்திவிட்டது. ஆனாலும் பசுமை நிறைந்த அந்த நினைவுகள் பச்சை மரத்தில் அடித்த ஆணியைப்போல இன்னமும் ஈரம் காயால் அப்படியே இருக்கின்றது.

நினைவுகள் இன்னும் வரும்
வண்ணை தெய்வம்



ஜேர்மனியில் இருந்து கொழும்புக்கான சிறப்பு பயணச்சலுகை!

**Direct Booking Nr.**
**0176 21 68 21 49**

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

CENTURY
TRAVELS



**Transport Service**
nach Frankfurt



**CENTURY TRAVELS GmbH**

nach Colombo
**ab 499€**



**Ram Nishanthan**
Dip. T.T.Mgt-IATA/UFTAA Montreal
0176 21 68 21 49

GUARANTEED BEST PRICE

**Web: www.centurytravels.de | eMail: info@centurytravels.de**

**Hauptsitz:**
Steeler Str. 150
45139 Essen
Tel.: 0201 64 888 225

**Niederlassung:**
Rheinische Str. 29
44137 Dortmund
Tel.: 0231 55 74 319
or 0231 58 96 557
Fax: 0231 58 44 665

**Sri Lanka:**
No - 82,
New Chetty Street
Colombo 13
Tel.: 011 2 322 838

# சகல நாடுகளுக்குமான விமான பிரயாணச் சீட்டுகள், சுற்றுலா ஒழுங்குகளை மலிவாகவும் நேர்த்தியாகவும் செய்து கொள்ள




- இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளுக்கு விசேட விலையில் விமானப்பயணச்சீட்டுக்களையும் சுற்றுலா ஏற்பாடுகளையும் செய்து தருகிறோம்
- முன்னணி நிறுவனங்களுடன் நேரடி தொடர்புகளை பேணி நாளாந்த விலைச் சலுகைகளை பெற்று உங்கள் பயணத்தை உங்கள் விருப்பப்படியே அனைத்து வசதிகளுடனும் அமைத்து தருகிறோம்
- இலவச ஆலோசனை, தன்னிகரற்ற வாடிக்கயாளர் சேவை

**நம்பிக்கை | தரம் | மலிவு | சிறந்த மக்கள் சேவை**

KTS

## KRISH TOURS & TRAVELS AG, ZURICH

சுவிஸ் மற்றும் சர்வதேச தர நிர்ணய நிறுவனங்களில் அங்கத்துவம் பெற்றது

REISEGARANTIE | SRV FSV Schweizer Reise-Verband, Fédération Suisse du Voyage, Federazione Svizzera di Viaggi | hweiz Tourismus. Mitglied | IATA Accredited Agent

KRISH TOURS & TRAVELS AG
Waisenhausstrasse 5, 8001 Zürich

Phone: 044 808 98 00
Email : info@ktsswiss.ch

Monday - Friday: 09:00h - 19:00h
Saturday: 09:00h - 16:00h

**Call: 044 808 98 00 | www.ktsswiss.ch**

*Preise inkl. Taxen und Zuschläge in der günstigten Buchnungsklasse

Lyca TV

## உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்

ஒருவருட இணைப்புச் சந்தா

**€69**

SET TOP BOX INCLUDED

புதுப்பித்தல்

**€49**

14 மாதங்கள்



LycaTV App ஐ Download செய்து பார்வையிடலாம்

ஒரு மாதச் சந்தா **€4.99** மட்டுமே

Google play · App Store · tv · Roku · AirPlay · chromecast · Samsung SMART TV · LG Smart TV · androidtv · amazon fireTV · kindle fire · XBOX

50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

விஜய் · ZEE தமிழ் · KTV · SUN MUSIC · Athavan TV · JAYA TV HD · Lyca Classic

7000க்கும் அதிகமான TAMIL & HINDI திரைப்படங்கள்



FRANCE
036 967 2151

GERMANY
069 1200 7102

FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.

www.lycatv.